உ

கடவுள் துணை.

இயமதண்டனை என்னும்

# பிரபஞ்ச பாவபுண்ணியம்.

இது

சி. விஸ்வநாத முதலியாரால்

ஏட்டுப் பிரதியைக்கொண்டு எழுதப்பட்டது.

கோ. பெருமாள் முதலியாரால்,

சென்னை

பாலு கமலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

இதன் விலை அணா 0-8-0.] [வி. பி. சார்ஜ் 0-2-0.

Registered Copy Right.

No. 4.



திருக்கைலாயம்.

உ

கடவுள் துணை.

# பிரபஞ்ச பாவ புண்ணியம்.

## விநாயகர் காப்பு.

### விருத்தம்.

சீர்மருவு மானிடர்தம் ஜென்மந்தன்னில்
செய்யுமோர் நல்வினை தீவினை கடம்மை
தார்மருவு முன்னோர்கள் தவறிலாத
சகல நூலாராய்ந்து தானொன்றாக்கி
பார்மருவு பிரபஞ்ச பாவ புண்ணியம்
பாரறிய பெயராக்கி பாங்கதாகக்
கார்மருவு செந்தமிழில் கதையாய்ச் சொல்ல
கந்தருக்கு முன்னவனின் கழலே காப்பு.

இப்பூமண்டலத்தின்கண் அம்போருகாசனனானபிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எண்பத்தி நான்குலக்ஷம் ஜீவராசிகளில் (துர்லபம் மானுஷ்யம் பிராப்யம் தத்ராபிநரவிக்ரகம்) என்பதுபோல் மானிடராய்ப்பிறப்பது அரிது, அதில் ஸ்திரீகளாய்ப்பிறக்காமல் புருடராய்ப்பிறப்பதரிது, அதிலும் கூன், குருடு, செவிடு, ஊமைமுதலான அங்கஹீனங்களின்றி பிறப்பதரிது. அப்படி அங்கஹீனங்களின்றி பிறந்தாலும் பிராம்மணர்களாய்ப்பிறப்பதேசிரேஷ்டம் அப்படி பிறந்தாலும் வேதம்படித்தவனே சிரேஷ்டன் அப்படி வேதம படித்தவர்களில் இந்திரிய நிக்ரஹணம் பண்ணினவனே சிரேஷ்டன், அப்படி இந்திரிய நிக்ரஹணம் பண்ணினவர்களில் யக்ஞம் செய்தவனே சிரேஷ்டன். அப்படி யக்ஞம் செய்தவர்களில் பகவானுக்கு ஊழியஞ் செய்கிறவனே சிரேஷ்டன்.

(வாள் புராணம்.)

"கிருதேது பலாம் மத்யே
த்ரேதாயாம் யா[illegible]மோவச
துவாபரே[illegible]தான[illegible]ர்மஞ்ச
கலௌதத்தரி கீர்த்தனாத்"

MADRAS

(என்பதுபோல்) கிருதயுகத்தில் தவஞ்செய்தும், திரேதாயுகத்தில் யாகாதிகர்மங்களைச்செய்தும், துவாபர யுகத்தில் தானதர்மங்களைச்செய்தும், கலியுகத்தில் கீர்த்தனைகளைப்பாடியும் முக்தியடைந்ததாய் அனேக புராணேதிஹாஸங்களாற் றெரிந்திருந்தும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்னும் சதுர்வித புருஷார்த்தங்களை நாம் அனுஷ்டிக்காமல் ஜீவபிராணிகளிடத்தில், தயை, க[illegible]வு இறக்கம், என்பது கொஞ்சமேனுமில்லாது அன்யாயமாய் பாபத்துக்கு ஹேதுவான பாபகர்மங்களையேசெய்து வியர்த்தமாய் வாழ்நாளை வீழ்நாளாக்கி இன்பவீட்டையடையாமல் துன்பத்தையே செய்து கன்மத்தை தேடிக்கொண்டு ஒருபோதும் சுகத்தையடையாமல் வாடிதவிக்கும் இம்மானிட ஜன்மத்தை கடைத்தேற்றுஞ் சில உபாயங்களுண்டு. அதாவது பகவானால் பூமியில் மானிடனாய்பிறந்த நமக்கு சகல இந்திரியங்களும் அவயவங்களும் கைவசப்பட்டிருக்கும்போதே கடவுளை சிரத்தினால் வணங்கியும், நேத்திரங்களினால் சேவித்தும், வாயினாற் பாடியும், காதுகளினால் அவன் கதைகளை கேட்டும்,கைகளினால் அர்ச்சித்தும், மனதினால் தியானித்தும்,பாதங்களினால் அவன் ஆலயங்களுக்குப்போய் தெரிசித்தும் காலத்தை வியர்த்தமாக்காமல்.

(வாள் புராணம்.)

"பாபிநாம கர்மஹீனானும்
அலஸாநாம் துராத்மந:
ஜீவனம் ஹரிநாமஸ்ய
கீர்த்தனம் ஸ்ரேயோபவேத்"

(என்பதுபோல்) பாபியாயினும்,கர்மஹீனனாயினும் துஷ்டனாயினும், துராத்மாவாயினும் பகவந்நாமத்தை பஜித்தால் ஜீவனமும், ஸ்ரேயமும், கொடுக்கும் இதனை

ஞானசாரம்.

"விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டுமிதமல்லால்
திருப்பொலிந்தமார்பனருள் செய்யான்—நெருப்பை
விடாதேகுழவிவிழ வருந்தினாலும்
தடாதேயொழியுமோதாய்"

(என்பதுபோல்) தீயில் விழும் தன் குழந்தையை தாயானவள் எப்படி விழவொட்டாமல் பாதுகாப்பாளோ அதுபோல் பகவான் தன்னை நம்பின பக்தனை பாபத்திற் விழவொட்டாது பாதுகாத்துக் கொள்வார் ஆகையால்,

பாரத ஸ்லோகம்.

"வர்ஷாபாாதத்த மஷ்டௌப்ரிய தேதிமாசான்
நிதார்த்தமஷ்டௌ திவசம்யதேத
வார்த்திக்ய ஹேதோர் வயசாந்நவேன
பரத்ரஹேதௌ யிஹஜன்மநாச:"

(என்பது போல்) மழைகாலத்திற்கு வேண்டிய சாமக்கிரியை களை வெய்யற்காலத்திலும், இராத்திரிகாலத்தில் வேண்டியவைகளை பகல்காலத்திலும், விருத்தாப்பிய காலத்தில் கஷ்டமின்றி யுண்பதற் குநல்லயௌவனகாலத்திலும், எப்படிசேகரித்துக்கொள்வார்களோ அதுபோல புனர் ஜென்மமில்லாத பெருவாழ்வை யடையவேண்டி யிருந்தால் ஈஸ்வரநாமத்தை துதித்து ஜன்மாந்திரங்களிற் செய்ம் பாவங்களைத் துலைத்து புண்ணியத்தை ஆர்ஜிக்கவேண்டியது.

தற்காலத்தில் ஜனங்கள் திரவியத்தை ஆர்ஜிப்பதில் மிக ஆவலு டையவர்களா யிருக்கின்றார்களே தவிர பகவானைபஜித்து புண்ணியங் களை யடையும் விதத்தை தேடுகிறதில்லை. காயம் அநித்யம் நாம் உலகத்தில் நெடுநாளைக்கு ஜீவித்திருப்பது நிட்சயமல்ல. இதனை,

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்,

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபரிதான்
தாழாதறம் செய்மின் றடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுறவாணின் திருக்கேதாரமென்னீரே"

(என்பது போல்) உலகத்திலே நீடித்திருப்பது துர்லபமென் றும்நாளை மண்ணில் இந்த சரீரம் சேர்வது நிச்சயமென்றும், ஈஸ்வர னுடைய நாமத்தைபஜித்தால் மறுஜென்மம் கிடைக்காதென்றும் தெரிகின்றது. ஆனால் மனிதர்களுக்கு வேதத்தில் சொன்ன பிரகாரம் நூறுவயது இருப்பதனாலே சாவகாசமாய் 98-99-வது வயதிலிருந்து பக்திபண்ணினாற்போராதா வென்றாலோ இதனை

திராவிட வேதத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார்
திருமாலை என்னும் பிரபந்தத்தில்.

"வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம்பு குவரேலும்
பாதியுமுறங்கிப்போகும் நின்றதில்பதினையாண்டு
பேதைபாலகனதாகும் பிணிபசிமூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேனரங்கமாநகருளானே"

(என்பதுபோல்) வேதவிதியின்படி பகவான் நமக்கு விதித்த வயது நூற்றென்றிருந்தபோதிலும் அதில்பாதி (50-வருடம்) இராத்திரி தூக்கத்திலும், பதினைந்து வருடம் விளையாட்டு விஷயத்திலும், இருபத்தைந்து வருடம் நல்லயௌவனகாலமானதால் ஸ்திரீகளுடைய போகத்திலும்,பதினைந்துவருடம் வியாதியினாலே பீடிக்கப்பட்டும், பசியினால் மெலிந்தும். இருபத்தைந்துவருடம் விருத்தாப்பியதிசையடைந்தும், கண்ணில் பீளைசேரவும் கண்தெரியாமல் தடுமாறியும் பயித்தியம்பிடித்துப் கோழைதள்ள இருமியும் இத்தியாதிஅவஸ்தைகளிருப்பதால் நம்முடையபுத்தி சுவாதீனத்திலிருக்கும்போதே ஈஸ்வரனை பஜிக்கவேண்டியது.

நமக்கு அந்திய காலம்வந்து பரலோகம் போகும்போது ஏதாகிலும் நம்முடன் வருகின்றதா? இல்லை. இதனை.

பட்டினத்தார் பாடல்.

"அத்தமும் வாழ்வு மகத்துமட்டேவிழியம்பொழுக
மெத்தியமாதரும்வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத்தழும் மைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே"

திரவியம் பூமியின் மேல்நின்றுவிடுகின்றது, பாரியாள் தெருவாயற்படி வரையில்வருகிறாள், புத்திரர்கள் பந்துக்கள் சிநேகிதர்கள் சுடுமயானம் வரையில் வருகிறார்கள், நம்மைப்பற்றி தொடர்ந்து வருவதாகியபுண்ணிய பாபங்களே யொழியவேறொன்றும் நமக்கு துணைவருவதில்லை. ஆகையால் ஈஸ்வரநாமங்களை பக்தி செய்தால் இகத்தில் சுகமும் பரத்தில் முத்தியும் கிடைக்கும். பக்தி யென்பது எத்தனைவிதங்க ளென்றால்? (ஸ்ரவணம், கீர்த்தனம், விஷ்ணோத்ஸ்மரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம்) அதாவது கேட்பதும், பாடுவதும், ஸ்மரிப்பதும், ஊழியஞ்செய்வதும், அர்ச்சிப்பதும், நமஸ்கரிப்பதும், கைகட்டிவாய்பொத்தி நிற்பதும், மனதிற்குள்ளே அந்த பகவானை யடக்கிமனனஞ்செய்வதுமாகிய ஒன்பதுவிதங்களான பக்திகளிருக்கின்றன. இவ்வொன்பதுவித பக்திகளையும் செய்தவர்கள் யாரென்றால் பரீக்ஷித்து,சுகமஹாரிஷி, பிரகலாதன், லக்ஷ்மி, பிருதுசக்ரவர்த்தி,அக்ரூரன்,ஆஞ்சநேயன், அர்ச்சுனன்,மாபலீசக்ரவர்த்தி, இந்த ஒன்பது பேர்களும் மேற்சொன்ன ஒன்பதுவிதங்களான பக்தி

No. 1.



பாவங்களைச்செய்தவர்கள் அடையும் தண்டனை.

(LITHO. MEENAKSHIAMMAH, PRESS, MYLAPORE. 24-9. 1909.)

களைபண்ணினார்கள். இன்னும் வால்லாஹ்ற கோளியென்ற வேடுவன் துருவன், கஜேந்திரன், விதுரன், உக்கிரசேனன், குப்ஜை, குசேலன், முதலான அனேக பக்தர்கள் பகவானுடைய நாமத்தை துதித்து முக்தியடைந்ததற்கு காரணம் இவர்கள்செய்த பக்தியேயல்லவா?

இதனால் சகல பாபங்களும்போம் சகலபுண்ணியங்களும் வரும். இதனை வேதங்களும், ரிஷிகளும், ஆழ்வாராசாரியர்களும் அனுஷ்டானம்பண்ணினார்கள். த்ரௌபதிக்கு ஆபத்காலத்தில் புடவை சுரந்த திரு நாமமிதுவே என்பதாம் இதனை.

திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி.

"குலந்தரும்செல்வந்தந்திடுமடியார்படுதுயராயினவெல்லாம்
நிலந்தருஞ்செய்யும் நீள்விசும்பருளு மருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும்மற்றுந்தந்திடும் பெற்றதாயினுமாயினசெய்யும்
நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன் நாராயணவென்னும்நாமம்"

இந்த நாமமானது பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்னு இந்நான்கு குலங்களைக்காட்டிலும் உயர்ந்தகுலமான பிரபந்நஜனகுலத்தில் உதிக்கச்செய்யும். நல்ல ஐஸ்வரியங்களை கொடுக்கும். தன்னை துதித்த பக்தஜனங்கள் படுந்துன்பங்களை அடியோடுபோக்கடிக்கும். நெடுங்காலம் இவ்வுலகத்தில் சுகஜீவியாய் வாழச்செய்யும். கிருபையோடுங்கூடபெருநிலமென்று சொல்லப்பட்ட புனராவர்த்தி பூலோகத்தில் உதிக்காதபதத்தைகொடுக்கும். இன்னும் நமக்கு ஏதேது வேண்டுமோ அவைகளையெல்லாம் கொடுத்துரக்ஷிக்கும். ஆகையால்நாம் அந்த பகவானுடைய சரணங்களை அனுதினமும் இடைவிடாமல் பஜிக்கவேண்டியது. அப்படி இடைவிடாமல் பஜித்தவர்கள் அடையும் புண்ணியமும், பக்திசெய்யாதவர்கள் அடையும் பாவமும் பின்வரும் சரித்திரத்தால் அறிந்துக்கொள்ளவும்.

## தீவினைத்தண்டனைப்படலம்.

கலிவிருத்தம்.

மகிதலமதின் மானிடர்யுற்று
சுகித்தபின்னர் சூழ்ந்தீவினையதைத்
தகித்திடச்செய்யுந் தண்டனைபடலமாய்ப்
பகனுவாமினி புவியோரறியவே

வசனம்.

சீர் பெற்றோங்கிய இப்பூவுலகின்கண் மானிடராகப் பிறந்த ஜீவர்கள் யாதுகாரணத்தால் பிறந்து இறந்து சுவர்க்க நரகங்களை அடைகின்றனர். எந்தபாவத்தால் பிரேத ஜென்மமடைகின்றனர், எந்த புண்ணியத்தால் அதை நீக்குகின்றனர். எக்கருமத்தால் நிரதிசய இன்பவீடாகிய உலகையெய்துவர். முன்செய்த பாவங்களை மரணகாலத்தில் எதனால் நீக்கி நல்லுலகுபெறுவர். பாபங்களெல்லாம் எக்கருமத்தால் நிவர்த்தியாகும். மரிக்குங்காலத்தில் யாவரை நினைத்தால் நற்கதி கிடைக்கும் எனில், பிரபுவும் நாரத்தில் அயனம் செய்கின்றவனும், சாரசமுகம் கொள்கிறவனும் எல்லாருடைய மனத்திலும் உறைந்து யாவற்றையும் பார்க்கின்றவனும், ஜகம் செயல்களுக்கும் காரணமாகின்றவனும் ஆகிய கடவுளின், கருணையாலருளிய உலகில் இரகசியமா யுள்ளனவாம்.

அதாவது மானிடராய்ப். பிறந்தபேர்கள், பலநாள் வாழ்ந்தாலும் ஒரு நாளில் இறப்பது சத்தியம் என்பதை ஒருசேதனன் ஆயினும் நினைக்கின்றானா இலன், பிறந்த பின்பு இறத்தல் உண்மையென்று நினைக்கின்றவன் கோடியில் ஒருவன் உளனோ இலனோ, உயிர்கவரும் கூற்றுவன் ஒருவனுளன் என்றும் அந்தியகாலத்தில் அவன் கையில் அகப்பட வேண்டுமென்றும், அடுத்தடுத்து நினைத்துத் திடுக்கிடுகின்றவன் யாவனோ அவன் ஒருவனே. போயிற்று வந்து போயிற்று என்றும் பகவானை பஜிக்காது வாளுள் வீணாகின்றதே. எமன் வந்து விடுவானே ஐயோ என்ன செய்வேன் என்று அஞ்சி நல்லறம் செய்வான் பிரேதஜன்மமென்பது பூதப்பிரேத பைசாசாதி ஜென்மங்களி லொன்றாம்.

ஆயினும் ஒருவன் தனக்குரிய கர்மங்களை செய்வானேல். அக்கருமங்களே அவனைக்காப்பாற்றும்.

இன்னமரபில் பிறந்தவனுக்கு இன்னகர்மங்கள் தாம் உளதென்று வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆதலால் அவற்றை யுணர்ந்து தான் பிறந்தகுலத்திற்கு ஒருவனவாகிய கருமங்களை தவிர்த்து, மேலினும் கீழினும் செல்லலாம் உரியகர்மங்களையே யாவன் புரிகின்றானோ அவனே எவ்விதத்திலும் மேன்மைப்பெறுவன்.

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்றுநான்கு வருணத்தார் உளர். அவர்களில் பிராமணருக்கு தானம் கொடுத்தலும் வாங்கலும், யாகஞ்செய்தலும், செய்ய உரியவர்கட்கு செய்வித்தலும் வேதமோதுதலும் ஓத உரியவர்களுக்கு ஓதிவித்தலும் ஆகிய உகை கர்மங்களுளவாம்

க்ஷத்திரியருக்கும், வைசியருக்கும் தானங்கொடுத்தலும், யாகம் செய்தலும், வேதமோதலும், ஆகிய மூன்று கருமங்கள் உருதியாம்,

அன்றியும் சூத்திரருக்கு முதல் வருணத்தோர் ஏவும் தொழில்களைப் பணிந்து செய்தலே அவர்கட்கு உரியதாகும்.

ஆயினும் அவரவர் மரபிற்குறிய ஒழுக்கத்தில் நிற்றலே அவரவருக்குப் பெரியதவமாகும்

அந்ததவத்தில் வழாது ஒழுகுமவர்களே அவரவர் போகமும் யோகமும் ஒருங்கெய்தி நெடுநாள் வாழ்ந்து இறுதியில் நல்லகு அடைவர்.

ஆகையால் யாவரும் தத்தமக்குரிய ஒழுக்கத்தில் நிற்பதுவே சிறப்பாகும்.

யாவருயினும் எப்பொருளையும் விழையலாகாது,

எத்தன்மைய மாதவத்தையும் புரியும் அந்த இச்சை கொடுத்துவிடும். அவாவை யொழித்தவரே பெரறி ஞராகுவார்.

ஆயினும் உலகில் எண்பத்து நாலுலக்ஷம் யோனி பேதங்களுண்டு. அவை அண்டசம், உற்பிஜம், சராயுஜம், சுவேதஜம், என்ற நான்கு பிரகாரமாய் உள, அந்த நான்கு வகுப்பில் முட்டையினின்றும் இருபத்தோறு லக்ஷம் பறவை முதலியவைகளும்,

பூமியினின்று இருபத்தோரு லக்ஷம் மரம்முதலியவைகளும்,

கருப்பையினின்றும் யிருபத்தோரு லக்ஷம் மனிதர் முதலானவர்களும்.

வேர்வை யினின்றும் இருபத்தோரு லக்ஷம் கொசு முதலியவைகளும், தோன்றுவனவாகும்.

ஆயினும் ஜென்மங்களில் மானிட ஜென்மம் கிடைப்பது அறிதினும் அறிது, அச்சென்மமே புண்ணிய ஜென்மமாகும்.

எப்படியெனில், ஒருபொருளைப் பார்க்கக் கண்ணும், சொற்களைக் கேட்கச் செவியும், இனிமையை உணர நாவும், நாற்றமறிய நாசியும், காமவின்பத்துக்கு மெய்யும், நன்மை, தீமைகளைப் பகுத்துணர உணர்வும் உள. ஆனபடியால் மானிடஜென்மமே சிறப்புடையதாகும்.

அம்மானிட ஜென்மத்தில் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்று நான்கு ஜாதியருளர்.

அன்றியும் ஆடையொலிக்கும் வண்ணாரும், தோல் தைப்போரும், நாட்டியமாடுவோரும், ஓடம் விடுவோரும், கம்மாளரும் நுளை ரெனப்படும் (அதாவது நெய்த நிலமாக்கள்) என்றறியவும்.

அந்நெய்தநில மக்களும், வேடரும் ஆகிய இவர்கள் சூத்திர ஜாதியாரினும் தாழ்ந்த ஜாதியவர்களென்றறியவும்.

உணவும் உறக்கமும் அச்சமும் புணப்புமாகிய இவைகள் எல்லாப் பிராணிகளுக்கும் இயற்கையாய் உள்ளனவாகும்.

அதில் ஞானமாத்திரம் எல்லாவுயிர்களுக்கும் பொதுவென்று சொல்லப்படும்.

சிலதேசங்களில் மானிடர் ஒரே காலுடையவராயும், இரண்டு காலுடையவராயும், அநேக கால்களுடையவராயும், இருக்கின்றனர்.

கிருஷ்ணசார மென்கிற மான் எந்த பூமியில் இருக்கின்றதோ அப்பூமியே புண்ணியபூமியாகும்.

அப்பூமியில் தேவர்களையும், மகருஷிகளையும், பிதுர்க்களையும் பூசிப்போருக்கு அதிகநன்மை யுண்டாகும்.

அப்புண்ணிய பூமியில் முப்பத்து முக்கோடி தேவர்களும் எப்போதும் சந்நிதி கொண்டிருப்பார்கள் என்றறியவும்.

காண்பதற்குப் பூதப்பிரேத பைசாச ஜாதியுள்ளதேகம் பெற்ற ஜீவர் சிரேஷ்டர்

அச்சிரேஷ்டராகி அச்சீவருள் பசு பட்சி ஜென்ம மடைந்து சிறிது அறிவினால் ஜீவிப்போர் சிரேஷ்ட்டர் களாவர்.

ஆயினும் அவர்களுக்குள் மனிதர் சிரேஷ்டர் அம்மனிதருக்குள் பிராமணர் மிகசிரேஷ்டர்; அப்பிராமணருக்குள் வேதசாஸ்திரமுணர்ந்தவர் சிரேஷ்டர்.

அன்றியும் அவருள் அப்படியோ இப்படியோ என்று ஐயப்படாது உபசாரவாழ்க்கைநீக்கி வேதார்த்தங்களை உள்ளபடி உணர்ந்தவர் சிரேஷ்டர். அப்படி உணர்ந்த வழியிலேயே நிற்பவர் உணர்ந்தவரினும் சிரேஷ்டர். அவர்களுக்குள் பிரமஞானமடைந்தவரே மிகவும் சிரேஷ்டராவார். ஆயினும் அநேககோடி ஜென்மங்களாலே பெறப்படுவனவாகிய சுவர்க்க மோக்ஷங்களை அடைவதற்கு மானிட ஜென்மமே காரணமாகின்றது. ஆதலால் அச்சென்மத்தை அடைந்து நல்வினை செய்து நல்லுலகைப்பெறாமல் நரகம் புகதீவினையே புரிந்து அச்சென்மத்தை வியர்த்தமாக்குபவரே உலகில் பலருளர்.

புண்ணிய ஜென்மத்தால் அடைந்த மானிட ஜென்மம்பெறாதோர் தமக்குத்தாமே வஞ்சனை புரிவோராவர், ஆகினும் மண்ணாசை பெண்ணாசை பொருளாசை ஆகிய இவற்றிலேயே தலைப்பட்டுத் தர்மங்களை அறியாது உழல்பவன் யாவனோ அவன் மிருகங்களோடு ஒப்பானவனே யன்றி, நன் மக்களோடு சேரான். அவனினும் தீயன் ஒருவனும் இல்லையென வறிவாய். அறியினும்ஆசைப் பெருக்கத்தினாலே பிணிக்கப்பட்ட மனமுடையான் இவ்வளவு அவ்வளவு என்பது இல்லாமல் யாவும் நிரம்பக் கிடைத்தாலும் இன்னம் வேண்டும் வேண்டுமென்றே யலைவானே யல்லாமல் கிடைத்த மட்டில் போதுமென்று திருப்தியடையான்.

ஒருவன் நூறு பொன் பெற்றானேல், அவன் திருப்தியடையாமல் ஆயிரம் பொன்னுக்கு இச்சிப்பான், ஆயிரம் பொன் அடைந்தவன் லக்ஷம் பொன்னுக்கு இச்சை கொள்வான், லக்ஷம் பொன் அடைந்தவன் கோடிப் பொன்னைப் பெற இச்சிப்பான், கோடிப் பொன் அடைந்தவன் ஒரு தேசத்தை விரும்புவான். தேசத்தை அடைந்து அரசனாயினவன் புவிமுழுதும் ஆள சக்கிரவர்த்தியாக விரும்புகின்றான், சக்கிரவர்த்தியானவன் தேவனாக விரும்புகின்றான், தேவர்களோ இந்திரனாக விரும்புகின்றார்கள். அவ்வித இச்சை மேலும் மேலும் பெருகுமேயன்றி ஒருவருக்கும் அது ஒழியாது என்றறியவும். அப்படி அந்த இச்சையை ஒழிக்காதவன் கண்டவரை எல்லாம் கரங்குவித்து இரந்து அவர்களால் இகழப்பட்டு நரகத்துக்கே ஆளாவானென்றறியவும். ஆயினும் கொடுங்கேடு யாவும் ஒருவ னெய்துவதற்கு அவாவே காரணம் என்று அதனை வேரறுத்த மகான்கள் யாவராலும் போற்றப்பட்டு அந்திய காலத்தில் சுவர்க்க

லோகம் சார்வார்களென்றறியவும். சாரினும் புலன் சென்ற வழி மௌனத்தை விடாது அடக்கிச் சுதந்தரனாய் யாவன் இருக்கிறானோ அவனே எல்லா நலங்களுக்கும் உரியவனாவான்.

அவ்வாறு சுதந்தரமில்லான் பாலியப் பருவத்தில் தந்தைதாயாரது சொற்கேட்பான், யௌவன பருவத்தில் மோகஸ்திரீக்கு மூதேவியாகிய தன் தேவியின்று கட்டளை யிடுதலைப் பணிந்து தலைமேற்கொள்வன் வார்த்தவ்வியப் பருவத்தில் புத்திரர் பௌத்திரர் சினந்து இழப்பினமே வாய்புதைத்து வெறுமனே கிடப்பா யென்று அதட்டிச் சொல்லுகின்ற மொழியைக் கேட்டுப் பொறுமிக்கிடைப்பான். ஆதலால் கற்றுணர்ந்த ஞானமில்லான் பெண்களைப் போலவே என்றுஞ் சுதந்தர மில்லாதவனே யாகும். ஆகினும் கலைமான்கள் புள்ளாங்குழலின் இசையைக்கேட்டு இருப்பிடம் விட்டுப்பேராது இருந்து வேடனால் பிடிக்கப்படுதலால் அக்கலைமான்கள் சாலால் கெடுவதாகும், மதயானையானது புணர்ச்சியை விழைந்து பெண் யானையைத் தொடர்ந்து சென்று யானைப்பாகர்கள் தோண்டிய குழியில் விழுதலால் அவ்வானை பரிச இன்பத்தால் கெடுவதாகும் என்றறியவும். விட்டிற்பூச்சி விளக்கைக்கண்டு நல்ல கனி என்று நினைத்து வீழ்ந்து அவ்விளக்கில் மாய்கின்றமையால் அப்பூச்சிகள் கண்ணால் கெடுவதாகும். வண்டுகள் உண்ணக்கருதி இரவில் தேனைச் சேர்த்து அதில் இருக்கும்போது நறுந்தேன் கொள்பவன் தீயால் கொளுத்துகின்றமையால் அவ்வண்டு நாவால் கெடுவதாகும்.

ஆறு, குளம், ஏறி, மடுகு, முதலிய விடங்களில் வாசஞ் செய்யும்படியான மீன் தூண்டில் முள் முனையில் கோர்த்த இறைச்சியின் நாற்றத்தை விரும்பி உயிர் நீத்துவதால் அம்மீன் நாசியால் கெடுவதாகும்.

அங்ஙனம் ஓர் இந்திரியத்தாலேயே, அவைகள் நாசம் அடையுமெனப் பஞ்சேந்திரிய வாஞ்சைகளையும் உடைய மனிதன் அருங்கேடுற ஐயமுளதோ.

ஆயினும் இவ்வாழ்க்கையில் சுகதுக்கங்களில் எது மிகுதியானாலும், பெண்டு பிள்ளைகளாகிய வன்கயிற்றால் கட்டுண்ட மனிதன் எப்பொழுதும் நற்கதியடையான்.

பாலியனாயினும், யௌவனனாயினும் விருத்தனாயினும், நாள் கழித்தலை எண்ணும் மிருத்தியு ஒருவன் உளன் என்று உணர்ந்து நடப்பான் இலன் என்றறியவும்.

உலகில் பிறந்து பிறந்தே இறக்கின்றான். கேளாதே வந்து பிறப்பது போலவே பெண்டு பிள்ளை மனைவிகளை விட்டு யாவரும் பார்த்திருக்க சொல்லியது சொல்லாமலே போகின்றான் என்றறியவும் அறியினும் தாய் தந்தையர் பெண்டு பிள்ளைகள் ஒருவரும் துணையின்றியே தானொருவனாகவே எப்படிவந்தானோ அப்படியே அவன் மாத்திரம் தனியே போகின்றான். போயினும் ஒருவன் மரித்தவுடனே அவன் தேகத்தைக் காஷ்டம்போலப் புவியில் கிடத்தி உறவினர் எல்லாரும், ஆ ஆ வென்று கதறுகின்றனரன்றோ.

அப்படி அவர்கள் அழுகின்றமையால் இறந்தவன் அடையும் பயன் யாதொன்றும் இல்லை என அறியவும். அறியினும் பொய்பத்திரம் எழுதுதல், பொய்மொழி கூறுதல், வழிமறித்தல், கொலை புரிதல், முதலிய தீமைத்தொழில்களைப் புரிந்து ஒருவன் பொருள்சம்பாதிக்க அப்பொருளை அவனைச்சார்ந்த எல்லோரும் அனுபவிப்பார். அனுபவிக்கினும், பொய்யோலை எழுதுதல் முதலிய அத்தீயவினைகளைச் செய்தலால் வரும் கொடிய பாபத்தில் அப்பொருளை அனுபவிக்கின்றவர்களுக்கும் பங்குண்டோ வெனில் சிறிதும் அவர்களுக்கில்லை யென்றறியவும்.

அப்பாபச் செயலைச் செய்து பிறர் பொருளைக் கவர்ந்தவன்யாவனோ அவன் ஒருவனே பாவம் முழுதுக்கும் பாத்திரனாகி நீங்கா நரகம் எய்துவன். எய்தினும் அங்ஙனம் தீத்தொழில் புரிந்து ஈட்டியபொருள் இறந்தபின் அவனோடு செல்லுமோவென்றால் சிறிதும் செல்லாமல் அவனை விட்டு மனைக்கண்ணே இருப்பதாகும், அப்படியிருக்கினும் உறவினர் முதலாயினோர் சவத்தோடு மயானம் வரையிலே சென்று உடனே மீளுவர். மீளினும் இறக்கு முன்னமே அவன் செய்தபாவ புண்ணியங்களே அவனுடன் செல்வனவாகும் ஆயினும் எந்தப் பொருளானது கடவுளுக்குத் தொண்டனாகியஒரு பிராமணன் கையில் கொடுக்கப்படவில்லையோ, அப்பொருள் உடையவனது பொருளன்று அறிவீராகவும்.

உலோபனிடத்து இருப்பதாகிய பெரும் பொருள் ஐயோ நாம் பிராமணர் கையில் கொடுக்கப்படவில்லையே, திருவணை முதலிய யாத்திரைகளிலும் செலவு செய்யப் படவில்லையே, புழுமலக் கூடாகிய தேகம் அநித்திய மாயிற்றே, நம்மை யுடையான் அதனை அறிவானில்லனே, அவன் இறந்த பின்பு நம்மை யாவன் கவர்ந்து

கொள்வனோ, ஒருங்கு கவர்ந்து அவன் எந்த விலைமகள் கையில் கொடுப்பனோ வென்றுக் கதறுவதாகும். ஆயினும் பூர்வ ஜென்மத்தில் தான தருமங்கள் செய்தவனே மறுஜென்மத்தில் மகா பாக்கிய வானாகின்றமையால் அச்சென்மத்திலும் அப்படியே செய்தால் மறுஜென்மத்தில் அதிக தனவான் ஆகுவன்,

அத்தான தருமங்களைப்பற்றி சிறத்தையோடு செய்கின்றானோ அவனே தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுவன். பெறினும் பக்தி சிரத்தையின்றி அவற்றைச் செய்தவன் செய்யாதவனேயாவன். ஆயினும் தர்ம தானங்களை செய்கின்றமையாலே எண்ணியவற்றையெல்லாம் எண்ணியபடியே பெறலாகும். பெறினும் அரும் பொருளாகிய மோக்ஷமுங் கிடைக்கும். கிடைக்கினும் பத்தியோடு செய்யும் தருமம் தினையினும் சிறிதாயினும், மலையினும் பெரிதாகும். ஆயினும் ஒருபொருளு மில்லாத ருஷிகளெல்லாம் தம்மனச் செய்கையாலேயே விதி சிவேந்திராதியருக்கும் அரிய அதிசய இன்ப வீடாகிய பரமபத மடைன்கிறனர்.

ஆதலால் மனத்தூய்மையும் பத்தியும் இல்லாமல் தான தருமம் தவம் முதலியவற்றைச் செய்தால் அவை சிறிதும் பயன்படாதென்றறி வீராகவும். முத்திசாதனங்களாகிய பத்தியென்னும் பிரபத்தியெனும் செய்தலும் பக்தியோடு தரும தானங்களைச் செய்தலுமே உத்தமமா மென்றறி வீராகவும்.

## உலக குண தர்ப்பணம்.

ஒரு காலத்தில் ஒத்த உருவமும் நட்பும் வயதும் வாய்ந்த கிருசானு, விசுவாவசு வென்று நாமம் தரித்த கந்தருவரிருவர் உலகமுழுமையும் உள்ளுற நோக்கும் பேரவாக் கொண்டு விமான ரூடராய் வானக மார்க்கஞ் சென்றனர்.

அப்படிச் சென்ற அவ்விருவருள் கிருசானு வென்போன் அழுக்காறும் குற்றங்களையே குறிக்குங் குணமுடையவனாயிருந்தான், மற்றவன் நற்குணங்களையே நாடுகின்ற வனாயிருந்தான். இவர்கள் பணிவரைப் பக்கலில் நின்றும் புறப்பட்டு பதரிகாச் சிரமம் அயோத்தி முதலிய இடங்களைக் கடந்து காசிமா நகரைக் கண்ணுற்

றனர். அப்பொழுது விசுவாவசு கங்கைக் கரையோரமாயிராநின்ற பலதேசங்களைக்கண்டு கை கூப்பி நாடோறும் வைகறை பாகீரதியினீராடிக் காலைக்கடன் முடித்துத் தேவதா அர்ச்சனை செய்யும் பூசுரரைத் தொழுதேற்றினன். இதனைச் செவியுற்ற கிருசானு சாத்திரவிதிகட்கு மாறாகிய ஒழுக்க முடைய இத்தேச மறையோரை எங்ஙனம் வணங்கலுற்றனை. இவர்கள் காலையின் முழுகினாலு மென்ன வண்ணான் கழுதை மீது கொண்டுவருகிற உடைகளை உடுக்கின்றார்கள். குளிக்காமல் உண்ணுகின்றனர். சிலர் போர் சேவகம் பூண்டு ஆயுதங்களைக்கொண்டு ஜீவிக்கின்றனர். சிலர் நீசர்களோடு இடைவிடாது கூடுகின்றனர், இவர்கள் வேதம் ஓதுவதேயில்லை, சிலர் தர்க்க முதலிய வீண் சாத்திரங்களை முயன்று கற்கின்றனர் என்றனன், இவ்வாறு கிருசானு கூறியதை செவியுற்ற விசுவாவசு கிருசானுவை நோக்கி உன்னால் எடுத்துரைக்கப்பட்ட தீய ஒழுக்கங்கள் கலியுக மகிமையால் நேர்ந்தவையே யன்றி இவர்களது குற்றத்தால் நேர்ந்தவையல்ல. மேலும் இவ்விடத்திலும் கவுட கன்னியாகுப்ஜ மிதிலை தேயங்களிலும் சிலவித்துவான்கள் இருப்பதினால்தான் சாத்திரங்கள் நசியாமல் இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறன என்றனர்:

அதனைக் கேட்டுணர்ந்து பிறகு சிலதூரம் விமானத்தைச் செலுத்திக் கூர்ச்சரதேசத்தைக் குறுகி விசுவாவசு யாது புகலுகின்றனனெனில் இதோ ஆடவர்கள் பற்பல தேசங்களுக்கேகி ஆங்காங்கு பற்பல காட்சிகளைக் கண்டுகளித்து மிக்க திரவியந்தேடித் திரும்பி வந்து இன்பமெய்தி வாழ்கின்றனர் இவ்வாறன்றிப் பொருளீட்டு முயற்சி சற்றேனுமின்றி சோம்பி வீட்டை விட்டகலாத பேதைகள் கிணற்றுத்தவளை யொப்ப நாட்டுவழக்க மொன்றுமறியாது வறுமையான் மீளாத் துன்பமும் அவதியும் அடைகுவர் அன்றோ வென்றான்.

அதனைக் கேட்டுணர்ந்து அப்பாற் சிலவழிகடந்து மகாராஷ்டிர தேசத்தை நோக்கிக் கிருசானு, ஈண்டுள்ள வேதியர்கள் வேதமோதும் பருவத்தில் மிலேச்சர்களுடைய பாஷைகளைப் பயின்று கிராமங்களின் வரவு சிலவு கணக்குகளை எழுதுவதினாலேயே பொழுதெல்லாம் போக்கிக்கொண்டு பின்னும் வயிறு வளர்க்க வேண்டி மிலேச்சர்களுக்குள் ஊழியம் செயயவும் உடன்படுகின்றார்கள் இதன்றியும் தங்கள் கணித சாதுர்யங்களால் மோசம் செய்துஎஜமான

னையும் துரோகமும் செய்கின்றார்கள் இவ்விடத்தில் வேதத்தில் பத்து எழுத்துத்தெரிந்து கொண்டவனே வேதவியாசன், ஒருசுலோகம் அறிந்தவனே தேவகுரு, ஔபாஸனஞ் செய்பவனே ஆபஸ்தம்பன் என்று சொல்லினன்.

இவ்வாறு கூறியதைக்கேட்ட விசுவாவசு இம்மஹாராஷ்டிர பிராமணர் சேனாவீரராகவும் தேசாதிகாரிகளாகவும் இருந்துகொண்டு வாராவிட்டால் அந்தணரென்கிற அபிதானமே அழிந்து போயிருக்குமென்றான் அதுகேட்டு கிருசானு என்பவன் விசுவாவசு நீ சொல்வது உண்மையே ஆனல் இத்தேசத்து முதல்வருணத்தவர் போர்த்தொழிற் குறிய இரண்டாம் வருணத்தவர் தொழிலைக்கைக் கொண்டு பல்லோரை வருத்திப் பங்கப்படுத்தி அவர்பொருளைக் கவர்ந்து தமது வயிற்றை நிறப்புவது அழகோ அதர்மமல்லவோ என்றனன் அதனைக்கேட்டுணர்ந்த விசுவாவசு, நீசொல்வது மெய்யே ஆனல் இவர்களிவ்வாறு தேசசஞ்சாரம் செய்யாராயின் இந்துக்களின் கோயிலை இடித்து அவர் யரவையழித்து இடுக்கணியற்றும் இயல்பினையுடைய புரசமயிகளை அடக்கவல்லார் யாரோ நோயைக் கொடுத்து இன்பத்தை நுகர்விக்கு மருந்தின் கைப்புமுதலிய கடிய குணங்களை ஆரோக்கியத்தை அடைய ஆவல்கொள்வோர் பொறுக்கவேண்டியது போல நாமும் இவர்களால் விளையும் பெரும் பயனைக்கருதி இவரது குற்றங்களைக் கணிக்கலாகாது என்றுரைத்தனன்.

இவ்வாறுரைத்த பின்பு சிலதூரம் விமானத்தை, நடாத்திச்செல்கையில் கிருசானு சில வைராகிகளை வழியிற்கண்டு, மிக்கவருமையுற்று மோசத்தொழின் முற்றுணர்ந்து இந்த வைராகிகள் (பைராகிகள்) உதரபூர்த்திக்காக எண்டிசையுஞ் சென்று இரந்து கொண்டிருக்கிறார்கள் என்றனன் அதன்பிறகு அவர்கள் இருவர்களும் ஆந்திரதேசத்தை அடையவே, கிருசானு, இன்னாட்டில் கிராமந்தோறும் ருத்திரன் எஜமானனாயிருக்க பிராமணன் அவனுக்குச் சேவகனாகப் பக்கலில்நின்று கணக்குகள் சொல்லிக் கொண்டிருக்கின்றான், அன்றியும் பாலைநிலத்துத் தாமரைத்தடாகம் போல் எவனாவது ஒருவன்வேதமோதினவனாக இருந்தால் அவனுக்குப் புரோகிதவேலையே கதி, இதுவல்லாமல் இத்தேசத்தில் துருக்கர் மிகுதியாய் வாசஞ்செய்கிறார்கள் என்றனன்.

அதனைக் கேட்டுணர்ந்த விசுவாவசு என்பவன், இவர்கள் எவ்வாறிருப்பினும் ஈகையாற் சிறந்தவர்களாதலின் இவர்கள் மாட்டு எட்டுணையுங் குற்றங்கூறலாகாது இத்தேச அதிகாரிகள் கள்ளமும் கபடும் கற்றறியாதவர் என்றனன், அவ்வாறு கூறியதைக் கேட்டுணர்ந்தபிறகு அன்னாட்டைவிட்டுக் கன்னடதேசத்தைக்கண்டு ஆண்டுவிபூதி யணிந்தவர்களாய் மார்புற்றயங்கும் இலிங்கத்தை யுடையவராய், வேதத்தை இகழுமியல்பினராய்த் தங்கள் பாதஜலத்தால் சிவனது முடியை அபிஷேகம் செய்கின்றவராய்த்திரியும் இலிங்கதாரிகளென்றும் சொல்லபபடும், சூத்திரர்கள் ஏராளமாக இருப்பதைக் கண்ணுற்று அப்புறம் உடுப்பியைச் சேர்ந்தார்கள்.

அப்படிச் சேர்ந்த அங்கு நிலவையும். இருளையும், கமலத்தையும், ஊமத்தையும் சம்பங்கியையும் முட்செடியையும், குயிலையும் காக்கையையும் ஒன்றென்னுவதுபோல் பண்டிதரையும் பாமரரையும் பகுத்தறியமுடியாத முழுமக்கள் வதியும் கற்றுதேசங்களை விரைந்து நடந்து பின்னர் திருப்பதி, கடிகாசலம், திருவெவ்வுளூர், முதலிய தலங்களைத் தரிசித்து, வைணவ மதத்தைத் தாபித்த இராமாநுஜ ஆசாரியரது ஜனகபூமியாகிய ஸ்ரீபெரும்பூதூரைக்கடந்து திருவல்லிக்கேணியை அடைந்தனர்.

அப்படி அடைந்தபோது கிருசானு நற்குணங்களைத் துறந்த ஊணரென்கிற ஜனங்களால் நிறைந்துள்ள பட்டணம் இத்தலத்திற்குஅணித்தாயிருப்பது குற்றமாயிருக்கின்றது, இவ்வூணரிலுங் கபடமுள்ளவர்கள் கிடைத்தல் அரிதன்றோ? இறக்கமற்றவர்களும், சுசியில்லாதவர்களுமாகிய இவர்கள் அந்தணர்களைத் துரும்புபோல் எண்ணுகின்றார்களே என்றனன்.

இதைச்செவியுற்ற விசுவாவசு கிருசானுவை நோக்கி இவ்வூணர்கள் பிறர்பொருளை நியாயமில்லாமல் அடிபிடி கட்டாயமாய்க் கவர்வதில்லை பொய்சொல்வதில்லை பலவகைப்பொருளைத் தேடுவார்கள், அவர்களதாசாரம் நம்தேயத்தவர்களுக்கு ஒவ்வாததாயிருப்பினும் அவர்கள் இடத்துள்ள முற்கூறிய நற்குணங்கள் நன்குமதிக்கத்தகுவன், என்றனன்.

அதனைக் கேட்டுணர்ந்து திருவல்லிக்கேணியினின்றும் புறப்பட்டுக் காஞ்சீபுரம் வந்து, அங்குள்ள தெய்வங்களைத் தொழுது பா

லாறுகடந்து ஆண்டுறையுஞ் சூத்திரர்களை நோக்கி இருசாநு விசுவாவசுவை விழித்தும் பின்வருமாறு சொல்ல லுற்றனன். அதாவது இவருடன் சிலர் வாணிபஞ்செய்யத் தொடங்கி உண்மைக்கு விரோதமாய்ப் பொய் புகலப் பின் வாங்கார்கள், இன்னும் சிலர் தங்கள் குலபாஷைகளைக் கிரமமாய்க் கல்லாமலே ஊணபாஷை பயில்வதில் தங்கள் காலத்தைக்கழித்து கிரமமாய்க் கொஞ்சம் கற்றுக்கொண்டு தங்கள் மதாசார முதலியவற்றைப் புறங்கணித்துக்கொண்டிருக்கிறார்கள், இருக்கப் பின்னும் சிலர் வயிறுவளர்க்கைக்காக ஊணர்களுடைய படைவகுப்பு முதலியவற்றில் சேர்ந்து வாணாளை வீணாகக்கழிக்கின்றனர். ஆதலால் இவரது நடை சற்றும்சந்தோஷிக்கத்தக்க வல்லனவென்றும் புகன்றனன்.

இதனைச் செவியுற்ற விசுவாவசு, யாதுகூறுவாரெனில் இவர்களிற்சிலர் வர்த்தகத்தில் பொய் சொல்லுதல், கொள்ளவருவோர் உண்மை புரை[illegible]மையாலேதான் உலகில் அம்பினை அம்பால் வெல்லுவர் பிரசித்தமன்றோ, மற்றுஞ் சிலர் ஊணபாஷைகளிற் காலம் கழித்தாலும் அந்தணர் முதலிய அனைவர்க்கும் உபகாரங்கள் செய்து வருணத்துக்குறிய ஒழுக்கம்வழாது நடக்கின்றனர், வேறு சில அரசர்களிடத்தில் சேனாபத்தியம், மந்திரித்தொழில் முதலிய பல வதிகாரங்களை அடைந்து [illegible]கத்திற்கு உதவிபுரிந்து வருகின்றனர் இவர்களுடன் சிலர் சிறந்த [illegible]லவர்களாய்த் தேவபாடல்களை யொத்து அநேக பிரபந்தங்களையும் [illegible]த்திரங்களையும் மற்றும்பல் நூற்களையும் இயற்றி எங்கும் புகழ்பெற்று விளங்குகின்றனர் என்றோதினன்.

அப்பால் போர்வீரர்களின் என்புக்குவை மலிந்து தோன்றும் செஞ்சிகோட்டைக்கு அப்புரமேகி பிநாகி, கருடநதி காவேரியென்ற ஆறுகளைக்கழிந்துத், திருவரங்கம், திருவானைக்கா முதலிய தலங்களை தரிசித்தார்கள், அப்படி தரிசித்துவருகின்ற அக்காலையில் விசுவாவசு கூறுகின்றனர் இச்சோழநாடு சிவாலயங்களாலும், விஷ்ணுவாலயங்களாலும் நிறைந்து தோன்றுகின்றது இத்[illegible]

த்தில் சோதிட்டோமம், உத்தியம், அதிராத்திரம், அபதோரியாமம், வாயபேயம் முதலிய மகாயாகங்கள் விதிவழுவின்றிச் செய்யப்பட்டு வருகின்றன, வீடுகடோறும் அக்கினியோத்திரம் செய்கின்றவர்களும், வேதமே தனமாக உடையவர்களும், சாத்திரம் பயிற்சி செய்கின்றவர்களும், விருந்தோம்பல் முதலிய தருமங்களை கைக்கொண்டவர்களும், தோஷமில்லாதவர்களுமாகிய பண்டித சிகாமணிகள், விளங்குகின்றனர் என்றோதினன்.

அதன் பின்பு இவரிருவரும் கும்பகோணத்தைக்கடந்து, சமுத்திரமத்தியில் இராமனுக்காக நளனால் நிருமிக்கப்பட்ட சேதுவென்ற திருவணையை தரிசனஞ்செய்து பாண்டியநாட்டின் தலைநகரான மதுரைமாநகரை அடைந்தார்கள், அப்படி அடைந்து அங்கு மலயத்துவச பாண்டியன் தவத்திற்றோன்றிய தடாதகைப் பிராட்டியாரையும், தருமியென்ற பூசுரனுக்குத் திருவகவல் பாடித்தந்து அவனுடைய அவாவினைப் பூரணம் செய்தவரும், வையையாற்றில் அளவற்றவெள்ளம் வந்தபோது அடியாருக்காக மண்சுமந்து பிரம்படிப்பட்ட பெருமான் சொக்கநாதரையும், தொழுதேத்தினார்கள். எத்தியபின் அப்புறம் பொற்றாமரை தடத்தின்கண் தண்டமிழ்க்கரசராக வீற்றிருந்து, மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருக்கோவையாரில் நூறு குற்றங்கூறி, சொக்கநாதர் மறையோனுக்குப் பாடித்தந்த பதிகத்திலும் பிழைகாட்டி முக்கட் கடவுளே நெற்றிக் கண்காட்டியபொழுதும் குற்றம் குற்றந்தானென்றும் சாதித்த, நக்கீராதிப் புலவர்கள் இந்நகரில் சங்கத்தாரெனச் சிறப்புப்பெற்றிருந்தாரென்று விசுவாவசு விளம்பினான்.

அதனைக் கேட்டுணர்ந்ததன் பின்பு திருமாலிருஞ் சோலையில் அழகரை வணங்கி தாம்பிரபரணி ஆற்றங்கரையிலிருக்கிற திருக்குருகூரில் புளியமரத்தின்கீழ் வீற்றிருந்து திருவாய்மொழியருளிச்செய்த சடகோபனென்கிற நம்மாழ்வாரைத் தரிசனஞ் செய்தார்கள், இவ்வாறு இப்பிரபஞ்சத்தில் அடங்கிய தேசத்துள் பற்பல இடங்களைப் பார்த்து மகிழ்ந்து கெந்தர்வர் இருவரும் தங்கள் உறைவிடம் சென்றனர், ஆதலால் இப்பூவுலகின் கண்ணுள்ள மானிடராகிய நாம் பாவத்தொழிலைக் கனவிலும் நினையாமல் புண்ணியத்தையே பூரணமாகக் கொண்டு நாடோறும் நடத்திவருபவர் நானிலம் புகழ நல்லுலகு சார்வார்கள், பாபத்தொழிலையே பலவாறுசெய்து

வருபவர் படமுடியாத் துன்பத்தையடைந்து நரகவாசம் செய்வார்களெனமேலோர் திருவாய் மலர்ந்தருளினர்.

## அறத்தின் இயல்பு.

மகாசிறப்பினையுடைய நமது நாட்டுப்பழையகாலத்து இராஜாக்கள் பெரும்பாலும் கிரஹணம் முதலான புண்ணிய காலங்களிலும், மற்ற காலங்களிலும், கோயிலுக்கும், பிராமணர்களுக்கும், வித்துவான் முதலானவர்களுக்கும், சில பூமி, காணி, நகை நாணயம் சில சுதந்தரமுதலியவைகளை விட்டுவந்தார்கள். அப்படி விடுங்காலங்களில், தானம் வாங்கினவர்களுக்கு ஓர் ஆதாரம்வேண்டுமே அதற்காகச்சிலாலேகம், அதாவது சிலையில் வரையப்பட்டதோர் உத்திரவு, தாமிரசாசனம், தாமிரத்தகட்டில் எழுதப்பட்டஉத்திரவு, இவைகளைக் கொடுத்துவந்தார்கள் இவைகளுக்குத்தான் சாசனமென்று பெயர் இப்படி சாசனமோடுசெய்யும் தானதருமம் எப்போதும் விளங்கும், செய்கின்றவர்களுக்கும் நல்லுலகமே கிடைக்கும்.

ஆதலால் கோயிலில் விசேஷமாய் சிலாலேகங்களிருப்பதேனென்றால், கோயிலுக்குத்தான் விசேஷமாய்ப் பழையகாலத்து அரசர்கள் தர்மங்கள் செய்திருக்கின்றார்கள் அல்லாமலும் கோயிலில் ஒருவித உத்திரவைவரைந்தால் மற்றகாலங்களில் எவனாவது ஒரு சத்துருவாகிய அரசன் அந்த நாட்டைக் கைபற்றியபோதிலும், கோயிலிலிருக்கும் உத்திரவை அழிக்கமாட்டான், தாம்செய்யும் தர்மம் எப்போதும் நிலைநிற்குமென்று அவர்கள் கொண்ட கருத்தாகவும் இருக்கலாம் இருக்கினும் இக்காலத்தில் நமது ஆங்கிலேய ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரிஜிஸ்தர் ஆபீசுக்குச் சமானமாக அக்காலத்து அரசர்கள் நமது கோயில்களை எண்ணிதாங்கள் செய்துவந்த தர்மங்களைக் கோயிலில் மதிற் சுவர்களில் வரையக் கட்டளைச்செய்து வந்தார்கள். அப்படியவர்கள் கொண்டகருத்தின்படியே நமதுகோயில்கள் சத்துருராஜாக்கள் கையில் அதிகஅவஸ்தைப்படாமல் நமக்கு அக்காலத்திய சாசனங்களைப்படிக்கும் பாக்கியத்தையும் ஒருவாறு அளிக்கின்றனர். ஆயினும் நமதுமுன்னோர்கள் சாசனரூபமாய்க் கொடுக்கப்பட்ட தானத்தை எவ்வளவு ஆதரவாய் ரக்ஷித்தார்கள் என்பதையும், தானத்தைப்பிடுங்கிக் கொள்

வதையும், பாபமானகாரியமாக எண்ணினார்கள் என்பதையும் அதனால் அவர்கள் அடையுங்கதியையும் விபரமாகக் கூறுகின்றேன் கேட்பீராகவும்.

மேற்கூறிய இந்த தருமத்துக்கு அன்னீதம் பண்ணினவன் சங்கைக் குமரியிடைச்செய்தார் செய்பாவங்கொள்வான். சங்கைக்கரையில் குரால் பூசுவைக்கொன்ற பாவத்தை போகக்கடவான். சங்கைக்கரையிலே காராம் பசுவைக்கொன்ற தோஷத்திலே போகக்கடவார்களாகவும், தானங்கொடுப்பதைக் காட்டிலும் ஏற்கனவே கொடுக்கப்பட்ட தானத்தை அபகரிக்காமற் காப்பாற்றுவது மிகவும் மேன்மையெனில் தானத்தால்பெயர் மட்டும் வருகிறது, தானத்தைப் பிடுங்கிக் கொள்ளாமல் பரிபாலிப்பதால் சுவர்க்கலோகம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கின்றது,

ஆதலால் பத்திவிசுவாசத்தோடு அவாகொண்டு கடவுளுக்குப் பிரீதியாக அறங்களைப் புரிகுவோர்கள் இப்பூவுலகின்கண் புண்ணியரெனயாவரும் புகல போகபாக்கியங்களை அனுபவித்து பின்பு நல்லுலகடைவர். தருமஞ்செய்யாதவரும் ஒருவர் ஈவதைவிலக்குவோரும், ஒருவர் பொருளை அபகரிப்போரும், இப்பூமியின்கண் இயம்பொணுப் பிணிகளாலும் பாதைப்பட்டுபின்பு ஆவிநீங்கி எமலோகமடைந்து எமனால் தண்டிக்கப்பட்ட நரகங்களை அடைவர் ஆதலால் மனதிருப்தியோடு தருமங்களைச்செய்தல் வேண்டும்.

## எமலோகபடலம்.

### பாபிகள்படும் வேதைகள்.

ஓர் காலத்தில் ரிஷிகளெல்லாம் ஒன்று கூடி தருமபிரசங்கரிஷியென்கிற மகானுவைக்கண்டு வணங்கி மகாரிஷியே தருமபிரசங்கரிஷியென்கிற பெயர் உங்கேதகும், ஆதலால் உம்மைப்போல நல்வினைத் தீவினைகளைச் சொல்லுவாருண்டோ, இப்போதெங்கள் அவா திரும்படியாக திருவுளம்பற்றவேண்டும், அதாவது கொஞ்சமேனும் இரக்கமில்லாத மனதுடனே பாவங்களைச்செய்தபேர்கள் போகிற வழிகளையும் புகன்றருளவேணுமென்று பிரார்த்தித்தனர்.

அம்முனிவர்கள் கூறியதைக்கேட்டுணர்ந்த தருமப்பிரசங்கமுனிவர் திருவுளங்கொண்டு அம்முனிவர்களைப் பார்த்து வாருங்கள்

முனிவர்குழாங்களே எக்காலத்திலும் நன்னெறிதவறாத நடமனிருக்கும் நரகமாகிய எமலோகத்திற்கு கொடும்பாவிகள் போகும் வழியிலே, கொள்ளிகள் சுடும், பாறைகளில் சல்லிகல்லுகள் உறுத்தும், பொல்லாத நெரிஞ்சிமுள்ளுகள் அள்ளும்படிக் கால்களிலே தைக்கும், இப்படி இல்லாமல் இருக்கின்ற படியினாலே வெள்ளெறிப்பழம் போலே கால்கள் வெந்து வெடிக்கும்,

ஓ முனிவர்களே இன்னமுங் கேட்பீராக நெடுங்காலம் வருந்துவதாய் வளர்ந்திருக்கப்பட்ட நெடிய முள்ளுள்ள இலைடங்காடுகள் மேலே மோதும் துக்கந்தானே நெஞ்சையுளைக்கும், பார்க்குமிடத்தில் பொல்லாதகேடுகளைக் கொடுக்கின்ற கொடுமையே மிகுந்திருக்கும் வெகு பாடுகளைஎல்லாம் படுத்தும் கெட்ட நாற்றமானது எங்கேனும் வீசும் அப்படி வீசியதுடன் நெருப்பிலே ஓட்டைக்காயவைத்து வருத்துவதுபோல் தேகமழிந்து வெந்துபோகும், பொல்லாத உக்கிரமான வெயிலெறிக்கும், உடம்பு வீங்கும்படி விஷவண்டுகள் வந்து அடிக்கும், வீங்கிய உடம்பைப் அடித்துப் பிளந்து போடும்படி சீறியபுலிகள் எங்கேபார்த்தாலும் விசேஷமாக விருக்கும், அதுகள் அப்படி இருக்க இன்னமும் வழிகளில் குளவிகள் கூட்டம் கூட்டமாகவந்து பாபிகள் சரீரம் வாடும்படி வருத்திச் செய்யும், அதுகள் அவ்வாறுசெய்யத் தோன்றும் அருநிழலில் தங்கும்படிபோகிறபோது முள்ளுகள் அழுந்தத்தைக்கும், பக்கங்களில் பூதவேதாளங்கள் எடுத்து விழுங்க ஆக்கிரமித்து வாயைத்திறக்கும், அடுத்தடுத்து கொடியக்கணவாய்கள் பார்க்கப் பயங்கரமாக உண்டாகி தோற்றும், அதைத்தாண்டிச்சொல்ல முடியாமல் பாதைபட்டழுவார்கள், அப்படி அழுகின்ற தீவினையோர்களை எமதூதர்கள் பலவாறு பாதைப்படுத்தி நடத்திக்கொண்டு போவார்கள், அப்படிப்போகையில் அப்பாபிகளை ஒரு சுழல்காற்றுவந்து ஆகாயத்திலே தூக்கிக்கொண்டுபோய் சரகரவென்று [illegible]மெறிவதினால் கூறிய முட்புதரினும் பலவிதவேதனைகளைத் தரும்படியான பலயிடங்களிலும் விழுந்து கிடப்பார்கள், அவ்வாறு கிடக்கும் அப்பாபிகளுடைய பெரிய உடலும் எலும்பும் முறிய அவ்விடத்திலுள்ள பேய்கூட்டங்கள் பேரிடிபோல் கர்ஜ்ஜித்து ஆவெனக் கொக்கரித்துப் பிடித்திழுத்து அலங்கோலப்படுத்தி ஆடிக்கொண்டு திரியும்,

அதுகளப்படித்திரிய அவ்வழியிற் கொடியபைசாசங்கள் வாளொத்தநகத்தினாலே பாவிகளுடைய உடம்பின் தோலையுரித்து

சந்தோஷத்துடனே உள்ளேயிருக்கிற மாங்கிஷங்களைப் பிடுங்கித் தின்னும், அதிலொழுகுகின்ற இரத்தங்களை மண்டையோட்டிலே பிடித்துக்கொண்டு ஒன்றுக்கொன்று குடியுங்களென்று நின்று கூத்தாடும் அதனைக்கண்டு குறளிப்பைசாசங்களுங் கூட குதிக்கும்.

அன்றியும் அக்கினியிலே சிவக்கக்காய்ந்த இரும்பு மலைகள் மேலே அத்தீவினையாளர்கள் ஏறும்போது நெருப்பு மழைபேயும், அதிக உக்கிரமாய் அத்தக்ஷணமே ஓர் கடுங்காற்றெழுந்து நாலுபக்கங்களிலும் வீசும், அதினால் அந்தப்பாவிகளுடைய உடம்பு வீங்கிவெடித்து ஊன்தண்ணீரொழுகும் அதனால் படமுடியாத எரிச்சலுண்டாகி ஏங்கி நடப்பர் நடக்கினும் பின்னுமந்த வழியிலே தோற்றுவதை புகல்வேன் கேட்பீராக இடைமட்டும் பள்ளமான தேள்கள் இருக்குங் குழிகளும் காலில் கொடிய பிசின்போல ஒட்டிக்கொண்டு பிடுங்கப்படாத குழைந்த சேறுகளும், அனற்போற் கொதிக்கப்பட்ட சுண்ணமடுக்களும் நிலைக்காத சிறுநீர்வாய்க்கால்களும் ஆங்காங்கு நிறைந்திருக்கும்,

அதுகள் அப்படி நிறைந்திருக்க அக்கினிமயமாகச் சுடப்பட்ட நொய்மணலும், கால்வைத்தா லிடியும்படியான மேலே மூடினகபடமான கள்ளக்கிணறுகளும், கால்கள் மீதேறிச்சுற்றிக்கொண்டு கௌவும் பூதங்கள் இரைச்சலிடுஞ் சப்தங்களும், அதனால் மகாபயங்கரமும் உண்டாயிருக்கும், அறம்நெறியும் அன்புமில்லா பாபிகள் போகுமிடமெங்கும் இன்னமுங் கேட்பீராகவும், அவர்கள் செல்லும் மார்க்கங்களிலே வைத்தகாலை வாங்க ஒருஜாமம் செல்லும்படியான சேறும், இரத்தங்களைக்குடித்து ஊனைத்தின்னும் பாம்புகளும், கொத்திக் கொத்திப்பிடுங்குங் கொடியகழுகுகளும், கூட்டங்கூட்டமாகக் கூடிக்கடிக்கும் மூஞ்சூறுகளும், கூடிக்கொண்டு சீறிக்குலைத்துக் கடிக்கும் செந்நாயின் கூட்டங்களும், எங்கும் நிறைந்திருக்கும்.

இப்பாவிகள் இப்படி அவதிப்படவும், இவர்களை இயமதூதர்கள், சிலரைப்பாரத்தினாலேகட்டி கழுத்திற் சுருக்கிட்டு இழுப்பார்கள், சிலரைச்சூலங்களினாலே குத்தி தூக்கியெடுத்து கொக்கரித்துக் கூத்தாடிக்கொண்டு போவார்கள், சிலரை சேர்த்துப்பிடித்து எலும்புமுறிய மயிரைப்பிடித்து இழுத்து உதைமேல்உதை உதைப்பார்கள், அப்படி உதைத்துப் பின்பு தருமங்களை மறந்த பாவ

ங்களைச்செய்த தோஷிகள் சிலரை பார்த்து வாயில்வந்தபடி வைது கண்டிப்பார்கள், அப்படி கண்டித்து அந்த இயமபடாள் சிலரை உயர்ந்த மேட்டிலேறிப் பள்ளத்திலே குப்புறத்தள்ளி மேலே மிதிப்பார்கள், சிலரைக் காட்டாற்றிலே முதலைக்கௌவிக்கொள்ள விடுவார்கள், நடக்கமாட்டா திருக்கப்பட்ட சிலரை பலமுள்ள தங்கள் காலினாலே உதைமேல் உதையுதைப்பார்கள், ஆகாயம் பூமியும் ஒன்றாய் நிறைந்தவாறுபோல் தோற்றும்படியான பயங்கரமாகவும், யாளிகள்போல் வந்து கெர்ச்சித்துச்சீறி திடீரெனக் குதிப்பார்கள், குதித்த அத்தூதர்கள் பின்னும் சிலகொடியபாவிகளைப் போகும் வழிகளிலே மிகுதியாய் வெந்துச் சுடப்பட்ட ஆற்றுமணல்மேட்டிலே மதித்தோடச் சொல்லி அடிமேல் அடியும், இடிமேலிடியும் இடிப்பார்கள், சிலபேரை அந்த மணலில் புரண்டு விழுந்து ஓலமிட்டுக் கதறிக்கதறி இளைக்கும்படி நாலுபக்கமும் துரத்தித்துரத்தி அடிப்பார்கள், சிலபாபிகளை மனங்கலங்க போகின்றவழியைவிட்டு வேறுவழியில் அழைப்பார்கள், சிலபாபிகளைப் பார்த்து கண்களை உருட்டிக் கோபிப்பார்கள், சிலபாபிகளைப் பிடித்து அவர் தேகத்தை நெருப்பிலிட்டுக் காய்ந்த கற்பாறையிலே துண்டு துண்டாக நறுக்கி வறுப்பார்கள்.

அப்படி வறுப்பதுடன் அந்த வழியில்நடக்க மாட்டாமல் திகைக்கின்ற பாபிகளை எழுந்தோடச் சொல்லிப் பேரிடிபோலே கெர்ச்சித்துப் பச்சைத்தடியாலே தூரம் பெருக அடிப்பார்கள். பாவிகளுடைய பெரிய தொடையைப் பிடித்து முறிப்பார்கள். குதிக்காலை அற நறுக்குமென்பார்கள், சிலபாவிகள் சிலபேரை வாய்மேல் இடித்து பேசுகின்ற நாக்கை அறுப்பார்கள், சில பாவிகளுடைய தேகமாதியந்தமும் எறியும்படி பிரண்டைக்கொடியை இடித்து மெய்யெங்கும் பூசுவார்கள், மிளகாயை தூள்செய்து இரண்டு கண்களிலும் கொட்டுவார்கள், அப்படிக்கொட்டிய அத்தூதர்கள் இன்னும் சிலபாவிகளைப் போவென்றும், வாவென்றும்மார்பிலும், பிடரியிலும் இடிமேல் இடியிடிப்பார்கள், சிலபாவிகளை ஓயாமல் எழுந்து அலைத்தக்கதாக படமுடியாத பாதைப்படுத்துவார்கள், சில பாவிகளை அம்மியில் வைத்து மைபோல் அரைப்பார்கள், சில பாவிகளைத் தாள்வாய்களும், தாடைகளும் உடையும்படியாக குத்துமேல்குத்து குத்துவார்கள், கொடிய பாவிகளாகிய சிலபாவிகளின்வாயிலே சிலதூதர்கள் தங்கள் சிறு நீரைவிடுவார்கள் [illegible]ட்டுக்

No. 2.



பாவங்களைச் செய்தவர்கள் அடையும் தண்டனை. க. ப. க்ருஷ்ணஸாமி

குடிக்கும்படி குத்துவார்கள். குத்திய தூதர்கள் பின்னும் சிலகொடிய பாவிகளைச் சிகையைப் பிடித்துப் பரபரவென்றிழுத்துக்கொண்டேகி அங்குள்ள மலக்குழியையும் மூத்திரக்குழியையும் அவர்களுக்குக் காண்பித்து. ஓ பாவிகளே இதிலே உங்களுக்குண்டான பசியடங்கத் தின்னுங்கள், தாகமடங்கக் குடிக்கப்போகிறீர்கள் என்று சொல்லி உதிரமும் சதையும் சிதறிவிழும்படி அடிமேலடியடிப்பார்கள், இயமதூதர்கள் பாவிகளை இயம்பொணாத துன்பப்படுத்தியும் வாயில் வந்தபடி கடுஞ்சொல்லால் வைவார்கள்.

## பாவிகள் தாங்கள் செய்த பாவத்தொழிலை நினைத்துப் பிரலாபித்தல்.

ஓ முனிசிரேஷ்டர்களே இன்னமும் இயம்புவேன் கேட்பீராக அவ்வெமதூதர்கள் படுத்திய பாதை பொறுக்கமுடியாமல், அப்பாவியர்கள் பற்பலரும் பதை பதைத்துக் கதறி யாதுபுகல்வாரெனில் ஐயையோ எமதூதர்கள் படுத்தும் உபத்திரவத்தினாலே கால்கள்வலியெடுக்குதே, மிகுதியாகிய அடியினாலும், உதையினாலும், மோதுங்கதையாலும், கைகள் முறிந்துதே, கண்கள் உடைந்துதே ஒரு காதுவழி அநேகங்காத வழியாகத் தோற்றுதே, ஓரடியெடுத்துவைக்கமுடியவில்லையே, திர்ப்பலமாக இருக்கின்றதே, களைவந்து மூடுகின்றதே, என்று தங்கள் தாங்கள் செய்த பாவங்களை நினைத்துக்கொண்டு மனக்கவலைப் படுவார்கள். அதிற்சிலபாபிகள் பசியாலும், வெய்யலாலும் மனமிரங்கித் துக்கித்து அழுதகண்ணீரால் அங்கமாதியந்தம் முழுநனைந்து பலங்குறைந்து நடுநடுங்கி மிகவும் ஒடுங்கிப்பயந்து தட்டுகெட்டுத் தடுமாறி மயக்கங்கொண்டு தாங்கள் முன் பூமியில் வாழ்கின்றபோது தீவினையென்னும் பாவங்களைச் செய்தோமே என்று புகன்று துக்கிப்பார்கள்.

சில பாவியர்கள் யாது புகல்வாரெனில் தெய்வமே நாம் பூமியில் வாழுங்காலத்தில் அறியாமல் நல்லவர்களை மனம் நோகப்பண்ணினோம், நடுவு நிலைமையைத் தள்ளினோம், அறிவில்லாதவரோடு கூடினோம், நல்ல உண்மையான ஞானத்தை யெடுத்தெறிந்தோம், அடாதகாரியங்களைச் செய்தோம், தருமத்தை ஒழித்தோம், தவங்களை யழித்தோம், கொல்லாத ஜீவனைக்கொன்றோம், கோபமே குடி

யாகக்கொண்டிருந்தோம் என்று துக்கிப்பார்கள். சிலபாவிகள் யாது கூறுவார்களெனில், ஐயோ! நாம் ஒரு தீர்த்தங்களிலேனும் சென்று முழுகவில்லையே, உண்மையாகிய தெய்வங்களைப் பழித்தோமே, பஞ்சாசரியாகப்பகுத்து ... வில்லையே, ஐயமேடுக்கின்றவரைப் பார்த்து அகடாகப்பழித்தோமே, அவமானக்காரியங்களை ஆவலோடுப் பண்ணினோமே, எம்பெருமானைத் துதிக்கும் பெரியோர்கள் வந்தால் எழுந்திராமல் உடகார்ந்திருந்தோமே, மகத்தான துர்ப்புத்தியால் அந்தப் பாவவழியில் நடந்தோமே என்று அலருவார்கள்.

சில பாவிகள்யாது சொல்லுவார்களெனில், அரன் அரியையனுதினமும் பூசிக்கும் அடியார்களுடைய நேசத்தை விட்டோமே பத்துமாதம் சுமந்துபெற்ற தாய்தந்தையரை மறந்தோமே, தானதருமங்களை நீக்கினோமே, இகழப்பட்ட காமக்குரோத லோபமோகமத மாச்சர்யங்களை அடைந்தோமே, தோப்புகளை வெட்டினோமே, நன்மைசொன்னவர்கள்மீது நாடிக்கோபித்தோமே, பலவிதப்பயனைத்தரும் நீதியைத்தப்பி நிலைகெட்டு நடந்தோமே, அதனால் இவ்விடத்தில் வந்து இப்பேர்ப்பட்ட துன்பப்படலாச்சுதே என்று அப்பாபிகள் ஒருவரோடொருவர் சொல்லி வாயிலும் வயிற்றிலும் அறைந்துக்கொண்டு ஆவெனக்கதறி யழுவார்கள். அதிற்சிலர் இப்பாவம் எப்படித்துலையுமென்று, கடவுளைத் தொழுவார்கள்.

## எமதூதர்கள் பாவிகளைபார்த்து கூறுதல்.

இந்தப்படிச் சொல்லி அழுதுதொழுது அவ்விடத்தில் விசனப்படுகின்ற பாவிகளைப்பார்த்து இயமதூதர்கள், ஓ கொடிய பாபிகளே! நீங்கள் இவ்விடத்தினின்றுஞ் செய்தபாபங்களை நினைப்பதாலாவதேது நீங்கள் முன்னே பாவங்களைச் செய்தீர்கள், உங்களைக் கண்டால் எங்களுக்குத் தோஷமுந் தொடரும், என்றுசொல்லி உங்களைக் கொன்றுதின்கிறோமென்று வந்து கோரப்பற்களைக்காட்டிக் கோபிப்பார்கள், அப்படிக் கோபித்துப் பின்னும் சொல்லுவார்கள் ஓடி வரப்பட்ட வண்டிக்கெதிரில் இரண்டுகாலையும் நீட்டு

வார்களைப்போல் நீங்கள் செம்மையில்லாத அனேக தீவினைகளைச் செய்த தீமையாளர், உங்களை இங்கே வருத்தப்படுத்தி என்னென்ன கெடுதிகள் செய்தாலும் அதுகளெல்லாம் எங்களுக்குத் தேடின தவங்களாகும், உங்களைக் கொஞ்சத்தில் விடுவோமோ பாவிகளே என்று கடுஞ்சொல்லைக் கூறுவார்கள்.

கூறிப் பின்னும் யாதுசொல்வார்களெனில் எங்களுடைய எஜமான் சொற்படிக்கும் அவர் ஆக்கியாபித்த ஆக்கினைப்படிக்கும் துன்பப்படுகின்ற உங்களை நாங்கள் இரக்ஷிக்கக்கூடாது, இன்னம் இவ்விடத்திற்கும் எமபுரத்திற்கும், எண்பத்தாறாயிரம் யோசனை காதவழிதூரமிருக்கின்றது, உடலும், உயிரும் இன்னம் படப்போகிற காரியம் அறியமாட்டீர்கள், நீங்கள் இன்னேரவரைக்கும் பட்டதுன்பங்களெல்லாம் ஒரு பூசனிக்காயிலே கடுகளவுமாத்திரமில்லை, இனி வேகமாய்ப் போங்களென்று அந்தப்பாவிகளை எமதூதர்கள் தடியினால் அடிமேல் அடி அடிப்பார்கள், இடிமேலிடி இடிப்பார்கள், உதைமேலுதை உதைப்பார்கள் கழுத்தைப்பிடித்து நெட்டித்தள்ளுவார்கள் இப்படி பலவிதபாதைப் படுத்துவார்கள், அப்படிப் படுத்திய அத்தூதர்கள் பின்னும் சிலகொடிய பாவிகளை இரண்டுகாற்களையும் சேர்த்துத்தூக்கி நெற்கூடுபோல உதறிஉதறி தரையிலே உதிரமோட மோதிஅடித்து நிற்பார்கள். சிலபாபிகளை ஓடுங்கள் ஓடுங்கள் என்று தண்டாயுதத்தாலே அடிமேல் அடி அடிப்பார்கள், சிலபாவிகளை முன் போகச்சொல்லி தூதர்கள் நெருப்புக்கொள்ளியைக் கையிலெடுத்துக் கொண்டு சுருக்கு சுருக்கெனச் சுடுவார்கள். சிலதீமைகளை அதிகமாகச்செய்த பாபிகளை சிகையைப் பிடித்திழுத்து பெரிய கற்பாறையின்மேல் மோதி அறைகுவார்கள். சில தோஷிகளை எழுந்திருவென்று இடிமேல் இடியிடியென்று இடிப்பார்கள், சில லோபிகளை சதையைப்பிடித்து சூலியால் அறிவார்கள், சிலலோபிகளை ஈட்டியால் குத்துவார்கள், அப்படிக் குத்தியதுடன் இன்னமுள்ள கொடியபாபிகளாகிய சிலரைப்பிடித்து நிறுத்தி குனியும்படி செய்து உலக்கையால் அடித்து இடுப்பை யொடிப்பார்கள், கருந்தேள் செந்தேள் முதலிய தேள்களைப்பிடித்து மாலையாகக்கட்டி அக்கொடிய பாவிகள் கழுத்தில் போடுவார்கள், சில பாவிகளுடைய நவத்துவாரங்களிலும் செய்யான்பூரானை விடுவார்கள், சில பாவியர்களின்மேல் பாம்புகளை யெடுத்துப்போடுவார்கள். சில லோப

ளைப் புளிக்கிறையாக் கொடுப்பார்கள், சில பாவியர்களை பாறுங்
கல்லின்மேல் படுக்கவைத்து பெரிய குண்டுக்கல்லை யெடுத்து தலை
மேல் மோதியடிப்பார்கள்; சில பாபிகளை துருக்கல்லுகளில் தலை
உடையும்படியாக முட்டுவார்கள், சிலபாவியானபெயர்களை அக்கி
னியில் பழுக்கக்காய்ந்த குறட்டினால் தேகத்திலுள்ள சதையைப்பி
டுங்குவார்கள், பிடுங்கியது மல்லாமல் சண்டாளராகிய சிலரைப்பா
ர்த்து கோபங்கொண்டு பலமுள்ளவர்கள் இவர்களென்று காலை
யுங்கையையுங் கட்டிக் காடிகளுக்கு முன்னாகத் தூக்கிப்போடு
வார்கள், சில சண்டாளரைப் பின்னிட்டுப்பாயும் கோபமுள்ள
ஆட்டுக்கடாக்கள் பலங்கொண்டு மாயப்பாபிகளுடையத் தலையை
அதின் எதிராகவலைத்துப் பிடிப்பார்கள், சில பாவியர்களை சீறிக்க
டிக்கின்ற செந்நாய்களின் வாய்க்கெதிராக பாவிகள் பதைத்தல
றும்படித் தள்ளுவார்கள், சில பாவியர்களை இராகம்பாடச்சொல்லி
அவர்கள் பக்கத்திலே எமதூதர்கள் நின்று காரமுள்ள மிளகை
அரைத்துக் கண்களிலே அப்புவார்கள், தொண்டைமேல் குத்து
வார்கள். கொடிய பாவிகளாகிய சிலரை கூறியசுண்ணாம்பைக்க
ரைத்துப் பாயசம்போல் குடிக்கும்படிக்கூறி அடிமேல் அடி அடி
ப்பார்கள், லோபிசண்டாளராகிய சிலரை குதிரை மூத்திர
மும் எருக்கம்பாலுங்கலந்து அவர்களை வாயைத்திறக்கச்சொல்லி
வாயிலூத்துவார்கள், சில பாவியர்களை தாகவிடாய்நீங்க நெரு
ப்பை முழுங்குங்களென்று சொல்லி நீடியதடியால் அடிப்பார்
கள், சில பாவியர்கள் பசிக்குதென்றால் அவர்கள் பசிநீங்க மலங்க
ளைத்தின்னும்படி அடிப்பார்கள், மூத்திரத்தைக் குடியுங்களென்று
உதைப்பார்கள்.

அப்படி உதைப்பது மல்லாமல் இன்னம் சிலபாவிகளான
பெயர்களைப் பார்த்து அடடா இவர்கள் மனதில் நினைக்கப்படாத
பதிவிரதாபெண்களை நினைத்து அவர்களை சேரவேண்டுமென்று
இச்சித்து காமசக்கினியிலே வெந்தவர்கள் இப்பாபிகளென்று
கடுங்கோபங்கொண்டு அவர்களுக்குத்தேள் மெத்தைப் பரப்பி
பாம்புதலைக்கணைக் கொடுத்து, அவர்கள்மேல் விஷங்களைத்திமி
ர்ந்து கடூரமான அக்கினியொழுகக் காய்ந்த இரும்பினாலே செய்த
ஒரு பெண்பதுமையை கட்டி அணைத்துக்கொள் அணைத்துக்கொ
ள்ளென்று எமதூதர்கள் தங்கள் கையிலே இருக்கிற குதிரைச்ச
மட்டியினாலே சுழட்டி சுழட்டி அடிப்பார்கள், கண்ட சோடாளி

யினாலேவெட்டுவார்கள், பாங்கினாலே பக்கத்தில் பாயும்படிபாச்சுவார்கள்.

பாச்சிய அந்த எமதூதர்கள் சில கொடிய சண்டாளப் பாவிகளை சிகையைப்பிடித்து இழுத்து கீழே வீழ்கத்தள்ளி மேலேயேறிக்கொண்டு கறுக்குள்ள கத்தியினாலே நெற்றியைத்துளைத்துக் கண்ணிரண்டையும் பிடுங்குவார்கள், பாவிகளுடைய எலும்பு சிதரஉலக்கையாலே இடிமேலிடி யிடிப்பார்கள், கொடுவாளை எடுத்து உடம்புகளைக் கொத்தி வாயைக்குடைந்து கைகளை முறிப்பார்கள், சற்றேனும் தயவில்லாமற்படிக்கு அலற அலறத் தலைகளை உடைத்து மூளைகளை எடுத்து கழுகுகளுக்கு இரையிடுவார்கள்,

இட்டும் பின்னர் மகாபாவிகளான பேயர்களை சிலஇடங்களிலே பலவகையான சர்ப்பக்கூட்டங்கள் வாசமாக யிருக்கப்பட்ட பாதாள பிலத்துவாரத்திலே புகுப்படிச்சொல்லியும் சில யிடங்களில் வாசிளையநாட்டி நிறுத்தியும், சில இடத்தில் குதிரைக்குப் பேய்பிடித்துப்போகும் செயல்போல பிடித்துக் கொண்டு கூறுள்ள முள்ளுகளில் வருத்தியும், கருங்கற்சேருமபுகளிலே படுக்கப்போட்டுக் காலைப்பிடித்து இழுத்து உருட்டியும் சிலஇடங்களில் ஓடும்படியாகத் துரத்தியும் சீறிசீறி சினந்து வைதும் அடிப்பார்கள்,

அப்படி அடித்து உஷ்ண மண்டலத்திலேயுள்ள அக்கினி மயமான ஜலத்தினில் இப்பாவிகளை மெயவைத்து அக்கரையிலே ஏற்றி அப்பாவிகளை அழுந்தக்கட்டிய பாசக்கயிறுகளை அவிழ்த்து வெற்றியுள்ள எமதர்மனமுன்னே தூதர்கள் கைதொழுது இப்பாபிகளைக் கொண்டுபோய் விடவும் அப்போது எமதர்மராஜன் இந்தப்பாவிகளின் முகத்தைப் பார்த்தால் தனக்குப் பாவமென்று பார்க்க அருவருப்பான்.

### இயமதர்மராஜன் சித்திரகுப்தனை அழைத்து அவரவர்கள் செய்த பாவங்களை கூறும்படி ஆக்யாபித்தல்;

ஓ முனிவர்களே கேளுங்கள் அவ்வாறு அருவருப் புடைய அந்த எமதர்மராஜனானவன் குற்றமற்ற சித்திர குப்தரைப்பார்த்

த்து வாருமையா சித்திரகுப்தரே மண்ணுலகில் மானிடராக ஜனித்த இவர்கள் போகபாக்கியங்களோடு வாழுங்காலத்தில் அங்கே இவர்கள் செய்த பாவங்களையெல்லாம் ஒன்றும் தப்பாமற்படிக்கு ஆதியோடந்தமாகவும், இன்னவின்ன பாவமென்றும் யான் அறி, யும்படி புகல்வாயென்றனர்.

## சித்திரகுப்தன் அவரவர்கள்செய்த பாவங்களைக் கூறுதல்.

எமதர்மராஜன் கூறியதைக்கேட்டுணர்ந்த சித்திர குப்தன் அப்படியே மகாபாக்கியமென்று அவரும் கும்பிட்டக் கையராகி அருகில்வந்து கணக்கினையெடுத்து ஒவ்வொரு ஏடுகளாகப் புரட்டிப் புரட்டிப் பார்த்துச் சொல்லத்தொடங்கினார், எங்களை யாட்கொண்டாளும் ஓமதர்ம மகாராஜனே கேளும், தேவரீர் திருவுளம் பற்றியவாறு கணக்கை யெடுத்து ஆராய்ந்து அணுவும் பிசகாமல் சொல்லுகின்றேன், இவர்கள் சிவதரிசனம் பண்ணாதவர்கள் மெய்யான தருமங்களை செய்யாதவர் சந்தோஷமாகச் சென்று புண்ணிய தீர்த்தங்களில் போய் முழுகினவரல்லர், பசித்து வந்த பேருக்கு அன்னமிடாதவர், கன்னிக்குடிகுந்துக் கனங்குலைந்தவர், முறைமையான தர்மமுடையோர்களையும் கண்டவர்களல்லர், நல்லோர் நேசங்கொண்டவருமல்லர், என்று கூறிப் பின்னும் சொல்லுவார் இவர்கள் கனவிலும் சிவபூசை அரிபூசை குருபூசை பண்ணினதைக் கண்ணாற்கண்டவர்களல்லர், சிவபிரானுக்கற்புதமான பத்திரம், புஷ்பம், விபூதி, சந்தனம், இதுமுதலான சிவப்பிரசாதங்களைக் கைகளினாலும் தொட்டவர்களல்லர் புனிதர்களைக் கண்டால் அவர்களுக்கு வழிவிலகாத புல்லர்கள், கொடியபாவங்களுக்குச் சற்றாகிலும் மனமஞ்சாதவர், இரக்கமில்லாத நெஞ்சுள்ளவர்கள், இடியைப்போன்ற மொழியுடையவர்கள், ஆயினும் இதிற்சிலர் இவர்களோ கடவுளினுடைய பெயரைச் சொல்லாத நாவுடையவர்கள், அரசாக்ஷியிற் சென்று பொய்சாட்சி சொன்னவர்கள், அயலாருக்கிடங்கொடுத்து தன்னுடைய இனத்தாரை இம்சைசெய்துகெடுத்தவர்கள், குற்றமில்லாதவர்கள்மீது குற்றம் சுமத்தினவர், கோட்சொல்லிக்குடியைக் கெடுத்தவர்கள் தீமையைப் புகன்று தெண்டங்கொடுக்கப் பண்ணினவர்கள், நிலைமையானத் தவமுடையோர்

களை நிந்தித்தவர்கள், பாகவதரைப் பழிசொன்னவர்கள். இதிற் சிலரிவர்கள் ஒருவர் கொண்டுபோகும் படியான பொருள் அற்பமானதாயிருந்தாலும் அதை யோசியாமல் அப்பொருள் யெடுத்தேகியவர்கள், ஜீவனைக்கொன்றுவழிபறித்தவர்கள், பிச்சை என்று வந்த பேர்களின்மேல் கட்சிகட்டினவர்கள், ஞானிகள் மீதுநாயை கடிக்கும்படி ஏவினவர்கள், அறிவுடைய பெரியோர்களுக்கு ஐயங்கொடாதவர்கள், பாரில்யாவருக்கும் யாதுங்கொடாமல். பாவமானவழியில் பொருளைத்தேடினவர்கள், கனவிலும் ஒருமெய் சொல்லாதவர்கள், சதாகாலமும் பொய்யையே சாற்றிய பாதகர்கள். கற்பா[illegible]ங் கடினமுடைய மனத்தினர்கள்.

இன்னமும் இதிற் சில்ர்கள் திரவியஞ் சம்பாதிக்கும் ஆசையினாலே எதிரிகளாகிய மனிதர்களை யெல்லாம் வருத்தப்படுத்திவருகிற மனிதராக்ஷதர்களாயிருந்தார்கள், நல்ல வேதப்பிராமணர்கள் தேடிய பொருளை அபகரித்து இவரைப்போலொத்த பாவிகளுக்குக் கொடுத்தவர்கள்; புத்தியில்லாதவருடன் நேசித்திருந்தவர்கள், பசுவைக்கொன்று அந்த சர்மத்தினாலான செருப்பைத் தானங்கொடுத்ததுபோல பெரிதான புண்ணியத்தின் வழியேஞாயத்துடனே தேடிவைத்த பொருள்களை யெல்லாம் வேசி வெள்ளாட்டிகள் முதலான தீயமாதர்களுக்குக் கொடுத்தவர்கள், பதிவிரதையானபாவையர்களைக்கண்டு பழிசொன்னவர்கள்.

கேளுமையா இயமதர்மராஜனே இதிற் சிலர்கள், பிரயோஜனக்காலங்களில் அன்னம் பரிமாறும் வேளையிலே ஒருவருக்கொருவிதமாகவும், மற்றவர்களுக்கொருவிதமாகவும் பந்திபேதம்செய்த படுபாவியர்கள், மனையாட்டியை வெள்ளாட்டியாக்கி வெள்ளாட்டியிடத்திலே பொருந்தியிருந்தவர்கள், அரசனை யுத்தமுகத்தில் விட்டு ஓடிப்போய்ப் பிழைத்தவர்கள், யாவரும் இகழும்படியாக நிறைந்த அபகீர்த்தியே அனுதினமும் சம்பாதித்தவர்கள், நன்மை செய்தவர்களை நடுங்கச்செய்தவர்கள், தின்மை செய்தவர்களுக்குத் துணை கூடினவர்கள். இதிற் சிலர்களோ கூடப்பிறந்த சகோதரி சகோதரர்களை நஞ்சிட்டுக்கொன்றவர்கள், கரியானது வேண்டி சந்தனமரத்தைச் சுட்ட சண்டாளன் கதைபோல் ஒருவர் கொடுக்கிற இச்சைகப் பொருளினிமித்தியம் ஆசித்து நல்ல உத்தமர்களை நசியக்கெடுத்தவர்கள், கொடை கொடுக்காத நினைவையே தங்களுக்குறவாகவும் அவிவேகமே தங்களுக்குத்தாயாகவும், கெடு புத்தியே தங்களுக்குத்

தகப்பனாகவும் அடைந்திருக்கின்றவர்கள் இவர்கள், பலமுண்டா
ன பாசக்கயறுபிடித்த காத்தினையுடைய எமதர்மராஜனே இதிற்
சிலர்கள் மூழ்மூடராகிய பொல்லாத மூர்க்கர்களிடத்திலேயுறவு
கொண்டிருந்தவர்கள், ஒருவர் கொண்டுவந்து அடைக்கலமாகவைத்
த பொருளை சிலநாள் சென்றபின் பொருள்வைத்தவர்கள் வந்து
கேட்டாலதை தங்களுடையதென்று வழக்காடிய வஞ்சகரிவர்கள்,
பொல்லாங்கையே தமக்கு மனையாளென்றும் சத்தியமேதங்களுக்கு
தங்கையென்றும் எண்ணிக்கொண்டிருந்த ஆகாலோபிகளிவர்கள்
பச்சாதாபமில்லாத பஞ்சமா பாவிகளிவர்கள். வாருமையா மத்தள
ம்போலும் திரண்டு பலங்கொண்ட தோளினையுடைய எமதர்மரா
ஜனே இதிற் சிலரிவர்கள் பிரியமோடு கொடுத்தபொருளை வாங்கி
க்கொண்டு பின்புகொடுத்தவர் வந்துகேட்டால் இன்றைக் குவெள்ளி
க்கிழமை என்கையில் வந்தது உன்கையில் கொடுக்கப்படாதென்று
சொல்லிய நயவஞ்சகப்பாவியர்களிவர்கள், உத்தமர்களுடையப்பொ
ருளை அபகரிக்க வெண்ணி வாயினாலே இதமாய்ப் பேசி உட்பகை
யைவைத்திருந்த உலோபர்களிவர்கள், பழுதில்லாமல் முன்னால் வா
ங்கினக்கடனை பரிவொடு கொடாதவர்கள், நோயினாலும் மனக்கவ
லையினாலும் இன்னம் பலவிதமான துன்பங்களினாலும் மெலித்திருக்
கப்பட்டவர்கள் உடைய பெண்சாதியைக் கண்டு கூடவேணுமெ
ன்றுஇச்சித்த ஈனலோபிகளிவர்கள், தன்னுடைய பெண்சாதியைக்
காவலோடுவைத்து பிறருடைய பெண்டைப்புணர விரும்பினவர்க
ளிவர்கள். நீதிமுறைமையைத்தவறாத நிலைமையைப்பூண்ட எமதர்ம
மகாராஜனே இன்னமுமிதிற் சிலரிவர்களை சொல்லுமிடத்தில் தம
க்கு வருவனவெல்லாம் பெற்றுத் தாய்கொடுக்கவேண்டிய வைகளு
க்கு ஒன்றுமே கொடாத பெயரைவாய்ந்தவர்கள், இராஜசமூகத்தை
அடுத்து இயம்பக்கூடாத துற்புத்தியை யுரைத்து நல்ல தர்ம அர
சைக் கெடுத்தவர்கள், புஷ்பத்தால் எறிந்தவர்களின்மேல் கூறிய
அம்புகளை உக்கிரத்தோடு எய்தவர்கள், அதுபோல உண்மையைப்
பேசி நன்மையைச்செய்தவர்களுக்கு உயிர்பிழைசெய்த உலோபர்க
ளிவர்கள். அன்றியும் அறைகுவேன் இதிற் சிலரிவர்கள் திருடயெ
ண்ணங்கொண்டவர்களுக்கு இருக்க இடங்கொடுத்தவர்களிவர்கள்,
தங்களுடைய பந்து மித்திராளிடதில் கலகம்பண்ணி கலைத்துவை
த்தகம்பாவிகளிவர்கள், தினந்தோறும் தீயமொழிகளையே கூறுந்
தீமையுள்ளவர்களிவர்கள், தார்சில்லாமல் தமக்குப் பணிவிடை
செய்த ஏழைகட்குத் தகுந்த கூலிக்கொடாத பாவியர்களிவர்கள்

அன்னத்தைக் காசிக்கு ஆசித்து விற்றவர்கள், ஒருவர் பொருளை அவர் மனந்திடுக்கிடும்படியாக களவுசெய்த கசடர்களிவர்கள்; மனுக்கள் ஸ்திரீ-சிசு-பசு முதலான ஜீவன்களைக் கொலைசெய்தக்கொடிய பாவிகளானவர்களிவர்கள். இன்னமும் இதிற் சிலரிவர்கள் அறுமை றயோராய் அந்தணர்களுக்கு அனுதினமும் இடையூறுசெய்த கண்டகர்களிவர்கள், பொய்யாணை பொய்சத்தியம் பண்ணிய பாவிகளிவர்கள், ஒருத்தருக்குப் பாரியான அழகினையுள்ள அரிவையென்னும் பெண்களை அக்கிரமத்தோடு அபகரித்துக்கொண்ட அருஞ்சண்டாளர்களிவர்கள் இனிமையான கடவுளினுடைய தவங்களையும் இழிவுசொல்லி இகழ்ந்த ஈனர்களிவர்கள், புத்திகெட்டுப்போய் உயர்ந்த தெய்வங்களைப் பழித்தவர், இரணங்களிலே வந்து விழுகிற ஈயைப்போல் பாவமான ஐம்புலன் வழியிலே அசடாகிய மனதை விட்டவர்கள், இரக்கமென்பது சற்றுமில்லாத ஈனலோபர்களிவர்களென்று எமதர்மராஜனுடனே யாவும் விபரமாகப் புகன்றனர்.

## எமதர்மராஜன் பாவிகளை தண்டிக்கும்படியாக தூதர்களுக்காக்ஞாபித்தல்.

ஓ முனிவர்களே இந்த விதமாகச் சித்திரகுப்தர் கூறியதைக் கேட்டுணர்ந்த எமதர்ம மகாராஜன் நெருப்பினிடத்திலே நெய்யையூற்றினதுபோலே மகா கோபமுண்டாகி சகலலோகத்தையும் சம்மாரம் பண்ணப்பட்ட பிரளயகால உருத்திரனைப்போல ஒலகாரமாகவொரு ஆர்ப்பாட்டம்பண்ணி செவ்வானம்போலச் சிவந்திருக்கின்ற கண்கள் இரண்டிலும் அக்கினிப்பொறிகள் பறக்க பளபளவென்று பிரகாசிக்கப்பட்டதன்னுடையகைவாளைக்குலுக்கிக் கலகலவென்று நகைத்து பற்களை நறநறவென்றுக்கடித்து உதட்டைமடித்து எதிரில் நிற்கும் பாவிகளைப்பார்த்துத் தலையை அசைத்தனன். அப்படித்தலையை அசைத்த அந்த எமதர்மராஜனைவர் தன்னைச்சூழ்ந்து நிற்கிற எமதூதர்கள் கடுஞ்சொற் பகருகின்றவர்களாயும், சாந்தமில்லாதவர்களாயும், பார்ப்போர்களுக்குப் பயங்கரமுள்ள ரூபிகளாயும், அக்கினி நேத்திரர்களாயும், பருவதாக்காரங்களாயும், பாசபாணிகளாயும் தண்டபாணிகளாயும், முசலபாணிகளாயும், வளைதடி

க்கையருயும், கோதண்டபாணிகளாயும், சக்கரபாணிகளாயும், அஸ்திரபாணிகளாயும், திரிசூலபாணிகளாயும், பாசபாணிகளாயும், சூலபாணிகளாயும், நிற்கின்றவர்களைப்பார்த்து சொல்லுகின்றார். அடா தூதர்களே இந்தப்பாவிகளை அரிவாளாலே கழுத்தையறுங்கள், மேலே கட்டித்தூக்கி குவித்திருக்கின்றமாறுகளாலே அடியுங்கள், உடலை அறுத்து அச்சணுதையைமென்று தின்று சுவையறியும்படி அவர்களுக்குத்தானே கொடுங்கள், பெரியத்தூணிற்கட்டி கொடியக்கூறுள்ள முள்ளம்பினால் சுருக்குசுருக்கென யெய்யுங்கள். அப்படி யெய்தும் இவர்களை யடித்தும் ஓடும்படியாகச்செய்து வேலாயுதத்தினாலே எறியுங்கள், காட்டுப்பன்றியை எலும்பில் சுடுகிறதுபோல தீயிலே புரட்டிப் புரட்டிச் சுடுங்கள்; கூலிக்கூலி அகத்தை பேசின வாயினுள்ளப் பல்லைப்பிடுங்குங்கள். தயவில்லாமற்படிக்கு மிகுந்த கோபத்துடனே உயிர்தூண்டினிற் போடுங்கள், உதைமேல் உதை உதையுங்கள், நெஞ்சைப்பிடித்தழுத்துங்கள் பிறைகுடலைப்பிடுங்குங்கள், இதோ இந்தக் கொடிய வஞ்சகர்களை, கொண்டுபோய்க் கூறுள்ள கோடாலிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக துண்டு துண்டாகத்தரித்துப் போடுங்கள், வாயிலே கையைக் கொடுத்துக் கிழியுங்கள் கழுத்து நுணியிலேற்றி சிரசுருவத்தக்காய்க் காலைப் பிடித்து இழுங்கள் உதிரம் சிதறவாளினாலே மேல்மேல் வெட்டு வெட்டுங்கள், எலும்புகளெல்லாம் ஒடிக்க விழும்படியாய்த் தூக்கி ஆகாயத்திலே எறியுங்கள் அப்படி எறிந்தவர் கீழேவந்து விழுந்தவுடனே பாரசங்கல்லைத் தூக்கி அவர்மேல போடுங்கள் இதோ இவர்களை தலைகள் உருளும்படியாகக் கருங்கல்லின்மேல் மோதி எறியுங்கள், இருப்புத்தண்டத்தினாலே நொருங்க நறுக்குங்கள், அவர்களை வாயைத்திறக்கும்படியாகச்சொல்லி அக்கினியினால்கொடிய விஷத்தை வாருங்கள், சற்றாகிலும் பயமென்பதில்லாத வலுவினையுடைய இவர்களை ஆலெனஅலைந்தலறக் கீழேதள்ளி ஆண்குறியிலே நெடிதான கொடியக் கூறுள்ள முள்ளைவற்றி விடுங்கள், சிசனத்தையும் பீஜத்தையும் நாலுபிளவாகப் பிளவுங்கள், அதை அறுத்தெறியுங்கள், இதோ இருப்பவர்களை எண்ணெய்க் கொப்பரையிலே போட்டு தீமூட்டி எரியுங்கள், வேலாயுதம் சூலாயுதங்களினாலே பேய்காயைக்குத் தகிறதுபோல் குத்துமேல் குத்து குத்துங்கள், இவர்களை மகாகாளிக்குப் பலிகொடுங்கள், அரக்களைக்கொண்டு தேகத்தையும் மார்பையும் கரகரவென்று ராவி விடுங்கள் அப்

படி ராகிய உடலை அறிவாள்கொண்டு அறுத்து துணித்துவிடுங்கள் எழுத்துகம்பியை சிவக்கக் காய்ச்சி நவதுவாரத்திலும் சொருகுங்கள், ஈயத்தைக்காய்ச்சி செவியிலும், வாயிலும் ஊற்றுங்கள், அடா தூதர் களே இவர்கள் பண்ணின பாவத்துக்குத் தகுந்த ஆக்கினை இது தான் இவர்களைக் கொண்டுபோய் அவ்வாறே அணுவும் பிசகாமல் நடத்துங்களென்று எமதர்மராஜன் கூறினர்.

இப்படியாக அவரவர்கள் பண்ணின பாவத்துக்குத் தக்கின தண்டனைகளை கட்டளையிட்டருளியனுப்ப, தூதர்கள் சந்தோஷத் தையடைந்து அப்படியே மகாபாக்கியம் மகாராஜனே என்று தங் கள் கையிலிருக்கும் தண்டாயுதத்தை உயரவெறிந்துப் பிடித்து உயர் ந்திருக்கப்பட்ட வெண்கலக் கதவிட்ட தென்புறத்துக் கோட்டை வாசலுக்குள்ளே அந்தப் பாவிகளையெல்லாம் இழுத்துக் கொண்டு போய் தங்களிலரசரான எமதர்மர் கட்டளையிட்டபடிக்குச் சினத் தோடுக் கண்டித்தும், வீட்டைக் கொளுத்தினபேரை அந்த நெருப் பிற்றனே தள்ளுதல்போல, அவரவர்கள்செய்த பாவத்துக்குத் தக்க தாக அந்தந்த நரகம் இருபத்தெட்டுக் கோடியையும் கொண்டு போய்க் காண்பித்து அதிற்றள்ளுவார்கள் தூதர்கள்.

அப்படித்தள்ளியபோது தீவினையாகிய பாவங்களைச் செய்த பேர்கள் இந்தப்படி அவதிப்படுவார்களென்று தருமப்பிரசங்கமுனி வர் சொல்லக்கேட்ட ரிஷேஸ்வரர் முதலானவர்களும் அதிசயப்பட்டு தலையை கையை யசைத்து நின்றார்கள்.

## நரகவாதைப் படலம்.

### எமதர்மராஜன் சானந்த முனிவருக்கு கூறுதல்.

அப்படி நின்ற முனிவர்களை தருமபிரசங்கமுனிவரானவர் பார்த் து வாருங்காள் முனிவர்களே முன்னொரு காலத்தில் சானந்த முனிவர் எமதர்மராஜனைக் காணவேண்டி எமபுரம் சென்றனர். அப்போது எமதர்மராஜன் அம்முனிவரைக்கண்டு சிம்மாசனத்தை விட்டெழுந்து எதிர்கொண்டு வந்து அவர் பாதத்தில் பணிந்து அழைத்துக் கொண்டேகி ஆசனமிட்டு அமரும்படிச் செய்வித்து பின்பு எமதர்மராஜன் அச்சானந்த முனிவரைப் பார்த்து வாரு மையா முனிசிரேஷ்டரே தாங்கள் அடியேனைக் காணவேண்டி

வந்த காரியம் யாதோ அதனை திருவுளம்பற்றவேண்டும் சுவாமி யென்றனன்.

அம்மொழியைக் கேட்டுணர்ந்த அம்முனிவரானவர் கருணையோடு எமதர்மராஜனைப் பார்த்து ஓ நீதிவழுவாத மன்னனே உன்னுடைய பட்டணத்தையும் பட்டணத்திலுள்ள வீதிகளின் அழகையுங்கண்டு சந்தோஷப்பட்டோம், இனி எமபுரத்திலுள்ள மதில் பொருந்திய நான்கு வாசலையும் இன்றைக்கு யான் பார்க்கவேண்டும் அதை காண்பித்தருளும் என்றனர்.

அவ்விதமாக சானந்தமுனிவர் சொன்ன வார்த்தையை தனது அழகிய காதிற்கேட்ட மாத்திரத்தில் கையைக்குவித்து விற்பலமானவரே உமது சித்தமென்று, அடக்கமுள்ள எமதர்மராஜன் கண்டோர் மனமகிழ்ச்சிகொள்ளும் மேற்குத்திசை கோபுரவாயலுக்குள்ளே அவரை அழைத்துப்போய் அவ்விடத்திலுள்ள வளப்பங்களைச் சொல்லுவான்.

கேளுமையா முனிசிரேஷ்டரே அமிர்தம் பெருகி வெள்ளமானதோ திருப்பாற்கடல் பொங்கி யெழுந்ததோ, அல்லது பரிசுத்தமான சந்திரப்பிரகாசத்தின் ஒழுக்கங்களோ, மிகுந்த சத்தமுள்ள அலைகளோடுங்கூடிய செங்கைப் பிரவாகமோ, மேன்மைப் பொருந்திய வெள்ளத்தாமரையின் கூட்டமோ, என்று பலவிதமாக எண்ணத்தக்கதாய் இவ்விடத்திலிருக்கும் பதவியைப் பாருமென்றான்,

அப்படிப்பாருங்களென்ற எமதர்மராஜன் மறுபடியும் யாது கூறுவானெனில், கேளுமையா முனிபுங்கவரோ தருமசிந்தையுள்ள பேர்கள், பிரருக்கிதம் பண்ணபட்டபேர்கள், அரிதான பிராமணருக்கு அன்னமும் படுக்கச்சயனமுங் கொடுத்தபேர்கள், தங்களுக்குறிமையான சிறந்த உபவாசமிருந்தவருடைய தரித்திரத்தை நீக்கினபேர்கள், சந்தோஷத்துடனே தண்ணீர் வார்த்தபேர்கள், இவர்களெல்லாம் வந்து வாழப்பட்ட இப்பதவியாகும்.

ஆயினும் இன்னமுங்கேட்பீராகவும் கோபமில்லாதபேர்களும், மோகங்களற்றப்பேர்களும் கொலை செய்வதை விட்டபேர்களும், உயுத்தமுனையிலே தன்னை ரட்சித்தவரசன் பார்த்திருக்கச் சண்டைபண்ணிச் சிவனை வீட்டபேர்களும் இவர்களெல்லாம் பூமியிலேயிருந்து இவ்விடம் வரும்போது எண்ணக்கூடாத வைபவத்

துடனே விமானமேறிக்கொண்டு தேவரம்பைகளுடனே இவ்விடத்திற்கு வந்து சந்தோஷமோடு வாழுவார்கள்.

வாழ்க்[illegible]ளும் சந்திரகாந்தத்தினாற்செய்த நல்ல மாளிகை முற்றத்திலே பிரகாசிக்க நவரத்தினங்களிலுயர்ந்த வஜ்ஜிரங்களால் வெள்ளிகளால், வெள்ளைமுத்துகளால் அலங்கரித்த திண்ணையின் மீதிலே அரிதான தேவரம்பைகளுடனே மகிழ்ந்து இன்பங்களனுபவிப்பதைப் பார்த்தருளும் ஐயாவென்று அன்போடுக்கூறினான்.

அவ்வாறு கூறிய எமதர்மராஜன் பின்னும் யாது கூறுவானெனில் மிக்க சவுந்தரியமுள்ள சந்தனகாந்திகளாகிய பெண்கள் அமைந்திருந்து பிரகாசிக்கிற நல்ல யாழும் தங்கள் கண்டமும் ஒன்றுபட்டு தொனிக்கும்படிக்குலவப்பட்ட சந்தாரங்களையும் பாடுவதைக்கேட்டு மனங்குளிர்ந்து பொலிவுடனே இவர்களெல்லாம் வீற்றிருப்பதைப் பாரும் ஐயா என்றனன்.

அப்படி கூறிய மன்னன் இன்னமும் யாது கூறுவானெனில் வாருமையா வளப்பமுள்ள புகழைவாய்ந்த சானந்த முனிவரே என்று வணங்கிவாருமென்று அழைத்துக்கொண்டு மேற்கோபுர வாசலிலிருந்து நினைத்ததற்கரிதான ஒப்பற்ற வடகோபுரவாசலுக்கு அழைத்து வந்து அவ்விடத்திலுள்ள வளப்பங்களைச் சொல்லலுற்றான்.

வாருமையா முனிசிரேஷ்டரே மேற்கோபுரவாசலின் வளப்பங்களைப் பார்த்து மகிழ்ந்தீர் இதோ நினைத்ததற்கரிதாயிருந்த வடக்குதிசையில் நிலைத்திருக்கும் உன்னதமான கோபுரமானது ஒளியில் சிவந்த மாணிக்கம்போலும், உயர்வில் பொன்மேரு பருவதம் போலும்,நிறத்தில் தழைத்த வடவாக்கினிபோலும் விளங்குவதைப் பாரும், ஐயனே என்று அடிபணிந்தனன்.

அப்படி பணிந்து பின்னும் யாது புகல்வானெனில் கேளுமையா முனிவரே அனேககால சூரியர்கள் ஒருமிக்கக்கூடிப் பிரகாசிப்பதுப்போல நல்ல பவழங்களிழைத்த வண்ணமுள்ள மேனிலைமாடமும் உப்பரிகைமேடைகளும் மாணிக்கத்தினாற்செய்த அநேக வீடுகளும் பொருந்தியிருப்பதைப் பாரும் முனிவரே என்றுக்கூறினன்.

அவ்வாறுகூறி மறுபடியும் யாது கூறுவானெனில் பரமேஸ்வரனை வணங்கினபேர்களும், குற்றமில்லாத விரதங்களைச் செய்த

பேர்களும், சிவனடியார்பாதங்களைப் பணிந்தபேர்களும், புண்ணிய சொரூபராகிய பிராமணோத்தமரை தயவுடனே ரட்சித்தப்பேர்களும் இவர்களெல்லாம் இனிய சந்தோஷத்துடனே இருப்பதை தவ லரே பாருமென்றான்.

அப்படிப் பாருமென்றுரைத்து மறுபடியும் யாதுகூறுவானெனில், பொய்யுரையாதப்பேர்களும், தந்தை தாயை சுபத்தியால் வணங்கினபேர்களும், சிவாலயத்துக்குச் செங்கல்லைச் செய்துக் கொடுத்தப்பேர்களும், உத்தமமான நல்ல அன்புள்ளப் பெண்களும், சருவத்திராளுக்கும் உபகாரியானப்பேர்களும், மேலான ஆசாரமுள்ளபேர்களும், இங்கிதமே பேசப்பட்ட நல்லவர்களும் வாழ்கின்றனர் இவர்களைப்பாரும் என்றான்.

என்றவன் மறுபடியும் முனிவரைப்பார்த்து யாது புகலுவானெனில் இதோ இங்குள்ள இவர்கள் தங்களுடலைப் பூமியினிடத்தே வைத்துப் பொங்கிவரும் துன்பத்தைநீங்கி பிரகாசிக்கும் நல்ல தேகிகளாய் உயர்ந்த விமானத்தின்மேல் ஏறிக்கொண்டு தெய்வரம்பையர்கள் நெருங்கி பணிவிடைச் செய்யத்தக்கதாய் என்னிடம் வந்தவர்கள் இவர்களாகும்.

கேளுமையா முனிவரே இப்படியாய் வந்தஇவர்களை, உள்ள மகிழ்ந்து இனிமையுடனே நான்பார்த்து முதன்மையான ரத்தின குண்டலங்கள், இரத்தினக் கடுக்கன்கள், வெண்மையுள்ள முத்தாபரணங்கள் முதலானவைகளெல்லாம் இவர்களுக்குக் கொடுத்து உபசாரத்துடனே அந்தப்பெண்களையும் இசைந்து கொடுத்தேன்.

அப்படிக்கொடுத்தும் மனதுக்கினிமையானப்பெண்களுடனே கூடி உயர்ந்திருக்கப்பட்ட நடன சாலைகளிலே வளமுள்ள அல்லிக் கொடிபோன்ற பெண்கள் நடிக்க மகிழ்ந்து விளக்கத்துடனே இவ் விடத்தில் ஆசையுடனே இருந்தனர்கள், என்று முனிபுங்கவருக்குக் கூறினான்.

இவ்வாறு கூறிய எமதர்மனெனுமவன் அஷ்டதிக்குகள் எங்கும் பரவிய அளவற்ற கீர்த்தியினையுடைய சானந்த முனிவரை அழைத்துக்கொண்டு கிணைத்தற்கரிதான மிக்கவளப்பங்களோடும் சிறந்த தெற்திசையிலுள்ள பெரியவாசலிலே வந்தடைந்தான்.

அப்படி வந்தடைந்த எமதர்ம மகாராஜன் முனிவரைப்பார்த்து யாது புகல்வானெனில் காளுவிதரத்தினங்கள் நெருங்கி இழை

த்து படியோடு பொருந்திய கோபுரம் இதைப்பாரும் அளவில்லாத நவரத்தினங்களாலே தனித்தனியே செய்த மாளிகை மண்டபங்களைப் பாரும் குலாவப்பட்ட பலபல பிரகாசங்கள் கூடிவிளங்குகிற பெருமையைப்பாரும், ஒளியுள்ள இவ்விடத்திலே தர்மமுடைய நல்லோர்கள் மனமகிழ்ந்திருக்கின்ற செயலைப்பாரும், என்றான்.

என்றவன் இன்னமும் யாது கூறுவானெனில் பொருள்மேல் ஆசையில்லாமல் எவர்களுக்கும் புலமையுள்ள வித்தையைச்சொன்ன பேர்களும், அஞ்ஞானமுள்ள வஞ்சனை பகைஞ்ஞரிடத்தும் இல்லாதபேர்கள், அயலாருடைய காரியத்தைத் தன் காரியம்போலப் பார்த்து நிறைவேற்றினப் பேர்கள், பொய்மையும் வன்னெஞ்கமில்லாதபேர்கள், சாந்திராயண விரதம் செய்தபேர்கள், இவர்களெல்லாம் மருவியிருக்கும் இவ்விடத்தைப்பாரும் என்றார்.

இதோ பாரும் இவர்கள் சிவகதையைக் கேட்டபேர்கள், சூரியபகவானுடைய இரண்டு பாதங்களையும் தொழுதபேர்கள், புதிய யாகம் செய்வித்தப்பேர்கள், நம்பினபேரை ரட்சித்தபேர்கள், ஒத்தாரு மிக்காருமில்லாத பரமேஸ்வரனுக்காக தம்முயிரைவிட்டபேர்கள், இப்படிப்பட்டவர்களாகிய பலர் வீற்றிருக்கும் இவ்விடத்தைப் பெருமையுள்ள தவமுனியே பாருமென்று நீதிமுறைமை பிசகாத எமதர்மராஜன் இன்பமோடு கூறினார்.

அவ்வாறு கூறிப்பின்னும் யாது புகல்வாரெனில் கேளுமையா முனிபுங்கவரே ஒருவருடைய பத்தினியைச் சந்தோஷித்துப் பெற்ற மாதாவைப்போல நினைத்தவர்கள், உறுதியுள்ள மனதுடனே ஒரு மனையாளுடனே இருந்து இதுவே விரதமாக இருந்தினப் பெரியவர்கள், தர்மமுள்ளபேர்கள், அயலார் துயரப்படப் பார்த்திராத பேர்கள், அயலார் பொருள்மேல் ஆசைப்படாதபேர்கள், இவர்களெல்லாம் இவ்விடத்தில் இருப்பதைப்பாரும் என்றோதினர்.

ஓதிய மன்னன் பின்னும் யாதுபுகல்வாரெனில் ஓ முனிவரே இதோ இங்குள்ள இவர்கள் இந்திரியவழி செல்லாதபேர்கள், இனிமையில்லாத தரித்திரமுள்ள பேர்கள், நல்ல பிராமணரை பெரியோர்களைவந்து ரட்சித்த அறிவுடையோர்களாகிய இவர்களெல்லாமிந்த இடத்திலே தேவவடிவமும் அழியாதமிக்க செல்வமும் பெற்று பாருதவகிராய ஆபரணங்களுடனே தங்கியிருக்கும் இவ்விடத்தைப்பாரும் தவமுனியேயென்றார்.

என்றவர் மறுபடியும் அம்முனிவரைப்பார்த்து யாது புகல்வாரெனில் எண்ணிலா வாத்தியங்கள் முழங்க, வெண்சாமரை வீச நெடிதான அழகிய குடைகள்சூழ ஒளிதங்கிய தெய்வரம்பையர்களோடே இத்தருமவான்கள் பூமியிலேயிருந்து விமானமேறி சந்தோஷிக்கு மெல்லிடத்திலே வந்து சீக்கிரமா யிந்தப்பதவியிலே இருந்தோர்கள் யாரையும் வெல்லப்பட்ட மன்மதனைவென்ற சானந்த முனிவரே பாருமென்றான் எமதர்மராஜன்.

இன்னமும் யாது கூறுவாரெனில் நெடிதான பொற்கதவிட்டிருக்கும் நீலரத்தினமிழைத்த மனைக்கூட்டங்களைப்பாரும், பொன்னாற் செய்த சந்திரமண்டபங்கள், சாலைகள், ஆசனங்கள், மேடைகள், இதுகளைப்பாரும், இதழ்விரித்த புஷ்பசயனங்கள் தாங்குமஞ்சமிருப்பதைப்பாரும், இடங்கள்தோரும் நந்தவனங்களிருப்பதைப்பாரும், அதைச்சுற்றிலும் தாமரைதடாகங்கள் இருப்பதைப் பாருமென்றான்.

அப்படிப் பாருமென்று மறுபடியும் கூறுவான் சந்தனத்தென்றலுலாவிய சாளரவாசல்கள் பிரகாசிக்கின்றதைப் பாரும், அழகுள்ள வச்சிரமாடங்கள் மாளிகையானதுகளைப் பாரும், சிறந்தகொடிபோலொத்தக் கந்தருவப்பெண்கள், கானராகமுள்ள இயக்கர் பெண்களுடனே இந்த இடங்கடோரும் மிகுந்த இவர்கள் யாவரையும், எங்களுக்கிறைவனாகிய சானந்த முனிவரே பாருமென்று இவ்வாரெல்லாம் சொல்லிக்காட்டினான் எமதர்மராஜன்,

அப்படிக் காட்டிய அந்த எமதர்மராஜன் பின்னும் முனிவரைப் பார்த்துச் சொல்லுகிறான் கேளுமையா முனிசிரேஷ்டரே விசாலமுள்ள, கிழக்கு, மேற்க்கு, வடக்கு இவ்வாசல் மூன்றிலும் மேலான தருமங்களைச் செய்தபேர்கள் இருக்கின்ற பதவியாகும் சொல்லுதற்கரிய துக்கமுள்ள தெற்குவாசலை ரிஷபத்தை ஏறிடாத்தும் பரமசிவனுக்கும் அன்பு செய்யப்பட்ட சானந்தமுனிவரே குற்றமில்லாத உம்மை போலொத்தவர்கள் பார்க்கக் கருதவுங் கூடாதென்று பின்னும் சொல்லுகின்றான்.

கேளுமையா முனிவரே அதோ அந்த தெற்குவாயில் கொடிய பாதகர்களுக்கு ஆலயமாயிருப்பதால் பரிசுத்தமுள்ள சானந்த முனிவரே கேளும், அதில் பெண்களையும், பிள்ளைகளையும், உறவினர்களையும், பசுக்களையும் கொலைசெய்தோர்களும், முறைதப்பி நடந்த

வர்களும், செய்நன்றி மறந்தவர்களும், என்று மிருந்துத் துன்பப்படும் இடமாகும் அதை நாவினாலும் சொல்லக்கூடாது என்றனன்.

இவ்வாறு எமதர்மராஜன் கூறியதைக் கேட்டுணர்ந்த தவசிரேஷ்டராகிய சானந்தமுனிவர் யாது புகல்வாரெனில் ஓ உண்மையுள்ள எமதர்மராஜனே, இதுவரையில் இன்பமான இடங்களைக்கண்டோம், இனி துன்பமான இடமுங்காணவேணும், அப்படி விரும்பும் எமதெண்ணத்தைத் தடுக்கவேண்டாம், நீர்சந்தோஷமாய்த்தானே தென்புரவாசலுக்குப் போகச்செய்யும் என்றுக் கூறினர் சதானந்த முனிவர்.

அவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்டுணர்ந்த எமதர்மராஜன் நடுநடுங்கி வணங்கிச் சுவாமி நீர் என்றும் பரிசுத்தமான இறைவனாகும், எவர்களுந் தொழத்தக்கவர் உமக்கு அந்தக் கொடிய நரகத்தைக் காட்டினால் குற்றமேதேனும் விளையுமோ, பின்பு யான் பிழைக்கும் வகையுமுளவோவென்று உண்மையாய்பயந்தேன் என்மேற்குற்றமில்லை சுவாமி நற்குணமுடைய சானந்தரே, என்றனன்.

அப்படிக் கூறிய எமதர்மராஜன் முனிவரைப்பார்த்து வாருமையா சுவாமி உமதிஷ்டப்படி எழுந்தருளும் என்று தாமரைப் போன்ற தன்கையைக் கொடுத்து ஃஹுமைக்கொண்ட தென்புறவாசலுக்குச் சமீபமாக அழைத்து வந்து மேன்மையுள்ள எமதர்மன் அன்புடனே சானந்தமுனிவரை அங்குகொண்டுபோய் நிறுத்தினான்.

அப்படி நிற்கிறபோது அவ்விடத்திலே யுகாந்தத்தில் பொங்கி எழுந்த சமுத்திரவோசைபோலே பாவிகளெல்லாம் நரகத்திலே வேதனைப்படுகிறதினாலே அவர்கள் அழுஞ்சத்தங் காதிலே கேட்டவுடனே சானந்தமுனிவர் மனதிலே அதிசயங்கொண்டபோது சாத்தி இருந்தக் கதவைத் திறவுகோல்கொண்டு திறப்பித்து வலிவுள்ள எமதர்மன் முனிவரைப்பார்த்துச் சொல்லத் துடங்கினான்,

ஓ சுவாமி தேவரீர் குருமுகூர்த்தமாய் வந்தசானந்த முனிவரே இந்த தெற்குவாசலைப் பார்க்க வேணுமென்று சம்மதித்த நின்னீர், இது கோரமாகிய நரகவாசம் மிக்கக்கோடியதாகும், இதிலே என்னிட ஆக்கினைப்படிக்குச் சமமில்லாத இயமகிங்கிரர்கள் பெரிய தடிமுதலாகியதைக்கொண்டு நானாவிதமாகப் பாவிகளை தண்டிப்பார்கள் என்றோதி முனிவரை அழைத்துக்கொண்டு தெற்குவாய்

னுள்ளே புகுந்துப்போகிறபோது எமகிங்கிராள் நம்முடைய எஜமானர் வந்து விட்டாரென்று எமதூதர்கள் யாவரும் அவரவர்களுக்கிட்ட ஆக்கினைப்படி செய்யமுயன்றார்கள்

அப்படிமுயன்ற அந்த எமகிங்கிராள் சில கொடிய பாவிகளை குடுமியைப்பற்றி இழுத்து வாளாலே உடம்பிலுள்ள சதைகளையெல்லாம் அறுப்பார்கள், பெருமையுடனே சிலபேரை எலும்பொடிந்து அலறிவிழத்தூக்கி எறிந்துவிட்டு நின்றுக்கொண்டு ஆர்ப்பரிப்பார்கள்.

ஆர்ப்பரித்து சில பாவியர்களுடைய இரண்டு காதுகள்தோரும் காய்ந்த வேலாயுதத்தைச் செருகுவார்கள், சிலருடைய உடம்பைச் சின்னபின்னமாகச் சிதையும்படிக் கொத்தி உப்பைத்தெளிப்பார்கள், சிலபாவியர்களுடைய மார்பிலே தூண்டில்முள்ளைச்சொருகிச் செடில்போற் சுற்றியாட்டுவார்கள், பின்னையும் சிலபாவியர்களுடைய நாக்கையருத்துப் பின்புப் பேசும்படிச்சொல்லி அடிமேல் அடி அடிப்பார்கள்.

அப்படி அடித்தும் சில பாவியர்களின் வாயிலே செம்பையுருக்கி யூத்துவார்கள், சில பாவியர்களின் வயற்றைப்பீறிக் கொழுப்புக்குடலைப் பிடுங்குவார்கள், சில பாவியர்களுடையக் கண்களை அம்பினாலே குத்தித்தோண்டுவார்கள், சில பாவியர்களை மல்லாக்கத்தள்ளி யவர்கள் மார்பின்மேல் யேறிக்கொண்டு மூக்குகளையும் உதடுகளையும் அறுத்துரிப்பார்கள்.

உரித்தும் சில பாவியர்களை தலைகீழாகக் கட்டித்தூக்கி குறடாவைக்கொண்டு அடிமேல் அடி அடிப்பார்கள், சில பாவியர்களை எரிகின்ற அக்கினியில் தூக்கி யெறிவார்கள் சில பாவியர்களை அம்பால் வாயில்குத்துவார்கள், சில பாவியர்களை மார்பிலே சொல்லவரிய முளைகளைக் கடாவிப் பிடுங்குவார்கள், சிலப்பாவியர்களை வொழியாத பசிக்குச் சுண்ணாம்பைத் தின்னுங்களென்று அடிமேலடியும் இடிமேலிடியும் இடிப்பார்கள்.

இடித்தும் சிலப்பாவியர்களைச் சந்துகள்தோரும் முளைகளை அடிப்பார்கள், சிலரைப்பிடித்துப் பதைக்கத்தக்கதாக அரத்தினாலே கழுத்தை அறுப்பார்கள், சிலப்பாவியர்களை அடிமடியில் வெந்த சுண்ணாம்புக் கல்லைக்கட்டிக் கிணத்தில் தூக்கிப்போடுவார்கள்

சிலரைப் பன்றிக்கு முன்னாகப் போடுவார்கள், சிலரைத் தலையை யுடைத்து மூளையைக் கொட்டுவார்கள், சிலபாவிகளை கொடியால் கட்டி நாக்குமேல் கதறும்படி விடுவார்கள், சிலரை யானைகாலிலே கட்டி உருட்டுவார்கள், சிலரைத் தேளுள்ள குழியிலே போட்டழுத்துவார்கள் சிலரைப் பொல்லாத படத்தையுடைய பாம்புக்கேணியில் பதைபதைக்க நிறுத்துவார்கள், பின்னையும் சிலரை கொடியவூன் சிதற மிலாறாலே கூவக் கூவ மாறுவார்கள், சில பாவிகளை உலக்கையை கையிலேயெடுத்து வெருண்டுவிழ எறிவார்கள், சிலரைக் கூரிய முனையுள்ள ஈட்டிகளினாலே உருண்டோடக் குத்துவார்கள், சிலரைச் செவக்கக்காய்ந்திருக்கும் இருப்புக் கழுவினிடத்திலே சுருண்டிட ஏற்றுவார்கள், சிலரைக் கூரியவாள்கொண்டு குத்தித்தூக்கி வெருண்டிட வுதிர மொழுகும்படிக்கு விடுவார்கள், கிங்கரர் சிலர் அசந்து போய்ப் பல்லைக் கெஞ்சக் கெஞ்சக் கால்கைகளை மிதித்தொடிப்பார்கள், சிலரைக் கூர்வாள் கொண்டு செதுக்குவார்கள், சிலரைக் கைக்குத்தினால் மருகிவிழுந்து கிடக்கையில் பெரிய பாராங்கல்லை மார்பிலே யெடுத்துவைப்பார்கள், சிலரைக் கிழேதள்ளி புஜத்திலே ஆணிகளைக் கடாவிப் புரட்டுவார்கள் இயமபடாள்.

இப்படி பாவிகள் இயமதூதர்களுடைய காலுதையினாலும், குத்தினாலும், வெட்டினாலும், அடிபடுதலாலும், சுடுகிறதினாலும், கீறுகிறதினாலும், இடிபடுதல்முதலான வேதனைகளால் சரீரம் வலியெடுத்து அழுகின்றவர்களும், புழுதியிலே விழுந்து புரளுகிறபேர்களும், சாவுவராமல் ஐயோவென்று மயங்குகிறவர்களுமாகி பாவிகளெல்லாரும் வருந்தி இப்படிக்குச் சொல்லுவார்கள். பூமியிலே நாம் வாழ்கின்ற காலத்திலே ஐஸ்வரியத்தினாலே கெர்வமுள்ளவராகிப் பல தீமைகளைச் செய்தோம். அந்தத் தீமைகள் முழுமையுமே கூட்டி இப்போது இயமபடாளாய் வந்து நம்மைக் கொல்லுவதைக்கண்டோம். அப்போது நல்லோர்கள் பெரியோர்களிப்படி தீமை செய்யலாகாதென்று அவர்கள் சொல்லுகிற தருமத்தைக் கேட்டிலோமே, பெரியோர்சொன்ன தருமவார்த்தைகள் நுழையாத நமது காதினிடத்திலே ஆயுதங்கள் சொருகப்பட்டோம். ஐயையோ! சிறந்த தலங்களிலே போகாத கால்களால் நரகத்தினிடத்திலே நடக்கப்பட்டு நின்றோம்! மறந்தும் சிவனை வணங்காத தலையினால் இந்த இயமகிங்கரருடைய கால்களை வணங்கினோம்! இயமனை யிப்படி தேடிவருமென்று அறியாமல் பூமியிலே அனேகங் கொடுமைகளை யொழிவில்லாமல்

செய்தோம். நாமெல்லாம் காமம், குரோதம், மதம், மாச்சரியம், இறு
ம்பை, அகங்காரம், நீக்கி யிருந்தோமே! சிவனடியார்களை வணங்
கோமே! நெற்றியில் விபூதியணியோமே! சிவகதை சிவபுராணங்களை
படித்திலோமே! நித்தியராகிய குருசுவாமியினுடைய கடாட்சத்தை
யடையோமே! சிவாலயத்திலே யேகோமே! அப்படி யிருந்த நாம்
இப்போது மன நடுங்கும்படிக்குத் தொலையாத வாதைப்படுகிறோமே
என்று பாவிகள் துக்கப்படும்வேளையில், வீடுவேகின்றபோது அதை
யவிக்கக் கிணறு வெட்டுவதுபோலும், பெருமையான கலியாணஞ்
செய்யும்போது பதார்த்தம்வேண்டி கத்திரிநாத்து விடுவதுபோலும்,
நீங்கள் வாதைப்படு மிவ்விடத்தில் மிகுதியானமனவிரகம் தோன்றி
யாவது என்ன? மறந்துசெத்தோமானால் பிறகு வுயிர் வருமோ! அதி
கமுங் காரசாரங்கொள்ளாமல் வாய்மணக்குமோ வென்றிப்படி இயம
படாக்கள் பாவிகளுடனே பிரதியுத்தரம் சொல்லுஞ் சமயத்தில்
உலகபாவனையா யிருக்கப்பட்ட சனந்தமுனிவர் தயவுண்டாகிப்பார்
த்து புலமையுள்ள ஓகோ! இயமதர்மனே? உன்னுடைய கிங்கரர்க
ளாலே வருத்தப்பட்டு மனதுகலங்கு மிவர்கள் செய்த பாவங்களையெ
ல்லாம் சொல்லுமென்று கேழ்க்க, நமன் கைகளைக் குவித்துக் கும்பி
ட்டு நிர்மலமான சுவாமியே கேளுமென்று சொல்லுகிறான்.

இவன் சிவபூசை செய்யப்பட்ட விரதமுள்ள பெரியோர்களை
தூஷித்தவன், இவன் சொப்பனத்திலேயும் சிவனைக் கும்பிடாதவன்,
இவன் எந்நாளும் விபூதி ருத்திராக்ஷந் தரியாதவன், இவன் பரமசி
வத்திற்கணிந்த புஷ்பத்தைக் கொடுத்தால் அன்புடன் கையேந்தி
வாங்காதவன், புலியானது ஆக்கிரமித்துத் துரத்திக்கொண்டுவந்தா
லுஞ் சிவாலயத்துக்குள்ளே செல்லாத பாவியிவன், வலியுடையோர்க
ளிடத்திலே கோள்சொல்லி நல்லவர்களை கெடுத்த காமியிவன், சிலர்
கொடுக்கிற லஞ்சத்தைவாங்கிக்கொண்டு அனியாயவழக்குச்சொன்ன
பாதகனிவன், தன் பெண்சாதிக்குப் பணிவிடை செய்யத் தாமச
விட்டவ னிவன் பெண்சாதி வார்த்தையைக் கேட்டுத் தயவில்லாமல்
பெண்ணைக் கொலைசெய்தவனிவன், மதத்தினாலே பிராமணருக்குச்
சொன்ன தானங்கொடாதவ னிவன் நன்றாய்விளையும் பூமியை வறிய
வனுக்குக் கொடுத்து பின்னும் வாங்கிக்கொண்டவ னிவன், பாரும்
குற்றமற்ற சானந்த முனிவரே என்றான் இயமதர்மன்.

கற்புடைய பெண்களை மானபங்கஞ் செய்த பாதகனிவன், சுவா
மிக்கே தீவினைபண்ணின பாதகனிவன், நல்ல வீடுகளைச் சுட்டவ

னிவன், விருந்திடாதவனிவன், பொன்திருடின பொல்லாதவனிவன், மதங்கொண்ட கெர்வியிவன், சற்குருவை மறந்தவனிவன், தன்தந்தை யிறந்துபோனால் தாயைப்பார்த்து மனோதுக்கத்தை விட்டுவிடென்றுதேறுதல்சொல்லாமல் நெருப்பிலிட்டுதகனம்பண்ணினவனிவன், மையிட்டு மதத்த கண்களையுடைய பெண்களைக் குத்திக்கொன்றவனிவன், கள்குடித்தவனிவன், பசுவைக்கொன்ற பயித்தியக்காரனிவன், முறைமைதப்பினவனிவன், வித்தைவரக் கள்ளத்தனமாகக் காணிக்கைக்கொடாமற் கற்றவனிவன், உண்டமனைக் கிரண்டகம்பண்ணின வஞ்சகனிவன், எந்நாளும் பாபவழியிற் செல்கின்ற அற்பர்களுக்கும் திருடுகின்றவர்களுக்கு மிடங்கொடுத்து உபகாரம்பண்ணின அறிவு கெட்டவனிவன், மனதிலே பொல்லாத கபடமேயல்லாமல் நல்லபுத்தி யென்றதை யறியாத பாதகனிவன், ஒருகாலத்திலும் மனமிளகாத வைரமுள்ளவனிவன், யாவரையுந் தருமத்தின் வழியிலேபோகவொட்டாமல்பண்ணுகிற முஷ்கரனிவன், ஒரு துணிநிமித்தியமாய் பிராமணனைக்கொன்றவனிவன், ஒருமுதலுமில்லாமல் ஊரிலுள்ள தோப்புகளை யழித்தவனிவன், வற்றாதுண்ணுந் தண்ணீர் குளங்களையும் நந்தவனங்களையுமழித்த பாவியிவன், பாருமையா கிருபை நிறைந்த முனிவரே என்றான்.

இப்படி பாவிகளைக் காட்டிச் சொல்லிக்கொண்டு இயமதர்மராஜன் சானந்த முனிவரை யழைத்துக்கொண்டு நடக்கிற சமயத்தில் அந்தப்பாவிகளை மலைபோலொத்த இயமபடாள் செய்கிற கொடிய வாதைகளை யொருநாவாற் சொல்லி முடியுமோ! அந்தவேளையில் அநேக பொல்லாத பாபங்களைப்பண்ணின மாபாவிகள் எல்லாரும் இயமதர்மன் வருவதைநோக்கி இரங்கி பற்களைக்காட்டி கெஞ்சிக்கொண்டு நின்று அழுது துதித்து தெண்டஞ்செய்து எழுந்து கையை விரித்துக்கொண்டு ஏங்கி சொல்லுகின்றார்கள். அநேகவிதமாய் எங்களைத்தொலையாமல் வருத்துகின்ற இத்துன்பத்தால் சீவனும் போகவில்லையே! என்செய்வோம்! நாங்கள்பண்ணின பாதகமாகிய விருள் என்றைக்குவிடியும் அரசறியாத அமஞ்சியைப்போல பழுதுபடாமல் வந்து பார்த்தீர்கள் எங்களுக்கு உம்மையல்லாமல் வேறேயொரு கதியில்லை இனி எங்களுடைய வருத்தத்தைதீரும் ஐயனேஎன்றார்கள். நல்லோர்கள் பெரியோர்கள் வந்தால் எழுந்திராமல் இந்த பாதகத்துக்கு கழுவி துனியிலே வெகுநாளுட்கார்ந்திருந்தோம், பரஸ்திரீக

ளுடைய ஸ்தனத்திலே நகக்குறிவைத்த பாதகத்துக்கு அந்த விரல் நகத்திலே இருப்பூசி யேற்றப்பட்டு வாடினோம், ஐயனே சந்தோஷத் துடனே பெண்களைக்கட்டித் தழுவின கைகளறுபட்டு வருந்தினோம், பின்னும் பெண்களை முகர்ந்த முகங்களி லடிபட்டோம், பெருமை யுள்ள பூமையை அரசுசெய்து ஜனங்களை வருத்தப்படுத்தின பாவத் திற்கு பாரிவேட்டையிலே குத்துப்படுகிற ஆட்டுக்கிடாப்போல கிங் கரர்களாலே குத்துப்பட்டோம், மோட்சந்தரும் சிவனுக்குத் தரித்த மாலையைவாங்கி யன்புடனே முகர்ந்துகொள்ளாத பரபத்திற்கு மூக் குக ளறுபட்டோம், சிவனுடைய நந்தவனத்திற் புஷ்பித்த பூக்களைக் கொய்து முடித்ததலையிலே மூளையடிக்கப்பட்டோம், சிவன் கோயி லிலேதொடுத்த செருப்புடனே சென்ற கால்கள் இன்றுகோடாலி கொண்டு தறிக்கப்பட்டோம், சிவாலயத்திலே பெண்களைச் சேர்ந்த பாவத்திற்கு ஆண்குறியில் முள்ளேற்றப்பட்டோம், சண்டைமுகத் திலே ஆற்றாது வோடினபேர்களையும், ஆயுதங்களைக் கைவிட்டு கும் பிட்டபேர்களையும், உதிரத்திலே விழுந்து கிடக்கிறபேர்களையும், புல்லைக் கவ்வினபேர்களையும், சேவகத்திறங்குலைந்து காலைப்பிடித்து தலையிலேவைத்துக் கொண்டபேர்களையும், யுத்தகளத்திலே இவர்களை யெல்லா மிரக்கமில்லாமல் கொன்றபாவங்களுக்கு விடுதற்கரிய பல பலவாதைகள்பட்டோம் அப்பாடுகளையுஞ் சொல்லப்படுமோ, இப்படி நாங்கள் செய்த பாபங்களுக்குத் தக்க வாதைப்பட்டபடியினாலே நீதிமுறைமை தப்பிநடந்த பாவஜென்மம் போச்சுது, எங்களை ரட்சி ப்பது உமதுகடமை, கோபத்தைவிட்டுவிடும்? இனிவாதை பொருக்க முடியாது ஐயனே! சற்றே தயவுபண்ணவேணும், நெருங்கி வந்து காலிலே கும்பிட்டு விழுந்தால் கோபிப்பது தருமமோ! எங்களரசே! என்றிப்படி முறையிடுகிற பாவிகளைப் பார்த்து இயமதூதர் அதிக கோபத்துடன் சொல்லுகிறார்கள்.

ஓ பாவிகளே! நீங்களின்னம் படும்பாடு பின்னாலே கிடக்கிறது, இப்போது சொல்லுகிறதெல்லாம் தலையைவெட்டும்போது காதுக்கு மன்றாடுதல்போலும், போவென்று பிடரியைப் பிடித்து தள்ளும் போது யேகாந்தம் பேசுகிறோமென்று சொல்வதுபோலு மிருக்கின் றது. உங்கள் சிவனுக்கும் உடலுக்கும் வருங்கேட்டை யறியாமல் தருமந்தப்பி நடந்தவர்களே ஊருக்கு நாளைப் பயணமென்றபோது இன்றைக்கே இளைப்பெடுத்தல் போலவும், ஆறுகாத வழியென்ற போது காலிலிருக்கும் செருப்பைக் கழற்றுகிறதுபோலவும், நீங்கள்

பட்டபாடு போதுமென்று முறையிடுகிறீர்களே! இப்படி முறையிடுவதை எங்கள் எஜமானர் இயமதர்மராஜன் கேட்டால் காட்டிலே தீப்பட்ட சந்தனமரமும் வெந்து விழுதல்போல் இப்போது எங்களுக்கு ஆக்கினைவந்துநேரிடும். ஓ பாவிகளே! உங்களிடத்தில் எங்கள் மனம் சற்றாகிலு மிரக்கமில்லை. கொடுமைசெய்யும் இந்தவாதனைக்குத் தானே நின்று களைக்கிறீர்கள். பின்னால் வருகிறது உணரமாட்டீர்கள். இந்தப் பூமிகாயமுள்ளளவு மிருக்கிற நரகமெல்லா முங்களுக்கிடமல்லவோ! வலைக்குளகப்பட்ட மான் அழுவதினாலே வலைக்காரன் விடுவானோ! அறிவில்லாத பாவிகளே! என்று சொன்னார்கள்.

இவ்விதமாக இயமபடாள் சொன்னசொல் ஆலகாலவிஷம்போல காதிலேபட்டமாத்திரத்தில் சபையில் மன்றாடப்போய் வில்லங்கம் வந்ததென்று மனது நொந்து நெருங்கிய துக்கமாகிய நெருப்பிலே முழுகிப் பாவிகள் நடுங்கும்வேளையில், வெற்றியுள்ள புலன்களையெல்லாம் ஜெயித்த சானந்த முனிவர் இயமதர்மருடனே சொல்லத்தொடங்கினார்.

ஓ! இயமதர்மனே, இவ்விடத்திலே தருமமில்லாத பாவிகளை நீவாதித்து பண்ணுந் தண்டனைகளை ஹரி பிர்ம்மாக்களாலே விலக்கப்படாது. இவர்கள் வாதையை நம்முடைய பரமேஸ்வரனே விலக்க வல்லன், அதுநிற்க, இந்தப் பாவிகளையெல்லாம் சரீரம்பிளந்துபோக அடித்தும், அம்பினாலெய்தும், கொய்தும், வறுத்து அம்மியில்வைத் தரைத்தும், இரண்டாகப் பிளந்தும், ஆணி கடாவியும், சரும முரித் தெரிந்தும், ஆக்கைபோக இரண்டாய்க்கிழித்தும், உதைத்தும், இப்படி யழித்துவிட்டாலும் உயிர்போகாம லிருப்பதென்னோ? ஒப்பற்ற வெகு துன்பமுற்றிருந்த வுடம்பை அக்கினியிலே கொளுத்த சாம்பலாகப் போயிற்றல்லவோ? இங்கே யிந்த உடம்புவந்த செயல் நம்முடைய இருதயத்திலே அதிசயத்தை உண்டாக்குகிறது. இது ஒன்று தப்பாமல் சொல்லென்றுகேழ்க்க, இயமதர்மராஜன் வாய்பொத்திக் கொண்டு சொல்லுகிறான். ஓ! மகானுபாவா! வரிபொருந்திய பாம்பு சட்டை கழற்றிவைத்து போகிறதுபோல பூமியிலே செத்த மனிதரெல்லாரும் பூதனா சரீரமாகிய தூலத்தைவிட்டு (சத்த-பரிச-ரூப-ரசகந்தம்—மனம்—புத்தி யாங்கார மென்னு மிந்தப் புரியஷ்டக ரூபந்தானே பிரிதற்கரிய) யாதனா சரீரமாகவெடுப்பித்து என்னுடைய தூதர்கள் பிடித்துக்கொண்டுவர இங்கே வருவார்கள் மறிக்கிறதில்லை. மறி

த்தாலும் சஞ்சீவி வாயுவந்து பிரவேசித்து எழுப்பிவிடும். இவ்விடத்திலே பாவிகள் பின்னையும் வெகு வாதைப்படுவார்கள்.

பின்னும் நமன் சொல்லுகிறான். நல்ல சிவாலயத்தைப் பிடுங்கினவ னிவன். சிவனுக்கு விட்ட வயலிலே கல்வெட்டியிருந்த சிவமுத்திரையை மாற்றி மறுமுத்திரை யிட்டவ னிவன், சிவாலயத்திற்குப் பொருந்தி நடக்கும் போகத்தை தவிர்த்திட்டவ னிவன், சின்ரையைச் பசுவிற்சுரந்த பாலைக்கறந்து குடித்ததுஷ்ட னிவன், சிவனுக்கு தரிக்கிற ஆபரணங்களையும் சிவ திரவியங்களை அபகரித்துக் கொண்ட பதகனிவன், சிவனடியார் மடங்களுக்கு வருகிற பிரயோசனத்தைத் தடுத்துக் கெடுத்துவிட்ட அவலமானவ னிவன், பாவத்தைக் கெடுக்கும் தெய்வவுருவத்தை யெடுத்தழித்த பெரும்பாவி யிவன், புல் மேயாமல் ரிஷபத்தின் காலைக்கட்டின நரக னிவன், சிவனடியார்களுடனே எதிரிட்டுவாதுபண்ணினவனிவன், தாயார்களையும் ஞானமுள்ள விவேகிகளையும் கொன்றவ னிவன், விரதமுள்ளபேர்களையும் தவமுடைய விருத்த சந்நியாசிகளையும் அடித்தவ னிவன், இராஜ்ஜியபாரத்தைப் பாவிகளிடத்திலேகொடுத்து உலகத்தையழித்தவ னிவன், அயலார் வார்த்தையைக் கேட்டுத் தனக்குரிய பெண்சாதியைக் கொன்ற அவலமானவ னிவன், ஈன குணமுள்ள ராஜாவி னிடத்திலே மந்திரியாயிருந்த பொல்லாத கடேரி யிவன், ஆசையுடனே பொல்லாத தீமைகளையே பண்ணி இறந்த பொல்லாத முரட னிவன், இணையில்லாத ஞானமுள்ள சானந்தமுனிவரே பாருமென்றான்.

கோளானது எவர்களுக்கும் குலநாசமும் குணநாசமும் பண்ணும். மூண்டெரப்பட்ட கோபத்திற்குக் கோளே மூலமாயிருக்கும், கோபத்தினாலே ஒழியாத வெகு தீவினைகள் வளரும், இந்தத்தீவினைகளே அவனை நரகத்திலே யழுத்தும், கோபமே பாவத்திற்கு ஏதுவாயிருக்கும், கோபமே பலத்தைக் கெடுக்கும், கோபமே துன்பங்களைக் கொண்டுவந்துவிடும், கோபமே திருவருளை நீக்கிவைக்கும், கோபமே ஈனத்துக்கெல்லாம் வீடாயிருக்கும், கோபமே நரகத்திலே தள்ளும், கோபந்தானே யென் முன்னே கொண்டுவரும். ஐயா குணபர்வதம் போலொத்த சானந்த முனிவரே என்றான்.

தபவுடைய அரிச்சந்திரன் முதலான அரசர்களெல்லாம் பாவிகளாகிய துஷ்டரை நிக்கிரஹம்பண்ணி நல்ல விவேகமுள்ள புண்ணியாத்மாக்களைப் பரிபாலித்து ராஜ்ஜியபாரஞ்செய்து இருளற்ற ஜோதிமயமாயுள்ள சொர்க்கத்தில் போயிருந்தார்கள். இங்கே யிருக்கிற

இவர்களெல்லாம் பாதகமேபொருளாகவெண்ணி அசேதனமான நரகத்திலேவிழச் செய்யப்பட்டார்கள். பெரிய உலகத்தை யாண்டு இறந்தபிறகே நரகமுண்டென்று ஆசாரியர்கள் சொல்லக்கேட்டு ஆராய்ச்சிசெய்து தன்னிலையி னிற்காமல் மனம்பொருந்தாத பொல்லாத பாவங்களைப்பண்ணின இந்த நீசர்களுக்கு மோக்ஷம்பொருந்தாதென்று நமன் சொல்ல, சிறப்புடைய சானந்த முனிவர்கேட்டு நகைத்து அதிசயித்துச் சொல்லுகிறார்.

ஓ! இயமதர்மனே! தாவப்பட்ட குதிரையுள்ளமட்டும் வையாளியுண்டா யிருப்பதுபோல தீயாகிய இப்பாவிகளுக்கு உக்கிரமான இந்த வேதனை யென்றைக்குப்போகும்? சொல்லுதற்கரிய முக்திமோக்ஷம் என்றைக்குக் கிடைக்கும்? சிவந்த ஆம்பலுக்குப் பகைவனாகிய சூரியன் புத்திரனே சொல்லும் நானறியவேண்டுமென்றார்.

ஐயனாகிய எமது கர்த்தன்சொன்ன கிருபையுள்ள சொல்லைக்கேட்டு கைகுவித்து கும்பிட்டு வஸ்திரங்களை பறக்காம லொடுக்கிக்கொண்டு மெய்யுள்ளவனே! கருணைமலையே! பாவமில்லாத மகா தவத்தையுடைய சானந்தமுனிவரே! கேளுமென்று பனிரென்று இருட்டுகளை நீக்கி ஓங்கிய சூரியன்பெற்ற நமன்சொல்லலுற்றான். ஆலகாலவிஷமானது ஒப்பற்ற பரமேஸ்வர னகண்டத்தைவிட்டு நீங்கினாலும், விநாயகமூர்த்தி திருக்கலியாணஞ் செய்துகொண்டாலும், உண்டானஎழுகிழமையல்லாமல் பின்னுமோர்கிழமைவந்தாலும், பர்வதங்களானது கரைந்துபோனாலும். விரிவான பூமியைச்சுமந்திடாமல் ஆதிசேஷன் போய்விட்டாலும், சமுத்திரங்களெல்லாம் வற்றி பெரியலோகங்கள ழிந்துபோனாலும், இங்கே யிருக்கிற இந்தப்பாவிகளுக்கு இதற்குமேற்பட்டகதி யில்லையென்றான்.

இப்படி இயமதர்மராஜன் சொன்னதைக்கேட்டளவிலே சானந்த முனிவர் குருநகைக் கொண்டு சபாநாயகருடைய பஞ்சாட்சரம் நம்மிடத்திருக்க யிவர்கள் வல்வினைதீர்க்கிறது ஒருஅருமையோ? பொருந்திநிற்கும் பலகோடி பாதகமலைகளுக்கு நெடிதான வஜ்ஜிராயுதமல்லவோ இந்தப்பஞ்சாட்சரம், இதனை இவ்விடத்திலே பொருந்திய நல்லதிவில்லை. ஆனபடியினாலே இங்கேசொல்லப்படாதென்று திருவுளத்தி லெண்ணிக்கொண்டு சொல்லுகிறார். இயமதர்மனே! நம்முடைய பரமேஸ்வரன் திருமுடியிலே யொருமலர் தரித்தவன், அந்தப்பலத்தில் தனது தலைமுறையிலுள்ள கோடி வங்கிஷத்தாரையும் சொர்க்க

லோகத்திலேற்றி வுற்றரிப்பன். நிர்மலமான திருவெண்ணீறு தரித்தவன்மேலே பாவந்தொடாதென்று வேதநூல்சொல்லக்கேட்டோம். இந்தப் பாதகரிடத்திலே இப்படிப்பட்ட செயல்கள் சற்றாகிலுமில்லையோ சொல்லும். இனிமையானு வேதவாக்கியங்கள் பொய்யல்லவே தேவர்களாலும் காணக்கிடையாத பரமேஸ்வரனுக்கு தரிக்க எவ்விடங்களிலு முண்டாகப்பட்ட எருக்கமலர், முள்ளிச்சத்திரிமலர், பச்சையறுகு வேணுமென்றால் அவ்விடத்திலில்லையோ! தரிக்கிறதற்கு நீரில்லையோ! இவர்க ளென்றைக்கு தரித்தால் இந்தத்துயரம் ஏன் இவர்களுக்கு வருமென்று சாநந்தமுனிவர் சொன்னார். அதைக் கேட்ட இயமதர்மராஜன் ஒடுங்கி சொல்லுகிறார்.

## சிவமகிமை.

பஞ்சேந்திரியங்களை ஜெயித்த பரமபுருஷனே! வேதவாக்கியத்தை பொய்யென்றுசொல்லப்படுமோ? ஒருதேவதாசிக்கு மணமுள்ள மலரெடுத்து வருகையில் கீழேவிழுந்த பூவைச் சிவனுக்கே யாகுமென்று அறிவில்லாமற்சொன்ன பிராமணன்கதி பெறவில்லையோ! ஐயா சானந்தமுனிவரே! இப்படிப்பட்ட கதைகள் சொல்லவேணு மென்றால் சொல்லி முடியுமோ முடியாது. கடல்சூழ்ந்த பூமாதேவிக்கு ஆபரணம்போல சிறந்த காம்பிலிமா நகரத்திலே எச்சதத்தனென்றொரு பிராமணனவன் சிறந்த குணமும், அறத்திற்கடல்போலும், குற்றமற்ற மெய்வார்த்தையும், தவநெறி தவாத பெருமையும், பரிசுத்தமும், ஷட்கருமங்களையும் மறவாமல்செய்து சிவனையே துதிக்கு நியமமுள்ளவனாய் பூமண்டலம் புகழும்படிக்கு வாழ்ந்தான். சிவனுக்கன்பனான அந்த எச்சதத்தனிடத்தே கரும்பினிற் பிறந்த பூப்போலும், புண்ணியதீர்த்தத்திலே பாச்சியுண்டானதுபோலும், திருப்பாற்கடலிலே உண்டான கொடிய ஆலகாலவிஷம்போலும், பலபலகொடுமைகள் நிறைந்த குணநிதி யென்றொரு பிள்ளை பிறந்தான். அந்த குணநிதியென்பவன் நித்திய கருமமான சந்தியாவந்தனம் காயத்திரி முறைமைப்படி செய்யான், நீதிமுறைமைக ளொன்றையு மறியான், பெரியோர்க ளிருக்குமிடம் போகான், உண்மையைச் சொல்லான், தன்னைப்போலொத்த துஷ்டர், மூர்க்கர், காமிகளுமான இவர்களிடத்திலே சினேகித்து பொய்யுடம்பைச் சதமாகவெண்ணி நியமம் நிஷ்டையில்லாதவனாய்த் திரிந்தான்.

# இராமலிங்கசுவாமிகள்

## திருஅருட்பா.

"பரமேதுவினைசெயும் பயனேதுபதியேது பசுவேதுபாசமேது
பத்தியேதடைகின்ற முத்தியேதருளேது பாவபுண்யங்களேது
வரமேதுதவமேது விரதமேதொன்றுமிலை மனம்விரும்புணவுண்டுநல்
வத்திரமணிந்துமட மாதர்தமைநாடிநறு மலர்சூடிவிளையாடிமேற்
கரமேவவிட்டுமுலை தொட்டுவாழ்ந்தவரொடு கலந்துமகிழ்கின்றசுகமே
கண்கண்டசுகமிதே கைகண்டபலனெனுங் கயவரைக்கூடாதருள்
தரமேவுசென்னையிற் கந்தகோட்டத்துள்வளர் தலமோங்குகந்தவேளே
தண்முகத்துய்யமணி யுண்முகச்சைவமணி சண்முகத்தெய்வமணியே."

தாயாரை தன் வசப்படுத்திக்கொண்டு வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் கொண்டுபோய்த் தன்னைப்போலொத்தபேர்களுக்கும் கிள்ளைபோலு மினிய மொழியையுடைய விலை மாதர்களுக்கும், சற்றேனு மொழியில்லாது சூதாடும் அற்பர்களுக்கும், அந்தப் பொல்லாத குணநிதியென்பவன் கொடுத்துக் கொடுத்துப் பாதகமே செய்துவந்தான். இப்படி துன்மார்க்க நடத்தையையுடைய பிள்ளையை தகப்பனானவன் தான் ஆலோசித்து இவன் பிள்ளையோ! நம்மைக் கொல்லவந்த சத்துருவோ! என்று மனதிலெண்ணி எச்சதத்தன் தன் பெண்சாதியைப் பார்த்து பெண்ணே! பாவியான மகனைக்கொண்டு நல்ல வீட்டைக்கெடுத்தாய் நகைகள், அரிதானபணம், வஸ்திரமுதலியனவும் இல்லற சுற்றமும் உன்னால்போயிற்று. என்னிடத்தேயிருந்துக்கொண்டு இப்படி செய்வதுனக் கழகோ! பாவி! நீயும் பெண்ணோ! பொல்லாத அரக்கியல்லவோ நல்ல நெறிதப்பின பிள்ளையையும் பெண்சாதியையும் நரகத்தி லழுந்தச்செய்யும் இந்த நடத்தையைப்பெரியோர்களறிந்தால் என்னை இகழ்வார்கள். ஆனபடியால் இந்தவீட்டைவிட்டு தாயும் பிள்ளையும் போங்களென்று பிராமணன் சொல்ல, தாயானவள் தான்பிறந்த வீடுபோய்ச் சேர்ந்தாள். அதற்குமேல் இவன் குணநிதியோ! அல்லது துர்க்குணநிதியோ என்று எல்லாருமிகழ்ந்துவிட்டபடியினாலே அவன் ஏங்கி ஒருசவமானது தனியேநடந்ததுபோல அந்த உயர்ந்த காம்பிலிமா நகரத்தை விட்டு நீங்கி இரண்டு கண்ணிலும் ஜலம் தாரை தாரையா யொழுகும்படி யழுதுக்கொண்டு உற்றூர் உறவின்முறையார் பதரென்றென்னைத் தள்ளிவிட்டார்கள். ஒருவித்தையு மறியாது அவலமாயிருந்தேன், கையிலொரு காசாகிலு மில்லையே, என்றிப்படி விசாரத்துடன் நடந்துக்கொண்டு

மிதித்தகொம்பும் விட்டுப்: பிடித்தகொப்பும் விட்டவனாகினேனே: ஐயோ! கொதித்தெழுந்த பசிக்கு சாதம் எந்தவிதத்திலே கிடைக்குமென்று மனது கலங்கி அதி வருத்தமாய் செழிப்புள்ள ஒரு கிராமத்தினருகே கால் தடுமாறினவனாய் மெல்லெனப்போய் ஒரு மரத்தினிழலிலிறங்கி பலபலவிதமாய் எண்ணுகிறான். பொற்கிண்ணியைவைத்து என் தாயானவள் பரிமாறுகிற சாதமும், பருப்பும், புத்துருக்கு நெய்யும், நல்ல கறிவகைகளும், அப்பள முதலான பலகாரங்களும், தயிரும் சர்க்கரை கலந்த பாலும், மாம்பழமும், பலாப்பழமும், வாழைப்பழமும், தனித்தனியே சாப்பிட்டதை நினைத்து வாயூறி எனக்கினி யசப்படுமோ வென்றும் பிரமன் லபி இப்படியோவென்று எண்ணிக்கொண்டி யிருக்குமளவில் பொழுதுபோயிற்று. பாசிவனருளைப் பெற்று வாழும் நல்ல சிவராத்திரியானது அன்றைக்கு வந்தது. சிவராத்திரி வரவும் அந்தப் பாவியான குணநிதி, பசியுபாதையினாலே தன்னுடம்பு தள்ளாடி அன்னத்தின்பேரில் நினைப்புண்டாகி அந்த கிராமத்திற்குள்ளேபுகுந்தான். ஐயனாகிய பரமசிவனுக்கு நிவேதனம் பண்ணவேண்டி ஓதனம் அமைத்த பொற் பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு ஒரு தெய்வப்பிராமணன் கோவிலுக்குள்ளே போனான். நட்புடனே வரப்பட்ட அந்தத் தளிகைச் சாதத்தின் நல்ல மணத்தினாலே அது புஷ்பமஞ்சரிச் சோறென்று நினைவுகொண்டு கூடவே சிவாலயத்துக்குள்ளே புகுந்து அந்தச் சாதத்தைத் திருடித் தின்னவேண்டுமெனும் ஆசையுடனே கோவிலுக்குள்ளே புகுந்திருந்தான் அப்படியிருக்க, அங்குள்ளபேர்கள் பரமசிவனுடைய திருமுடிக்கு நல்லெண்ணெய், சுத்தஜலம், இளநீர், எலுமிச்சம்பழச்சாறும், பால், பழம், தேன், சருக்கரை, நெய்யாகிய பஞ்சாமுத முதலான அபிஷேகங்களைச் செய்து வாசனையுள்ள மிருதுவான புஷ்பங்கள், வில்வங்களைக்கொண்டு பயபக்தியுடனே அர்ச்சனை பண்ணினார்கள்.

பின்னும் உயர்ந்த ஆகமசாஸ்திரவிதியையோர்ந்த வைதிகவேதியர்கள் பரமசிவனுக்கு பரிமள தூபமும், கற்பூர தீபங்களும், கண்டனாதத்துடன் உபசரித்தார்கள். என்னை யாண்டருளிய பரமசிவனுக்கு அன்னமுதலானதை நிவேதனஞ் செய்தனர்கள். அன்பர்கள் பத்தியுடனே சிவனைத் தோத்திரஞ்செய்து வணங்கினார்கள், சந்நிதிக்கு முன்னே பஞ்சவாத்தியமும் முழக்கினார்கள், கங்கையைத் தரித்த சடையையுடைய பரமசிவனுக்குமுன் ஆலவட்டம் பணிமாறினார்கள், வெண்சாமரை வீசினார்கள், நல்லகண்ணாடி காட்டினார்கள், பிறப்பி

றப்பில்லாத பரமேஸ்வரனுடைய கோவிலைச் சிலபேர்கள் வலமாகப் பிரதக்ஷணம் வருவார்கள், சிலர் பரமசிவனை மனதினிடமாக வைத்து தியானம்பண்ணுவார்கள், சிலர் ஞானந்தரப்பட்ட புராதனா! சங்கரா! நடேசா! பரம்பரனே! கங்காதரனே! சின்மயரூபனே! சதுர்வேத முந்துதிக்கும் சிவனே! என்று சொல்லித் துதித்தார்கள். பிரகாச முள்ள ஞான சொரூபனான நமது பரமேஸ்வரர் கோவிலுக்குள்ளே அங்கங்கே இருந்துக்கொண்டு சிலபேர்கள் சிவபுராணங்களைப் படித் தார்கள். அதைக்கேட்ட சிலர் ஆநந்தமடைந்தார்கள். விபூதிமான்மி யம் உருத்திராக்ஷமான்மியம் உச்சரித்தவர் பாவத்தை நீக்குமெனத் தெளிவாகவிளங்கிய பஞ்சாக்ஷரமான்மியமுதலாகிய இவைகளைசிலர் உற்சாகத்துடனே அந்த ஆலயத்திற் படித்துச்சொன்னார்கள், சில பேர் பாடினார்கள். சிலபேர் சிரசின்மேல் கையைக்குவித்துக்கொண்டு நின்றாடினார்கள். சிலபேர் அன்பிற் பரவசரா யிருந்தார்கள் சிலபேர் கருணையுற்ற பரமசிவனைத் தெரிசித்தார்கள், சிலபேரிதுவேநல்லதென் றார்கள். இந்தப்படியாக மூன்றுஜாமவரையில் தோத்திர முதலியன வும் நடந்தேறினபின்பு இவ் வாலயத்துக்குள்ளே வந்து நெருங்கியி ருந்த ஜனங்கள் அயர்ந்து கண்ணுறங்கினார்கள். அச்சமயம் அந்தக் கொடும்பாவி அந்த அன்னத்தைக்கவரும் சமயமிது வெனக்கண்டு எழுந்திருந்து பரமசிவ னெழுந்தருளிய கர்ப்பகிரகத்திலே போய் சற்றே கதவைத்திறந்து உள்ளே புகுந்துபார்க்க அந்தத் தளிகை யைக் காணுதபடியினாலே அப்போது சுடர்மழுங்கி வரப்பட்ட தீபத் தைத் தன்விரலினாலே தூண்டி வெளிச்சமுண்டானதின் பிறகு தளி கையைக்கண்டு பந்தபாச மென்னும் வினைநீங்கிப் போகிறவனதை தொட்டெடுத்துக்கொண்டுவருகையில் பயத்தினால் கால்கள் தடுமாறி நித்திரைசெய்யுமவர்களை மிதித்து மிதித்துக்கொண்டு கோவிலைவிட்டு நீங்கிப்போகிறவனை எல்லாரும் எழுந்து அதோ திருடன்போகிறான் பிடியுங்கள், பிடியுங்கள், கொல்லுங்கள் என்று சொல்லித் துரத்தி வருகிறவேளையில் ஒருவன் அம்பினாலெய்ய அந்த அம்புபட்டு கீழே விழுந்து இரத்தம் வழிந்தோடச் சீவன்விட்டான். அந்தப் பார்ப்பா னைக் கோபாக்கினி மூண்ட எமதூதர்கள் வர்மங்கொண்டு அவ னைப்பிடித்துவருகிற வேளையில், கைலாசத்தி லிருந்து சிவதூதர்கள் வந்து எமதூதர் கையிலே யகப்பட்டவனை அங்கே விடுவித்து இவனுக்கு இந்த இயமவாதனை தகாதென்று கைலாயத்திற்குக் கொ ண்டு போகும்போது, சிவதூதர்கள் பின் எமதூதர்கள் தொடர்ந்து போய் கும்பிட்டு ஓ கோ பெரியோர்களே! சற்றேநின்று கேளுங்கள்.

இந்தப்பிராமணன் நிர்மலமான உருத்திராக்ஷமணி பூண்டவனல்லன், நெற்றியிலே விபூதிதரித்தவனல்லன், பரமசிவன் சிரசிலே சாத்தப்பட்ட பூவின்பேராயினுங் கேட்டவனல்லன், மகாதுஷ்டன், அர்த்த நடத்தையுள்ளவன் இவனை நீங்கள் எங்களிடம்வந்து விடுவித்துக் கொண்டுபோகிறது என்ன ஞாயம்! நாமோ சிவதூதர்கள், நமக்கெதிராய் யார்மறிப்பார்களென்று அநியாயமாய் ஞானமான அறிவுள்ள நீங்களிப்படி நியாயந்தப்பி செல்லுவது தகுமோ, சமுத்திரம் பெருகிக் கரைபடர்ந்தாலும், இராஜாக்கள் கொடுமை செய்தாலும், ஒழுக்கமுள்ள பெரியோர்கள் பாவஞ்செய்தாலும், தடுக்கிறவர்கள் யார்? விஷம்போலப் பொல்லாத பாதகனை இவனை நீங்கள் கைலாயத்திற்கு அழைத்துப்போக ஞாயமேதென்று ஒலமிடுகிற என் தூதர்களைப்பார்த்து சிவதூதர்கள் சொல்லுகிறார்கள். மேலோர்களால் விரும்பப்பட்ட சிவராத்திரி தினத்தில் இவன் புசிக்க அன்னங் கிடையாமலிருந்த நல்ல உபாசனையாயிற்று, அன்னத்தைதிருட நினைத்தாயினும், சிவராத்திரியில் நித்திரை விட்டவனாயினான், சிவனைப் பூசைபண்ணுநவனையும், சிவனுக்குப் பூசைவரிசைப்படி பண்ணுகிறதைக் கண்டானானபடியினாலே, இவன் பாவமுள்ளவனே இதுவல்லாமலுஞ் இவனுக்குமுன்னாக அன்னந்தெரிய நினைத்தாலும் சுடர்மழுங்கி யிருந்த விளக்கை விரலினாலே தூண்டினான், விதிமுடிந்துபோனாலும் சிவராத்திரியாகிய இன்றைக்கு சிவசந்நிதிக்கு முன்னே இறந்தான். இதுகளை விட வேறேதவமுமுண்டோ! சிவதூதர்களாகிய நாங்களும் நின்று சேவிக்கப்பட்ட குணத்தை யுள்ளவனிவன், பரமசிவனுக்கு இனிமையானவனிவன். இயமதூதர்களே! இவனுடைய பாதத்தைவணங்கி உங்கள் வினைதீர்ந்து வந்தவழியே போங்களென்று சிவதூதர்கள் சொல்லிய பிறகு பொன்னாலும் இரத்தினமணியாலுஞ் செய்த விமானத்திலே அந்தப்பிராமணனை ஏற்றிக்கொண்டு அநேக சிறப்புடனே சிவதூதர்கள் பரமசிவனிடத்திலே கொண்டுபோய்விட்டார்கள். இப்படி இயமதர்மராஜன் சானந்த முனிவருக்கு இந்தக்கதையைச் சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறான்.

கேளும் எல்லாருக்குந் தாயையொத்த ஒரு சிவபக்தன் காசிநற்றுத்தனியே யிருக்கும் ஒரு உருத்திராக்ஷமணி முடிந்திருந்த சீலையை வண்ணான் கையில் வெளுக்கக் கொடுத்தான், அந்த அவன் வாங்கிப்போய் ஜலத்துறையிலே அந்தச் சீலையை விரித்துப் பார்க்கையில் சீலையின் முந்தானையிலே முடியிருக்கக்கண்டு அதையவிழ்க்

தான். உருத்திராக்ஷ மணியைச் சண்டவளியிலே சிலையையடித்து அதன்மேலே அந்த உருத்திராக்ஷமணியை வைத்து அந்த சிவபத்தனது சிலையையும் வெளுத்து அந்த முக்தா[illegible]யிற்றுனே அந்த மணியை முடிந்து தன்றலையிலே அந்தச் சிலையை சுற்றிக்கொண்டு முத்துப்போல் வெளுத்த மற்ற சிலைகளை யெல்லாம் சுமையாய்க்கட்டி தன் பெண்சாதி கையிலே கொடுத்து நீ வீட்டுக்குப் போவென்று அனுப்பி விட்டு, ஒரு கூரிய கோடாலி யெடுத்துக்கொண்டு தானுய்க்காய்ந்துபோன ஒருமரத்தை வெட்டுகிறபோது அந்த வண்ணான் காலிலே அந்தக் கோடாலி தவறிப்பட்டு இறந்துபோனான். அவனை இயமதூதர்கள் பாசத்தாற் கட்டிப் பிடித்தார்கள் அப்போ தவன்றலையில் உருத்திராக்ஷ முடிந்த சிலையிருந்த புண்ணியத்தினாலே மெய்ம்மையுள்ள சிவதூதர்கள் சீக்கிரமாய் வந்து என்னுடைய தூதர்களை கையினாலே படித்து, அந்த வண்ணானை மீட்டுக்கொண்டு விமானத்திலேற்றி பொய்யில்லாத மேலான தருமஞ் செய்தவர்களுக்கே யல்லாமல், மற்ற பேர்கள் போகப்படாத கைலாசகிரிமேலே வொழிவில்லாத சிறப்புடனே வைத்தார்கள்.

அண்ணலாகிய சானந்த முனிவரே இன்னமொரு கதை கேளுமென்று இயமதருமன் சொல்லுகிறான். அறிவில்லாத ஒரு சூத்திரனானவன் மன்மதபாணத்தினாலே பொறுக்கமாட்டாது ஒருபார்ப்பினியை யனுபவிக்க வேண்டி போகிறபோது, வழியில் ஒருநாகங் கடிக்க அதைக்கண்டு மெண்ணமின்றி அவள்மேல் விழுந்து சாவோமென்று போகிறவேளையிலே, தன் முன்றானையிலே முடிந்திருந்த விபூதியை நெற்றியிலுமார்பிலும் நிறையப்பூசிக்கொண்டு இவன் வருவானென்று வழிபார்த்துக் கொண்டிருந்த ஆசையையுடைய அந்தப் பார்ப்பினியருகிற்சென்று என்னைப் பாம்பு கடித்ததென்று சொல்லி அந்தச் சூத்திரன் அவளை கெட்டியா யணைத்த தவளவிலே பாம்பின் விஷம் தலைமட்டு மேறிச் சூத்திரனிறந்தான். விஷம்போ லொத்த கண்களையுடைய பார்ப்பினியும் விஷங்கலந்தகாமந் தலைமண்டைவதி அவளுமுடனே செத்தாள். அவள் தனத்திலேயும் மார்பிலேயும் பூசின விபூதி யிருந்தபடியினாலே இவர்களிருவரும் நீறு பூசினபேர்களென்று பிடிக்கவந்த தூதர்கள் கிட்டப்போய் பயந்து என்முன்னே வந்து [illegible]ன்றுகொண்டு சொன்னார்கள். அப்படிச் சொல்லிய எனது தூதர்களை விளாந்துபார்த்து அடாபாவிகளே! களங்கமில்லாத திருநீறு யார் நெற்றியிலே பூசியிருக்கக் கண்டாலும், உருத்திராக்ஷமணி

தரித்த யாவரானாலும் தூரத்தே நீங்கள் நின்றுக்கொண்டு அவர்களை கைகுவித்து கும்பிட்டு வணங்கிப்போங்கள் என்று என்னுடைய ஆதர்களுக்குப் புத்தி சொன்னேன். இப்படி நான் சொல்லுகிற சமயத்தில் அந்தப் பார்ப்பினியையும்குத்திரனையும் சிவதூதர்கள் கைலாயத்திலே சிறப்புடனே கொண்டுபோய் வைத்தார்கள்

அந்தக் கைலாயத்தினிடத்திலே ஒருவேடனும் ஒரு அன்னப்பட்சியும் இசைந்துபோய்ச் சேர்ந்த கதை ஒன்று உண்டு சாந்த முனிவரே அடியேன் சொல்லுகிறதைக்கேளும். ஆரண்யத்திலேயிருக்கப்பட்ட ஒரு வேடனானவன் இடையிலே கச்சை இறுக்கி அம்புறாத்தூணி முதுகிற்றூக்கி இரண்டு கையாலும் வளைத்து நாணியேற்றின வில்லொன்று கையிலேந்தி வலிய செருப்புங் காலிலேமாட்டி யுக்கிரமான மிருகங்களைத் தேடிக்கொண்டு வேட்டையாடக் காட்டிலே சென்று மிருகங்களைத்தேடிக்காணாமல் மனதுக்கமுள்ளவனாகி ஒரு மான் குட்டியாகிலுஞ் செடியிலே உறங்குகிற சிறிய முசலாகிலுங் கண்டேனில்லையே! நான்வருகிற வேளையில் சொன்ன சகுன மெப்படிபட்டதோ! பின்னையொன்று மறியேன் அறியேனென்று வேடன் மகா துயரத்தோடு விசனமடைந்து ஐயோ நான் வருகிற வழியிலே வலியான் குருவியும் வழிவிட்டது, ஆந்தையும் இணைக் கூடியது, கருடப்பட்சியும் தெரிசனமுண்டாச்சுது, காடையிடமாயோடியது, இரட்டைபிராமணர்கள் எதிர்வந்தார்கள், அவர்களின்று நல்லதினமென்றார்கள். இப்படி குற்றமில்லாத சகுனம் நன்மையாயிருந்ததே இவைகளெல்லாம் பொய்யாகுமா ? அளவில்லாத கொலைகள் பண்ணி மாம்சம்விற்றொழிய சாப்பாடு கிடையாதே, இங்கே பொழுது மாயிற்றே நான் சுமந்துக்கொண்டு வருகிற மிருகங்கண்டாலொழிய நற்குலத்தவளாகிய என் பெண்சாதி வீட்டுக்கு வரவொட்டாளே, குருவியானாலும் அம்பினாலெய்யவில்லையே! நான் சஞ்சல நீங்குவது எவ்வாறோ என்று எண்ணி வேடனுடைய மனந் தளருகிற வேளையில், ஆகாயத்திலே தன்னிட கூட்டுக்குப் போகவேண்டி வாயாகிய மூக்கினாலொரு தாமரைப்பூவைக் கவ்விக்கொண்டு வருகிற ஒரு அன்னப்பட்சியைக்கண்டு இந்தக் கானவேடன் அம்பினால் போட்டான். அம்புபட்ட அளவிலே விலவிலத்து சிவன்றளர்ந்து அந்த அன்னம் கீழே விழுந்தது. அன்னப்பட்சி வாயினாற் கவ்விக்கொண்டுவந்த தாமரைப்பூவும், அந்தப் பூவினிடத்திலே பொருந்தியிருந்த ஒரு துளி தண்ணீரும் தவறிப்போய் அந்த வனத்திலேயுள்ள சிவ லிங்கத்தின்

முடிமேல் விழுந்தது. அதனை மகாதேவரான பரமசிவன் கண்டு மனமகிழ்ந்து வேடனுக்கு முன்பதாக இடபவாகனத்தின் மேல்வந்து தெரிசனங் கொடுத்து அடா வேடனே! நாமிருக்கிற நம்மிடகோயிலும், உயர்ந்த மதிலும், கோபுரமும், முன் மண்டபமும் இவைகளெல்லா மழிந்துபோய் இந்த வெறு வெளியிலே வெயிலடிக்கப் பனி கண்டு யுகமாயிருந்தோம், இந்நாள்வரைக்கும் நம்மைபூசைபண்ணின பேரில்லை. அடா வேடா! நமக்கொரு பூவும், ஒரு நீர்த்துளியும், உன்னால் கிடைத்தது. பிரகாசமுள்ள வில்லையுடையவனே! நாம் சந்தோஷப்பட்டோம். உனக்கு விருப்பமான வரம் எவ்வளவுண்டோ அவ்வளவும் நினைத்துக் கேளென்று பரமசிவ னறிவைக்கொடுத்தார். அப்போது வேடனானவன் துள்ளியெழுந்து, சரீரம்பூரித்து, ஆனந்தமடைந்து, தலைமேல் கையைகுவித்து ஆணவமலத்தின் மறைவுநீங்கி பாய்ந்து துதித்து கூத்தாடி அங்கே நிலத்தில் தெண்டனாகப் பணிந்து, பணிந்து, தான் கண்ணாற்பொருந்தப் பரமசிவனைப்பார்த்து வாசனை பொருந்திய கொன்றைமாலையணிந்த உமது சடாமகுடத்தையும் சிவனைவிட்டுப் பிரியாத கமலங்களை யகற்றப்பட்ட குணமுடைய உமது பாதத்தையும், நெறியுடனே யுலகத்தைப் படைக்கப்பட்ட பிரமதேவனும், நிலையாக வுலகத்தை சிருஷ்டிக்கப்பட்ட நாராயணமூர்த்தியும், அறியமாட்டார்களென்றால் எந்தையாகிய பரமசிவனே! உம்மை யறிகின்றபேர்கள் பின்னையாரென்றான். செம்மையான நன்னடக்கைச் சிறிதேனு மில்லாமல் சீறிய புலிபோல் சீவனைக்கொலை செய்து தின்று இனிவருங் காரியந்தெரியாம லுழலுகிற ஏழைக்குக் கிருபை செய்தீர்! யானோ இப்பிறப்பிற் செய்த நன்மை யேதுமில்லை. பூர்வ ஜென்மத்திற் பண்ணின தவமென்னமோ வறியேன், சுவாமி! உம்மை பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களும், முனிவர்களும், விஸ்தாரமான வேதங்களும், தேடிக்கிடையாத பரமேஸ்வரனே! நீரிப்போ யுத்த சன்னைப் பலமுடைய விடபத்தின் மேலேறிக்கொண்டு சந்தோஷத்துடனே அடியே னிரண்டு கண்களுங்காணத் தரிசனந்தந்து நின்றீர், நானென்னதவஞ் செய்தேனோ, சமுத்திரத்தை மந்தாகிரியென்னும் மத்தில் வாசுகியென்னும் தாம்பைப்பூட்டிக் கடைந்தநாளையில் உக்கிரத்துடனே உலகமலற கொதித்துப்பிறந்த விஷமுழுமையு முண்டருளி, விஷ்ணுவும், பிரமாவும், தேவேந்திரன் முதலியோருடைய சீவனையெல்லா மிரட்சித்த உமது அருட் பெருமைக்கு அளவுண்டோ சுவாமி! உமது பிரகாசமுள்ளசடையும் அதில் தவழு மிளமையான மூன்றாம்பிறையும், மூன்று கண்ணும், கறுத்த கண்ட

மும், உதையமான சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற வடிவமும், நான்குபுஜமும், புதிய தாமரைமலரை யொத்த பாதமும், என்னிட புனிதமான கண்ணுற் கண்டு உம்மை நினைத்துத் தொழுத வென்னுடைய கையினாலே மற்றொரு தெய்வத்தையுந் தொழுவேனோ, சுவாமி! மிருகசாதிகளுக்கும் பறவைகளுக்கும் பெரிய சுடலையாகிய வயிறும், மும்மலங்களும் நிறைந்த புலையனான நான் உம்மிடத்தில் வரக்கேழ்க்கத் தக்கவனோ! உம்மைவிளக்கப் பூசைபண்ணினது அந்த அன்னப்பட்சி, ஆனதால் அதற்கே இனிமையான நல்வரத்தைக் கொடுத்தருள வேண்டுமென்றான். வேடன் இவ்விதமாகச் சொல்லி வேண்டிக்கொண்டதற்கு பரமசிவன் திருவுளமகிழ்ந்து இறந்துபோன அன்னப்பட்சிக்கு ஜீவனும் பேறறிவுங் கொடுத்து, ஓ அன்னப்பட்சியே நீ ஒரு துளி ஜலமும், ஒரு தாமரைப்பூவுங் கொண்டு இன்றைக்கு நம்மை பூசைபண்ணினபடியால் உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அன்னப்பட்சி உயிர்த்தெழுந்து ஐயனே இந்த செந்தாமரைப்பூ உம்மைப்பூசிக்க கொண்டுவரவில்லை, எனது குஞ்சுக்கு வேண்டுமென்று கொண்டுவந்தேன், அப்போது இந்த வில்வேடன் அம்பினாலெய்தபடியினால் அந்த தாமரைப்பூ உமது பேரில் விழுந்தது. எனக்கு வரம் வேண்டாம் அந்த வேடனுக்கே (வேண்டிய வரம்) கொடுத்தருள வேண்டுமென்று அன்னம் சொல்லிற்று. இப்படி இனிமையாக அன்னப்பட்சி சொன்ன வார்த்தைக்கு சுவாமி மனம் கிழ்ந்து வேடனுக்கும், நல்ல நிலைமையுள்ள அன்னப்பட்சிக்கும், நாடுதற்கருமையான ஒப்பற்ற மேலான பதவியைக் கொடுத்தருளி ஒத்தாரு மிக்காருமில்லாத கிருபா சமுத்திரமாகிய நம்மிட மகாதேவர் மறைந்தருளினார்.

இவ்விதமாகிய செய்கை எதாகிலும் இப்பாவிகள் செய்திருந்தால், உத்தமராகிய சானந்த முனிவரே! இந்த வாதைப்படார்களென்று இயமதர்மராஜன் சொல்லி உயர்ந்த அம்முனிவரை அப்பாலழைத்துக் கொண்டுபோனார். அவ்விடத்தில் விபசாரஞ் செய்த சிலபெண்களை இயமதூதர்கள் தனபாரத்திலே கூர்மையுள்ள இருப்புமுள்ளை யேற்றுவார்கள், சிலபெண்களை கனிந்த நெருப்பிலே போட்டு புரட்டுவார்கள், சில பெண்களின் தலைமேற் பாரமான இருப்புவாசியை கடாவுவார்கள், சில பெண்கள்மேல் பாம்புகளைப் புரட்டுவார்கள், சிவக்கக்காய்ந்த இரும்பு கம்பத்தை நிறுத்தி அதைக்கட்டித் தழுவும்படி சொல்லி யடிப்பார்கள் சிலபெண்களை ஈயக் கொப்பரையிற்

ரேய்த்து உருகி யுருகி ஊன்பெருகி யோடும்படியாய் சூலத்தை யேற்றி செவசெவன்று காய்ந்திருக்கிற செம்பு பொம்மையை ஆசை யுடன் தழுவிக்கொள்ளடி யென்று அடிப்பார்கள், அவ்வேதனையால் புரண்டு உருண்டு துடிதுடிப்பதை பதைக்கச் சுடுவார்கள், கீழேதள் ளிக்கிள்ளுவார்கள், அட்டைகளை விட்டு கடிப்பிப்பார்கள், புழுக்களி னால் குடையப் பண்ணுவார்கள், தீப்பி வண்டுகளால் துளைப்பிப் பார்கள் கிட்டிக்கொண்டுபிடிப்பார்கள், சீறுகளினால் சதைகளை அறு ப்பார்கள், நாய்களினால் கடிப்பிப்பார்கள், நரகத்தில் அழுக்குடன் கூட ஊசி யேற்றுவார்கள், கழுவேற்றுவார்கள், தூண்டுமுள்ளேற் றுவார்கள், இரண்டு தூணாட்டி அதன்மேல் பாலுவட்டம் போட்டு அதனடுவில் சங்கிலிமாட்டி அச்சங்கிலி நுனியை மூக்கிலு வாக்கிலு மேற்றி கீழே நெருப்பிட்டு எமகாதகாள் இருபுறத்திலு மிருப்பார் கள், தலைமேல் நெருப்புப்பற்றிய இருள் மூடிவைந் திழுத்துவார் கள், இரும்பைக்காய்ச்சி குந்தத்தினிடத்திலே ஏற்றுவார்கள், கொட் டாபுரிக்கொண்டு ஆப்புவைத்திறுக்குவார்கள் ஆ! ஊ! கூ!என்று உரு க்குவார்கள், கத்தியால் சதை சதையாக நறுக்குவார்கள், கோடறிக் கொண்டு தரிப்பார்கள், சம்மட்டியால் சதைப்பார்கள், தலைகீழாய் தொங்குகிற வேசியை புரிவியினால் வருந்தி முலைமீது சுடர் வேற்ற விலங்கு சொறிந்து, மூக்கில் காரக்கடுமைச் சாறேற்றி கால் விரலில் சுடரேற்றி கைவிரலில் சுடரேற்றி, கற்றைமயிரைக் கொளுத்தி ரம்பங்கொண்டு அறுத்து கழுகு, காக்கை, பருந்து, நரி, இவைகளை ஏவிப் பிடுங்கவிட்டு சித்திரவதை செய்யும்போது முறையோவென் றழுது கதறி, புதறி, சிதறி, கைகாலுதறி, வலிப்பெடுத்து, இரைச் சல் போடுகிறபோது, பேசாதே என்று இருப்புச்சோடா, முள் தடி, வளைதடி, வச்சிரதண்டம் இவைகளினா லடிப்பார்கள். இப்படி நெடுநாளிருந்து மழுவாயுதத்தால் துண்டித்து, இருப்புச்சட்டியில் வெப்பமாக கரும்பொன் மணலை வறுத்து அதைக் கரண்டியில்வாறி, அவள் தேகத்தில் ஓயாமற் கொட்டுவார்கள் தீமூட்டுவார்கள் கற்பு நிலைகெட்டு கணவனைவிட்டு வஞ்சகனைக்கண்ட காமக்கிழத்தியை உலை க்களத்தில் வேக்காடிட்டு அடித்துத் திரட்டி யிருக்கிற முறட்டு முள் முனையிலே பொருந்தும்படிக்குப் பேசிய எமனுடைய வார்த்தையின் வண்ணம் தாட்சணியம்பாராமல் எமதூதர்பிடித்து எலும்பை பொடி த்து எண்ணியாயிர எண்ணுமலாயிரம் அடி அடித்து, நீபுருஷனை யிக ழந்து, சத்தியந்தப்பி, குலகோத்திரத்தையுங் கெடுத்த குடிகேடி யென்று பேரெடுத்து அன்னியபுருஷ சிரத்தையெடுத்து அவளிடம்

படுத்து புருஷனைக்கடுத்து, வீட்டுப்பொருளைக் கொடுத்து, விரத முதலிய நோன்பையும் விடுத்து, வஞ்சநெஞ்சுடையவளா யிருந்தனையே, இதோ இந்த இன்பசுகம் இந்தக் கழுமுனையிலேறி அனுபவி யென்று இருத்தி அவளிரண்டுகாலையும் பொருத்தி பக்கத்திற் சூலம் பாய்ச்சி கர்ப்பங்கலங்க வூன்றி, தோளை காலைபிடித் திழுத்துக் கண் விழிபிதுங்க, கொத்தும்படிக்கு நாகக்குழியில் காக்கையை யேவிப் போட்டுவைப்பார்கள். வெகுநாள் வேதனைபட்டுக்கொண் டிருக்கும் போது புருஷனை வஞ்சித்த பூவையிவளென்று ஒருவர் சொல்ல, பலர் பல்லினால் மெல்லுவார்கள். அவர்கள் பாவியிலும் பாவி, பெரும்பாவிகளாகும். அப்பால் புருடனைவஞ்சித்த சிலரை கையுங் காலுங்கட்டி குறுந்தடியாலடித்து பின்புறமாய்வதித்தி சரீரம் அசையாமல்வந்தித்து கீலுக்கு கீல் கூராணியடித்து கிட்டிப்போட்டு செம்பையுருக்கி பொற்சாயலாகிய கடிதடத்தின்பேரில் கொஞ்சங் கொஞ்சமாய் சுரசுரவென்ன வார்ப்பார்கள். அந்த செம்புரசம் படும்போது குபீலென்றெறிந்து புகைச்சலும், எரிச்சலுமிகுந்து இரணங்களினாற் புழுத்து நெளிய ஐயையோவென்று கூச்சலிடும்போது இருப்பக்குந் தாலிடித்து வாய்குரத்தைப் பிடித்து வலிப்பார்கள், பேனாய்கள், குறைநாய்கள், செந்நாய்கள், ஓநாய்கள், அவளுடைய சதையைக் கடித்திழுத்துத் தின்னத்தக்கதாக உசிப்பி விடுவார்கள். கூரிளமுடைய ஆந்தை, கோட்டான், கழுகு, பருந்து, காக்கை முதலிய சேர்க்கையினங்கள் சேர்ந்தவ ளாக்கையைக் கொத்தி யுண்ணும்படி செய்வார்கள். அவள் பிராணாவஸ்தைப்பட்டு கோரமான விகாரரூபத்துடன் கிடப்பள். அப்போதுங் கூர்மையான கொழுச் சேற் கண்டை போன்ற கண்ணால்மருட்டி பரபுருடனைச்சேர்ந்த ஸ்திரீகளை யமதூதர் கட்டிக்கொண்டுபோய் பார்த்தபேர்களுடைய மனநடுங்கும்படியாய் இருப்புக் கொப்பறை யெண்ணையி விடுவார்கள், அடுப்பேற்றி எறிப்பார்கள், குண்டுகட்டாய்கட்டிக் கொளுத்துவார்கள், சரீரங்கள் பத்தலாய் வெடித்து இரத்தங்கள் வடிய நிணங்கள்வழிய வதுப்பார்கள். பெரிய ரம்பங்கொண்டறுப்பார்கள்.

### திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி.

வம்புலாங்கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை
நம்பினாரிறந்தால் நமன்றமர்பற்றி யெற்றிவைத்து எரியெழுகின்ற
செம்பினாலியன்ற பாவையைப்பாவீ! தழுவென மொழிவதற்கஞ்சி
நம்பனேவந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய்.

இப்படி நெறியில்லாத பெண்களை கொடிய இயமதூதர்கள் அநேக வாதைகள் பண்ணக்கண்டு இயமதர்மராஜாவை சானாதமுனிவர் பார்த்து பெண்பிள்ளைகளுக்கித்தனை உபத்திரவம் பொறுமையில்லாமல் பண்ணலாமோ! இவர்கள் பண்ணியபாவத்தை சொல்லவேண்டுமென்று கேட்க, இயமதர்மன் சொல்ல ஆரம்பித்தான்.

இவள் நாயகனை நடுங்கச் செய்தவள், எதிர்த்துப் பேசினவள், இவள் சண்டை போடுகிறவள், சரசமில்லாதவள், சாதங்கறியை, தானே தட்டிலெடுத் தொளித்துக் கொண்டவள், இன்பகாலத்திற் றடைசெய்தவள், புருடனைக் கடன்படச்செய்தவள், கணவன் சொன்ன ரகசியத்தை பலபேர்காதிற்போட்டவள், கணவனிடத்தில் மனமில்லாமல் பட்சம் இருப்பதுபோல் நடித்தவள், வீடேறிவந்த விருந்தை பகைத்தவள் வீட்டிற்பிறந்தாரை வெறுத்துக்கழந்தவள், வீட்டுடமைகளை திருடிவிற்றவள், பிட்சைபோடாதவள், தன் தங்கை, அக்காள், மச்சினிமார் முதலிய மற்றபெயர்களைக் கூட்டிக் கொடுத்தவள், வேசையரைப்போல் காசாசைச் கொண்டவளிவள், தகாத பெண்களுடன் சவகாசம்பண்ணினவள், மலசலம் கழுட்டும்போது மணல்கொண்டு சுத்திசெய்யாதவள், குழையல் முழுகல் காலைக்கடன் ஆசமன்னியமில்லாமல் சமையல் வீட்டிற்புகுந்து சாப்பாடிட்டவள், படுத்தும், இருந்தும் புருடன் கேட்டகேள்விக்குப் பயமில்லாமல் உத்திரவுகொடுப்பவள், கணவருடன் கலந்தபோதே ஸ்நானம் பண்ணுதவள், கர்வங்கொண்டு புருடனுக்கு போஜனத்தைக் கொடுத்தவள், கல்லு, நெல்லு, உமி முதலியதும் போக்கிச் சமைக்காதவள், புருஷனிவனென்று பொருட்செய்யாமல் போனவள், கால்கைபிடித்து காலமறிந்து நடவாதவள், மாமன், மாமி, கோரிய காரியத்தை கெடுபண்ணினவள், முன்காரியப், பின்காரியம் அறிந்து நடக்காமல் அசடுதேடினவள், அண்டைஅயலுக்குப்போய் சண்டை இழுத்தவள், கணவன், மைச்சினன், மூத்தாருக்கு பகைமூட்டி வைத்தவள், இன்னமுள்ள நற்செய்கைகளுக்கு இடங்கொடாதவள், இவள் கள்ளைக் குடித்த கெர்வி, இவளுக்கு நல்லநடத்தை சற்றேனுமில்லாத நரகி, இவள் பொய், சூது, வாது, பிரட்டுமுள்ளவள் என்றான்.

நல்ல வேதோத்தமரே இந்தப்பாவிகள் செய்த பாவங்களின்னமுண்டு அதற்குத் தக்க தாக்க மிவ்வளவுதானோ என்றால் இந்தத் தொலையாதபாவிகள் எல்லாம் விழுந்துக்கிடக்க இருபத்தெட்டுகோடி நரகங்க ளிருக்கின்றன. பின்னையந்த நரகத்தினிடபேர்களில் சிலது

# பிரபஞ்ச பாவ புண்ணியம்.

சொல்லுகிறேன் கேளும் உருகியிருக்கப்பட்ட வங்கக்குமணையென்றும், அரத்தின் வீடென்றும், சதலமென்றும், மசகாலயமென்றும், கிவற்றி நரவனமென்றும், தயிலபாத்திரமென்றும், சிலாவருஷமென்றும், சுவாலகுண்டமென்றும், வியாக்கிரமமுகமென்றும், தத்தகும்பமென்றும், கூடசரமென்றும், முட்டீர்ப்பாகமென்றும், கும்பீபாகமென்றும், ரவுரவமென்றும், மெல்வரையென்றும், மலோசங்கமென்றும், கால்சூஸ்திரமென்றும். மந்தகூவமென்றும், இவைமுதலாகச் சொல்லப்பட்ட நரகங்களிலே சந்திரர் சூரியர் உள்ளவரைக்கும் இப்படிப்பட்ட நரகங்களிலே விழுந்தொழியாமற் கிடப்பார்க ளிவர்களென்று குலாவப்பட்ட சீவன்களையெல்லாம் கொலைசெய்தும் கோணாத தருமவானென்று பேர்பெற்று மகிழ்ந்தருளிய ஒப்பற்ற கூற்றுவனான இயமதர்மராஜன் சொன்னான்.

இயமதர்மராஜன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, குறைவில்லாத சானந்தமுனிவர் அருளுண்டாகிச் சொல்லுதற்கரிய இந்தப்பாவிகளை ஒப்பில்லாத சிவமந்திரத்தினால் எல்லாப்பதவிகளி லுயர்ந்த சிவலோகத்தில் ஏற்றிடாமற் போவோமாகில் தெளிவுடைய சிவபக்தர்கள் நம்மை நகைப்பார்களென்று நினைத்து அதிக கொடுமையுள்ள இருபத்தெட்டுகோடி நரகத்தி லுள்ளவர்களெல்லாம் ஜீவன்முக்தராய் கனகரத்தின விமானத்தி லேறிக்கொண்டு ஒப்பில்லாத சிவகதியினிடத்திற்போய்ச் சேர்ந்திருக்கத் தயவுபண்ணவேண்டுமென்று சிவனை இருதயகமலத்தில் தியானஞ்செய்து சானந்தமுனிவர் சொல்லுகிறார். ஒப்பற்ற அந்த மகாபாவிகளுடைய காதுகள்தோறும் போய் கேழ்க்கத்தக்கதாய் மந்திரங்களி லுயர்வாகிய பிரணவமுதலாகிய பஞ்சாக்ஷரத்தை உரிமையுடன் சானந்தமுனிவர் ஓசைபிறக்கவுறத்துச்சொன்னார். இதை யறிந்து முனிவர்க ளெல்லாருஞ் சமுத்திர கோஷ்டம்போல அந்தப் பஞ்சாக்ஷரத்தை! முழங்கச் சொன்னார்கள். இதனை,

திருஞானசம்பந்த சுவாமிகள்,

அஞ்செழுத்துண்மை.

“காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனாம நமச்சிவாயவே,

நரகமேழ்புக நாடினராயினு
முரைசெய்வாயின ராயினுருத்திரர்
விரவியேபுகு வித்திடுமென்பரால்
வரதனாம நமச்சிவாயவே.''

சொல்லுதற்கரிய பஞ்சாக்கரமெனு மகா மந்திரம்போய் நரகத்திற் கிடக்கிறபேர்கள் காதிற் கேழ்க்கிறதற்கு முன்னமே அவர்கள் பண்ணின பாவமெல்லாம்போய் நிர்மலர்களாய் விபூதி ருத்திராட்சம் சிவலிங்கம் தரித்து அழகிய பேரொளி யுள்ளவர்களாகி இயமவாதனையிலகப்பட்டிருந்த அத்தனைபேர்களும் சீக்கிரமாகநரகத்தைவிட்டு கரையேறினார்கள். பஞ்சாக்ஷர்த்தை செபித்த வாசனையுள்ள தாமரைமலர்போன்ற பாதத்தையுடைய சாநந்தமுனிவருக்கு எதிராகவந்து தெண்டம்பண்ண, அவர்களைப்பார்த்து செம்பஞ்சு பதித்த இன்பத்தைத்தரும் பாதத்தையுடைய உமாமகேஸ்வரனுடைய பக்தியிற் சிறந்த சானந்தமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

வரப்பட்ட நூறுகோடி பாதகமலங்களை ஒரு வச்சிராயுதமாகி அழிக்கவல்லதும், அளக்கவொண்ணாத பிறவி யென்னுஞ் சமுத்திரத்தை அழிக்கும் வடவாக்கினியையும் போன்ற பெண்ணொரு பாதியான பரமேஸ்வரனுடைய புனிதபஞ்சாக்ஷர மல்லவோ! மாற்றுதற்கரிய [illegible]வினைகளுக்கு மகாபரிகாரமென்று சொல்லி பண்ணுதற்கரிய சாந்திராயண விரத முதலானதுகளைச் செய்து தான்வளர்த்த சரீரத்தைவாட்டிப் பூமியில் என்றைக்கும் வருத்தப்படுபவர்கள் ரிஷபவாகனனாகிய பரமேஸ்வரனுடைய சிவநாமத்தின் பெருமையை யறியாதபேர்கள், பரமசிவனிட பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபிக்காத பேர்கள், யாகங்களைப்பண்ணினாலும், சருகுபக்ஷணை பண்ணித் தவமிருந்தாலும், அறிவுடனே தேசகாலபாத்திரமறிந்து; பூதானம், சொர்னதான முதலியவைகளை கொடுத்தாலும் அதுகள் கொடுக்கப்பட்ட பலனொன்றுமில்லை, கண்டங்கறுத்து மூன்று கண்ணுள்ள பரமேஸ்வரனது மந்திரமே பாசமில்லாத மேலான மோக்ஷத்தைக் கொடுக்குமென்று வேதஞ்சொல்லக் கேட்டும்,

புத்திசற்றாகிலு மில்லாமற் போய் மற்றொரு தெய்வத்தினுடைய மந்திரத்தை செபிக்கிறபேர்களே மனிதருக்குள் பதரானவர்கள். பொருந்திய நம்முடைய பஞ்சாக்ஷரமான மந்திரத்தினிடத்தில் நாம் அருள்மிகுந்திருப்போம், மற்றவிடத்தில் இரோமென்று சச்சிதானந்தமூர்த்தியாகிய பரமேஸ்வரன் சொல்லியிருக்கிறபடியினால் பொ

ய்யில்லாத சிவனடியார் எவர்களும் அந்தப்பஞ்சாக்ஷரத்தையே பொருளாய்க் கொண்டார்கள், பின்னையும் அந்தப் பஞ்சாக்ஷரமானது சிவனைப்பற்றிய பாசவேர்களைப் பரித்தெறியும், பொருந்திய தேவாமிர்தத்தைச் சாப்பிட்டபோதே நரைதிரை யில்லாமற் போவது போலவும், சூரியனுதையமானபோதே செறிந்த விருளிருங்குவது போலவும், சமுத்திரத்திற் பிறந்த வலிவுள்ள ஆலகாலவிஷத்தை யுண்ட பரமேஸ்வரன் மந்திரத்தைச் செபித்தபோதே வேருடனே பிறவிகளெல்லாந் தீர்ந்து விளங்குவது சத்தியமென்றார். உங்களுடைய இயமவாதனைகளை யெல்லாம் நீக்கிச் சுகத்தைக் கொடுத்து நமயிட பரமேஸ்வரருடைய பஞ்சாக்ஷரமந்திரமல்லவோ! ஆகையால் இனிமேல் மதிக்கவரிய நீங்களெல்லாரும் வாசனைவீசுகிற கைலாயத்துக்குப்போய் சந்தோஷமாக வீற்றிருங்களென்று முன்நரகத்தில் உபத்திரவப்பட்டபேர்களைப் பார்த்து தேவர்களும் வணங்கப்பட்ட சானந்தமுனிவர் சொன்னார்.

---

## கைலாயப்பெருமை.

இவ்விதமாய் சானந்தமுனிவர் அந்த இயமலோகவாசிகளுக்குப் பஞ்சாக்ஷரமும், அதின் மகுத்துவமும் உபதேசித்து, நீங்களெல்லோரும் கைலாயத்திற்குப் போங்களென்று விடைகொடுக்கவும், அப்போது உருத்திரகணிகைகளுடனே அளவிலாத கணநாதர்கள் சூழ ஒப்பற்ற சிறப்புடன் பொன்மலைகள் வருகிறதுபோல் அநேக விமானங்கள் வரவும், அதுகளின்மீது பூமியிலிருந்துவந்து இயமவாதனைப்பட்ட கணக்கில்லாதபேர்கள் சந்தோஷத்துடனே யாவரும் சிவசங்கராவென்று சொல்லிக்கொண்டு (அநேக தேவதுந்திமி முழங்கவும் சுத்தமான புஷ்பமாரிபொழியவும், இயமதர்மன் மூக்கின்மீது விரலைவைத்து அதிசயிக்கவும்) அழகுபொருந்திய இரத்தின விமானங்களி லேறினார்கள்.

இப்படி விமானங்கள் ஏறி ஒருகாலத்திலும் மாறுபடா பெருமையுள்ள கைலாயகிரிக்குப்போய் நமது பார்வதி சமேதரான பரமசிவனை வணங்கி, அவருடைய கிருபாகடாக்ஷம் பெற்று தேவர்கள் துதிக்க கெடுதலில்லாத சுகத்தை யனுபவித்துக் கொண்டு கைலாயத்திற்றானே ஒழிவில்லாது இருந்தார்கள்.

அவ்விடத்தி லிருந்தவர்களெல்லாம் கைலாயத்திற்கு போனபிறகு சானந்தமுனிவர் இயமதர்மராஜனைப்பார்த்து நீர் இவ்விடத்

திலேயே நில்லுமென்று சொல்லி சில முநிவர்களுடனே தம்மிட புஷ்
பக விமானத்திலேறி எய்தற்கரிய கைலாயத்தை நோக்கி, ஆகாய
மார்க்கத்தில் தேவர்களெல்லாங் கைகுவித்துநிற்க, போகுங்கால். எதி
ரில் பிரகாசமுடைய கைலையின் கொடுமுடியைக் கண்டு கைகுவித்து
நின்று கும்பிட்டு தம்முன்னுக விருந்த முநிவர்களை சந்தோஷமாய்ப்
பார்த்து அந்த கைலாய கிரியினுடைய சிறப்புகளிற் சிலதை சான
ந்தமுனிவர் சொல்லத் தொடங்கினுர்.

ஓ முநிவர்களே! பிறப்பிறப்பில்லாத பரமேஸ்வரனிருக்கப்பட்ட
வெள்ளியங்கிரியின் பக்கத்தில் சூழ்ந்திருக்கும் சந்தனத் தோப்புக
ளானது, பூமாதேவிதரித்த முத்துக்கிரீடத்தினைச் சூழ வொரு பச்
சைப் பட்டுவஸ்திரஞ் சுற்றினதுபோல இருக்கின்றதைப் பாருங்கள்.
ஆத்திமாலையைத் தரித்த பரமசிவனிருக்கப்பட்ட வெள்ளியங்கிரியே
என்னைத் தோழனுகக் கொண்டருளென்று புகழ்ந்து பொன்மலையா
னது நின்றுக்கொண்டு கேழ்க்கிறது போல் கைலாயகிரிப் பக்கத்திற்
கிளிப்பிள்ளைகளிருந்து சத்திக்கக் கோங்கு மரங்கள் பூர்த்து நிற்கிற
தைப்பாருங்கள். மூங்கில்கள் முளைத்திருக்கும் சாரலிற்கிடக்கிற மர
கத மணியினது பிரகாசத்தை மான்கள் புல்லென்றெண்ணி நாவை
நீட்டி வளைத்து மேய்ந்து பார்த்துழலுவதைப் பாருங்கள், மேகங்க
ள் தவழுகிறதை யானையென்றெண்ணிச் சிங்கமானது பாய்ந்து அகப்
படாதபடியினுலே நாணிப்போகிறதைப் பாருங்கள், வெள்ளியங்கிரி
யினிட முழைகளிலே நுழையும் வாயுவின்சத்தமே மத்தளத்தொனி
யாக மயில்கூட்டம் நடனம்பண்ணுகிறதைப் பாருங்கள், குற்றமற்ற
பெரியோர்கள் வருகிறதைக்கண்டு நெஞ்சுருகிக் கண்ணீரொழுகிறது
போலச் சுனையினின்று அருவிவருகிறதைப் பாருங்கள், அந்தக் கை
லாயகிரியிலுள்ள தேன்கூட்டையழித்த யானைகள் அத்தேனிலேயே
மூழ்கத்தக்கதாக ஒழுகுகிறதைப் பாருங்கள், மூங்கிலின்பேரில் மயி
லிருந்தசைகிறது கம்பத்தி லிருந்தாடிக்கும் பெண்கள் போலவிருக்
கின்றது பாருங்கள், வெள்ளிமலையின் பிரகாசம் ஆகாயத்திற் பாவி
யெழுந்திருப்பது, ஆகாயகங்கைவந்து பரமேஸ்வரன்சடையின் மூன்
மூன்றும் பிறையைக் கண்ணுற் பார்த்துப் பிறகு தன்னிடத்திற்குப்
போகிறதுபோல விருக்கின்றதைப் பாருங்கள், இலக்ஷ்மி சமேதரான
விஷ்ணுவும், தாமரை வாசனை பிரமதேவனும், தேடுதற்கரிய பர
மேஸ்வரன் வாழப்பட்ட வெள்ளியங்கிரியினுடைய பிரகாசமெவ்விட
ங்களிலும் வீசுவது, தேவர்கள் துதிக்கும் கைலாயகிரியின் கீர்த்தியா
கிய வெள்ளம் எங்கும் பரவினதுபோல இருந்தது.

இப்படி சாநந்தமுனிவர் கைலாயகிரியினது சிறப்புகளைச் சொல்லி முநிவர்களுடனேபோய் அந்தக் கைலாயகிரியின் கொடுமுடியிற் புகுந்து பரமேஸ்வரன் கோயிலுக்கு முன்பாகப்போய் பிரகாசமான புஷ்பகவிமானத்தில் நின்றிறங்கி கோயிலுக்குள்ளே புகுந்து கொன்றைமாலைதரித்த சடையினையுடைய பரமேஸ்வரன்பாதத்தை தண்டம் பண்ணிநினைத்து, தேவர்கள், வித்தியாதரர், சாரணர், சித்தர்கள், கிம்புருடர், கலைநிறைந்த சந்திரர், சூரியர், முநிவர்கள், கருடர், மேன்மையடைந்த உருத்திரர், நாராயணர், பிரமதேவர், இயக்கர் முதலிய எண்ணிறந்தபேர்கள் நெருங்கியிருக்கிற பரமேஸ்வரன் சபையிலேயடைந்து, நமது கர்த்தாவான பரமேஸ்வரன் திருவடியைபணிந்து மனதுக்குள்நிறைந்த பேரருளானதுபொங்கி மேலேவழிந்ததுபோல ஆனந்தக்கண்ணீர்மார்பினிடத்தி லொழுகநின்று எழுந்தெழுந்து தோத்திரஞ் செய்து உடம்புமுள்ளமு முருகப் பலமுறை துதிக்கின்றார். நெற்றிக்கண்ணனே! அமலனே, கங்கையைத்தரித்தவனே, யாவர்க்கு மேலானவனே ஆலகாலவிஷத்தை யுண்டவனே, சங்கரனே, சௌந்தரியமுள்ளவனே, ஆதியந்தமில்லாதவனே, சூலந்தரித்தவனே, காரணமானவனே, வேதக்குதிரை யேறினவனே, சற்குணமுள்ள மகாத்மாகளுள்ளத்தில் வசிக்கும் ஞானசுரூபனே, வேதங்களோதும் வாயுள்ள மார்க்கண்ட னென்னும் பிள்ளையினுயிரை வாங்கவந்த கொடிய இயமனை உதைத்த தற்பரனே, சரணம், அழகுபொருந்திய மதங்கொள்ளா ழுகப்பட்ட வடுதங்கிய முகமும், பனையையொத்த துதிக்கையும், உரல் போன்ற அடியுமுள்ள யானையையுரித்தருளும் கண்ணுதலே சரணம்! தருமதேவதையைத்தானே ரிஷபமாயேறி நடத்தப்பட்ட பரிசுத்தனே! சரணம், நாராயணனும் பிரமனும், தேடுதற்கரிய கர்த்தாவானவனே சரணம், கண்ணப்பனென்னும் வேடனெச்சிலுக்கு மகிழ்ந்த செல்வனே சரணம்; குளிர்ந்த கங்கையைச் சிவந்த சடாபாரத்திலுடையவனே, நிதஞ் சந்திரனிருப்பதுபோல மூன்றாம்பிறையோடு அழகுபொருந்திய நெடிய சடாமகுடமுள்ள வள்ளலே சரணம், மிகச்சிறந்து உயர்ந்த ரிஷபத்தின்மீது அடியார்முன்பாக வெழுந்தருளும் பெருமையுள்ளவனே சரணம், முதன்மையானவனே சரணம், அழகுபொருந்திய முடியினிடத்திலிருக்கிற மூன்றாம்பிறையையல்லாமல் மார்பிலேயும் பிறையுண்டென்று சொல்ல வராகத்தின் வெண்கொம்பை யணிந்த இறைவனே சரணம் மிக்க பிரகாசத்தையுடைய சூரியன், சந்திரன். அக்கினி, இம்மூன்றையும் கண்ணாகப் படைத்த நினைக்கவரிய சோதியே, கிருபா சமுத்திரமே உனக்குச் சரணமென்றார் சானந்தமுனிவர் இதனை,

## திருநாவுக்கரசுசுவாமிகள்

### திருவையாறு-பண்-பழந்தக்கராகம்.

"சடையானே சடையிடையே தவழுந்தண் மதியானே
விடையானே விடையேறிப் புரமெறித்த வித்[illegible]னே
யடையானே யுடைதலைகொண் டூரன் ப[illegible]
மடையானே வையாறற் காளாய்நா னுய்ந்தேனே

நீரானே தீயானே நெறியானே கதியானே
யூரானே யுலகானே யுடலானே யுயிரானே
பேரானே பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமானென்
றூராத வையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் அருத்தானாய்
யெண்ணானா யெழுத்தானா யெழுத்துக்கோ ரியல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த வேதியனே
யண்ணலை வையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

மின்னானா யுருவானாய் வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய் பொருகடல்வாய் முத்தானாய்
நின்னாரி ருவர்க்குங் காண்பரிய நிமிர்சோதி
யன்னானையை யாறற்காளாய் நானுய்ந்தேனே." என்பதாலுணர்க.

இப்படி தோத்திரம்பண்ணின சானந்த முநியைப்பார்த்து உன தரிய செய்கைக்கு சந்தோஷங்கொண்டோம், இனி உலகமெல்லாம் உன்னை சானந்த கணேசனென்று சொல்ல நம்முன்னாக விளங்கியிரு மென்று பரமேஸ்வரன் அனுக்கிரகம் பண்ணினார், அதைக் கேட்ட குற்ற மற்ற சானந்தமுனிவர் அழியாத பேரானந்தத்துடனே அக் கைலாயத்தில் சுவாமியருகில் இருந்தார்.

## இயமதர்மன் தனதுநகரம் பாழானதை கைலாயபதியினிடம் தெரிவித்தல்.

கிருபைக் கடலாகிய சானந்தகணேசர் கைலாயகிரிக்கு சென்ற பின்பு ஜீவாத்மாக்களுடைய காலங்களையும் [illegible]திகளையு மறியப்பட்ட இயமதர்மராஜன் தன்கிரீடத்தை யசைத்து பெருமூச்செறிந்து முக மும் மனதுஞ்சோர்ந்து தனது மந்திரியான காலனுடனே சொல்லு கிறான். ஒரு முநிவரானவர்வந்து நமக்குரிய அதிகாரமுழுமையுமொ ழித்து, வித்தாரமான நரகங்களிலு பட்டணங்களிலுள்ளபேர்க ளனை வரையும் அதிசீக்கிரமாக ஒப்பற்ற கைலையங்கிரிக்குப் போக்கி தானும்

போய்விட்டார். ஆனபடியினால் தேனொழுகிய கொன்றைமாலையைத்
தரித்த சடையை யுடைய பரமேஸ்வரன் கொடுத்த வாழு மிந்தமட்
டில் முடிந்ததே, மங்கிலிய மிழந்த ஒரு பெண்ணினுடைய நிலைமை
யையும், ஜலம் வற்றிப்போன தடாகமும், அழுகைத்தரும் கண்ணில்
லாதமுகமும், எப்படியோ அவைபோல நமது ஊரும் குடிகளும்
[illegible]ணபிறகு நாமிருந்து என்னசெய்வது? இயமதருமனென்று உலக
மெல்லாரு சொல்லப்பட்டபேரும் அழிந்து, அழகிய நமது பட்டண
த்திற்கும் தரித்திரம் வந்தபடியினால் பெருஞ் செல்வமுள்ள நா[illegible]
ன்று பொருளாசை பொருந்தி வாழ்ந்து மதிக்கப்படுவதினால் பல
னென்னவென்றான் இயமதர்மன்.

ஓ காலனே இவ்விடத்தில் நடந்த எல்லாவற்றையும் விஷ்ணு
வும் பிரமனும் அறியப்படாத நெற்றிக்கண்ணுள்ள பரமேஸ்வரரு
டனே அறிக்கை செய்யப்போகிறோம். அழகுள்ள நமது வாகனத்
ததைக் கொண்டுவாவென்றான். உடனே காலனும், நீலகிரியின்மேற்
படிந்து ஒருமேகமண்டலம் போல் கோபமிகுந்த எருமைக்கிடா
வாகனத்தை கொண்டுவர, இயமதர்மன் அதன்மீதேறி இயமபடாக்
கள் பக்கத்தில் சூழ்ந்துவர பொருந்திய தன்பத்தோடு கைலயங்கி
ரிக்குப் போய் எமது கர்த்தன் வீற்றிராகின்ற கோயிலின் வாசலி
னருகில் தன் வாகனத்தை நிறுத்திவிட்டு, ஐயமில்லாமல் இந்திரிய
வழி செல்லாது ஐம்புலன்களையு மொடுக்கி தாயில்லாத பரமேஸ்வ
ரன் சபையினிடத்தில் தெண்டம்பண்ணி பல தோத்திரங்களுஞ்
சொல்லி நம்பரமேஸ்வரன் சந்நிதிமுன்பாக பாசமும், பிரகாசமுள்ள
சூலமும் காலதண்டாயுதமும் வைத்து, சுவாமிக் கெதிராக நின்றுக்
கொண்டு வணக்கமாகச் சொல்லுகிறான், சுவாமி! தேவரீருடைய
திருவருளெல்லாம் ஒருமிக்கப்பெற்று நமது பாதத்தையே சிந்தித்
திருக்கும் சானந்தமகாமுனிவர் வந்து என்னிடத்திலிருந்த அதிகார
உரிமையையொழித்து இங்கே வந்துவிட்டார், அதனை நான் தேவரீ
ருக்குச் சொல்லவந்தேன் அடியேனிடத்தில் கொடுத்த இந்த இயம
தருமபட்டத்தைத் தேவரீர் திருவுளத்திற்கேற்ற பேர்களுக்குக் கட்
டளைபண்ணவேண்டும் ஒப்பில்லாத சுவாமி! தேவரீர் ஆக்யாபிக்கும்
எவற்றொழில்களை இங்கு செய்துவருகிறேன் இனி அவ்விடத்திற்குப்
போகேனென்று சொன்னான்.

இவ்விதமாய்ச் சொல்லிய இயமதர்மராஜனைப்பார்த்து ஓ குற்ற
மற்ற இயமதர்மனே? அருள்பெற்ற நமது அடியார்கள் மகிமையை

முன்னாலே உனக்கு நாம் சொல்லியிருந்தும் உன்மனதில் உணா வில்லை. நல்ல நெறியுள்ள நமது அடியாரும், நாமும் வேறல்லவென் றறிந்தவர்கள் நம்மை வந்தடைவார்கள். நம தடியாரையும் நம்மை யும் பேதமாகவெண்ணுவோர்கள், நரகத்தி லடைவார்கள். குற்ற மற்ற நமது அடியாருடைய சிந்தை வாடுமேயானால் பூலோகமெங்கும் வாடி இளைக்கும். அசுத்தம்பொருந்திய மனதுள்ளோ ராயினும், சுத்தமனதை யுடைய ஞானவான்களாயினும், பூசைபண்ணி நம்மை பூசிக்கப்பட்டபேர்களைப் பத்தியுடனே நாமென்று நின்று தெரிசனம் பண்ணென்றார். இதனை,

ஒளவையார்.

“பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம்பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில்வந்தோன்
கரியமாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையிலடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப்பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரன்மோதிரம்
உமையோ விறைவர்பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத்தொடுக்கம்
தொண்டர் தம்பெருமை சொல்லவும்பெரிதே.” என்பதாலுணர்க,

இயமதர்மனே? உன்னிட அரசியல்பு விலகிப்போகாமல் நிற்க வேணுமென்று நினைத்தாயாகில், அதற்கு வேறொன்றுமில்லை. நமது திருவடியை இடைவிடாது சிந்திக்கு மடியார்களை மனதிலே ஐயமில் லாமல் நாமாகவெண்ணிக்கொள்; பூலோகம் புகழப்பட்ட பத்திரதத் தம்மைபெற்ற ஒப்பில்லாத சானந்தகணேசன் நம்மிடத்தி லிருந்து விட்டான் இனி உனது இயமபுரத்திற்கு வருவானென்று மனதிலே எண்ணவேண்டாம், இப்பொழுதே உன் பட்டணமெங்கும் நல்லவர் கள் நிறைந்துவந்து இன்பம் பெறுவார்கள். அநேகம் பாவிகள் கொடிய நரகத்திலேயும் வந்து மனது துன்பப்படுவார்கள். திருத்த மான உன் அரசின்தன்மை சிதறுதபடியாயிருக்க உனக்கு கொடுத் தோம் உன் பட்டணத்திற்குறிப பலமுள்ளபாசமும், வெற்றிபொரு ந்திய வெய்ய சூலாயுதமும், பெருமையுள்ள தண்டாயுதமும் எடுத் துப்போவாயென்று பரமேஸ்வரர் திருவாய்மலர்ந்தருளினார்.

இவ்விதமாய் பரமேஸ்வரரருளிச் செய்தபிறகு பொன்போலப் பிரகாசிக்கப்பட்ட சுவாமி திருவடியிலே பணிந்து துதித்து தேவரீர் சொன்ன ஏவற்படிக்கு நடக்கிறேனென்று விடைபெற்று தென்திசைக்குக் காவலான இயமதர்மன் தன் வாகனமான மயிடத்தின் மேலேறி பொல்லாத இயமபடர்கள் முன்னும் பின்னுங்கூடிச் சேவித்துவர (இறந்தஉடம்பில் சிவன் வந்ததுபோல்) அழகு பெற்ற தன்பட்டணம் போய்ச்சேர்ந்து தனது சிங்காதனத்தில் இருந்துக் கொண்டு குற்றமில்லாத இயமதர்மராஜன் செம்மையான தன்னதிகாரஞ்செலுத்தி பூலோகமெங்கும் மதித்துப் போற்றும்படி வாழ்ந்தான். இவ்விதமாய் தர்மப் பிரசங்கமுனி கூறியதைக் கேட்டுணர்ந்த ரிஷிகள் தங்கள் தங்கள் ஆசிரமஞ் சென்றார்கள்.

## நல்வினைப்படலம்.

நல்ல தவங்களைச் செய்தும், சிவபுராணங்களைப் படித்தும் அதைப் பிரசங்கம்பண்ணிக்கொண்டுமிருந்து வாழ்கின்ற முனீஸ்வரர்கள் எல்லாரும் ஒன்றுகூடி தருமப்பிரசங்கமுனியை வணங்கி தாங்கள் முன் சொல்லிய இயமதண்டனைகளைக்கேட்டு அதிசயித்தோம். இப்போ தெங்கள் ஆவல் தீரும்படியாக புண்ணியஞ் செய்தவர்கள் அடையும்பலனை அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க அவர்களுக்கு பெரியவராகிய தர்மப் பிரசங்கரிஷி யென்கிற முனிவர் சொல்லத்தொடங்கினார்.

ஓ! முனிவர்களே இப்பொழுது நாம் வாசிக்கிற சிவதருமோத்திரத்திலே பெரிய தருமஞ்செய்தபேர் போகும் வழியைச் சொல்லுகின்றோம் சற்றே செவிகொடுத்துக் கேளுங்கள். பூலோகத்திலே தருமங்களைப்பண்ணின புண்ணியவான்கள் இயமலோகத்திற்குப்போகிறபோது விமானமேறிக்கொண்டு வெகுசிறப்போடுபோவார்கள். அவர்கள் போகிறவழியின் சிறப்பை ஒருவராலும் சொல்லிமுடியாது அவ்வழிகளில் மேலான தெய்வீக பரிமளம்வீசும், தாமரையுள்ளவோடைகள் பிரகாசிக்கும், புஷ்பவாசனைகளோடு அத்தடாகங்களுள் தென்றல்காற்றுபடிந்து குளிர்ச்சியுடன் வந்துவீசும், அவ்வழியெங்கும் நானாவித புஷ்பத்தின் பொடிகளும், பச்சைகற்பூரப் பொடிகளைப்போல நொய்ய வெண்மணல்களும் பரப்பியிருக்கும், நல்ல மறையவர் வழியினிருபுறமும் பொற்பூவுகளுதிரப்பட்டதாயிருக்கும், பின்னுமவ்வழிகளிலே தளிர்ந்து நெருங்கிய குருக்கத்திபடர்ந்த விழ



புண்ணியஞ்செய்தவர்கள் அடையும் நற்பலன்.

ல்களுண்டாயிருக்கும், அடிக்கடி வாசனையூட்டிய தண்ணீர்க்குடங்கள் வைத்திருக்கிற பந்தல்களில் மலர்மாலைகள் தொங்கவிட்டிருக்கும், இரண்டுபக்கங்களிலும் குயில்களைப்போல தேவரம்பைகள பாடுகிற பலசங்கீதங்க ளுண்டாயிருக்கும். தாளத்தின் விநோதங்களுடனே நாகசுரமுதலான வாத்தியங்கள் எதிரில் முழங்கும், மின்னலுக்குச் சமானமான பெண்கள் நடக்கிற நடையைப்போல் அசைந்து அசைந்து யானைகள் நடந்துவரும், எதிரில் தேவக் குதிரைகளானது நாலு கால்களிலேயுந் தரிக்கப்பட்ட தண்டைசதங்கைகள் சப்திக்க நடனம் பண்ணும், அந்தவழிகளில் இருபக்கத்திலும் நவரத்தினமாலைகளாலே அலங்கரித்து பிரகாசிக்கப்பட்ட அழகுள்ள பொன்னினுற் செய்த சிறிய கொடிகள் நாட்டினதேர்கள் அங்கங்கே நிறுத்திருக்கும். அந்த வழிகள் முற்றும் வாழைக்காடுகள்போல் ஆலவட்டங்கள் நாட்டியிருக்கும், அந்த வழிகளில் நவரத்தினங்கள் கோர்த்துத் தொங்கவிட்ட தோரணங்கள் அடிக்கடி கட்டியிருக்கும், ஜவ்வாது போட்டுள்ள நீங்காதநெற்றியையுடைய பெண்கள் செய்கின்ற நடன சங்கீதங்களினுல் கல்லுகளும் உருகிப்போம், அவ்வழிகளில் அமிர்தத்தை யொத்த ஆறுகள் அடிக்கடியோடும், மேகமானது புஷ்பமாரி வருஷிக்கும், வழிகளில் தங்கியிருந்துபோக வாசனையுள்ள புஷ்பங்களினுல் அலங்கரித்த வீடுகளும் பூப்பந்தல்களும் உண்டாயிருக்கும், இவ்வகையான வேடிக்கைகளெல்லாம் தர்மஞ்செய்த புண்ணியவான்கள் பார்த்து மனமகிழ்ச்சியுடனே போகும்வேளையில் செவ்வியோர்கூட்டத்தால் சிறப்புற்றிருக்கிற இயமபுரத்திலே நடக்கிற சம்பிரமத்தை சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஓ முனிவர்களே! அங்கே தேவர் இயக்கர், சித்தர் சாரணர், முதலிய பெண்கள் எல்லோருங் கூடியிருக்கிற வீதிகளில் புண்ணியாத்மாக்கள் வருகிற போது அவ்விடங்களில் இயமதூதானபேர்கள் கையெடுத்துக் கும்பிட்டுநின்று அனேகமுபசாரங்கள் சொல்லுவார்கள். இயமபுரத்துக்குள் வீதியிலே வந்த புண்ணியவான்களை இயமதூதர் பார்த்து சுவாமி இவர்கள் தேவலோகத்து ரம்பைகள் தேவரீர் அண்டையிலே நாட்டியம்பண்ண வந்தார்கள், அந்த நாட்டியத்தை சற்றே நின்றுபார்க்க வேணுமென்றும், இவாள் வீஞ்ஞையப் பெண்கள் தம்பூருகளினலே பாடக்கூடியவர் வந்திருக்கிறார்கள். தேவரீர் சற்றே கேழ்க்க வேணுமென்றும் சொல்லுவார்கள். சாரணப்பெண்கள் சந்தனம், புனுகு, ஜவ்வாது முதலான கதம்பங்கள்

கொண்டுவந்து நிற்கிறார்கள், அதை தேவரீர் பூசிக்கொள்ளவேணுமென்றும், அமிர்தம்போன்ற வார்த்தையையுடைய பெண்கள் பாரிஜாதக புஷ்பமாலிகை ஏந்திக்கொண்டு நிற்கிறார்கள் அந்த மாலையைத் தோளிலே அணிந்தக் கொள்ளுங்களென்று வாய்பொத்தி இயமதூதர்கள் உபசாரஞ் சொல்லுவார்கள். தேவரம்பையர்கள் உபசாரமாக மனக்களிப்புடன் அழகுள்ள ரத்தினக்கிரீடங்கள், பதக்கங்கள், கணையாழி மோதிரம், வாகுவலயம், குண்டலமுதலான பொற்பூஷணங்களைப் பூண்டுகொள்ளுங்களென்றுஞ் சொல்லி முன்னை நின்றுக்கொண்டு கொடுப்பார்கள். புண்ணியஞ் செய்தவர்கள், வீதிகளிலேவரும்போது தேவகன்னிகைகள் அவர்களுக்கு பால்நுரைபோலொத்த பட்டு வஸ்திரங்களைக் கொண்டுவந்து இதை யுடுத்துங்களென்றுசொல்லுவார்கள், சந்தனக்குழம்பு கற்பூரம், கதம்பப்பொடிகளிலைவகளை யள்ளியள்ளி எங்கு மிறைப்பார்கள். கண்ணாடியைக்கொண்டுவந்து உபசாரஞ்சொல்லி எதிர்காட்டி நிற்பார்கள் பலபல கற்பக விருக்ஷத்தின் பழங்களைக் கொண்டுவந்து மிக்க அன்புடன் கொடுப்பார்கள், மிகுந்த சர்க்கரை ஏலம் முதலிய வஸ்துக்களைச் சேர்த்து செய்த அப்பவர்க்கம், பால், தயிர், தேன், நெய், இவைகளைத் தக்கதாய்ச் சேர்த்து செய்த தேவருணவாகிய சாதம், இச்சிறிய தொகைகள் பலகறிகளாமென்று கரும்பையொத்த சொல்லும் மின்போன்ற சாயலுமுடைய ஸ்திரீகள் இனிமையான மொழிகளால் இதற்கொப்பில்லையென்று சொல்லத்தக்க பொற்றாம்பாளத்தில் வைத்துக்கொண்டு கொடுப்பார்கள். மேலும் அவர்களுக்கு மாலை தொங்கவிட்ட வெள்ளைக்கொடை யெடுப்பார்கள், வெண்சாமரை வீசுவார்கள், ஆலவட்டம் பிடிப்பார்கள், ஆடுவார்கள், பலர்பாடுவார்கள், மென்மேலுஞ் சிறப்புடனே யிருந்து வாழ்வெனவென்று வாழ்த்துவார்கள், மிக்க அட்சதைக்கொண்டு இறைப்பார்கள், இப்படியாக அம்பைப்போலொத்த கண்களையுடைய தேவரம்பையர்கள் உபசரிப்பார்கள். புண்ணியவான்களா யிருக்கப்பட்டபேர்கள் இயமதர்மராஜனுடைய பட்டணத்து வீதிவழியே போகிறபோது அந்தப் பட்டணத்திலுள்ள குற்றமற்ற மங்கையர்களிந்தப்படி யனேகம் வேடிக்கைகள் நடத்தி அதிக சந்தோஷத்துடனே கூடவந்து இயமதர்மராஜ னிருக்கப்பட்ட அரண்மனை வாசலுக்குமுன்பாகக் கோடிசூரியனும், கோடிசந்திரனுமொன்றாகக் கூடினதுபோல பிரகாசிக்கப்பட்ட தங்கள் விமானத்தை விட்டுக் கீழேயிறங்கி ஆதாரானவர்கள் இயமதர்மராஜன் சபைக்குப்போய் தெண்டம்பண்ணி சுவாமி தேவரீர் ஆக்ஞாபித்த பெரு

மையுள்ள பணிவிடையைத் தலைமீதேற்றி பூலோகத்திலே தர்மஞ் செய்த புண்ணியவான்களை நன்மையோடு அழைத்துவந்தோம், அவர்கள் மேகம் தவழும் நமது அரண்மனை வாசற்புறத்தில் நிற்கிறார்களென்றார்கள். பின்னுந் தூதர்கள் சந்தனமுதலிய உபசாரங்கள் நடந்ததென்று சொல்லக்கேட்டு மிகுந்த சாந்த குணத்துடன் சூரிய குமாரனான இயமதர்மராஜன் தனது சிங்காதனத்தைவிட்டெழுந்திருந்து கோபுரவாயல்மட்டும் நடந்துவந்து அவ்விடத்திலேநிற்கிற தர்மவான்களையெல்லாம் தனித்தனியாகப் பார்த்து உங்களை இவ்விடம் நான்பார்க்கப் புண்ணியஞ்செய்தேனென்றான். இவ்வாறு சொல்லிய பிறகு இயமதர்மனானவன் சித்திர குப்தரென்கிற கணக்கரிருவரையும் பார்த்து இங்கே நிற்கிற இவர்கள் பண்ணின புண்ணியங்களையெல்லாம் நீங்கள் சொல்லுங்களென்றுகேழ்க்க, சித்திர குப்தர்கள் தங்கள் கணக்கையெடுத்து தேவாமிர்தங் கொண்டவர்களைப்போல் களிப்புடன் சொல்லலுற்றார்.

### சித்திரகுப்தன் புண்ணியவான்களுடைய தர்மத்தைச் சொல்லுதல்.

இயமதர்மராஜனே கேளும், இவர்தனக்கு எந்நாளு மபகாரஞ்செய்தபேருக்கு அன்புடனே உபகாரங்களைப் பண்ணினவர், இவர் பெருமையுள்ள தன்னிடதாரமேயல்லாமல் அயலார் மனைவிகளை தேடுதற்கரிதாகிய தாயைப்போலெண்ணுங் கீர்த்தியை வாய்ந்தவர், இவர் சிவத்தலத்திற்கோ ரழிவுவாராமல் செய்தவர், இவர் கோபுரத்திலே நித்தம் தீபமேற்றி வைத்தவர், இவர் கோபுரத்திற்கு பொன்னாலே குடம்செய்து வைத்தவர், இவர் ஒருத்தர் செய்யும் தர்மந்தவறாமற்படிக்கு நிறைவேற்றினவர், இவர் சிவனுக்கு நந்தவனம் வைத்தவர், இவர் அதற்குருசிபெற்ற ஜலமுள்ள கேணிவெட்டிவைத்தவர், இவர் சிவபக்தருக்கு ஆபத்தை நீக்கினவர், இவர் நெய்யுடனே புதுமையான தீபதானம் செய்தவர், இவர் கங்கை முதலாகிய தீர்த்தங்களிலே முழுகிவாருங்களென்று அவரவர்கள் கையிலே மங்காத பொருள்களைக் கொடுத்தவர், இவர் அகவிலை குறைந்த பஞ்சகாலத்திலே எல்லாருக்கும் அன்னங்கொடுத்தவர். இவர் பர்வத முதலான சிவஸ்தலங்களுக்கு திடமாகப் போகிறவர்களுக்கு பாதரட்சை கொடுத்தவர், இவர் நெடுந்தூரமான வழிகளினிடையிலே மாறாத நிழலுண்டாகச்சாலைவைத்து இடரில்லாமல் அன்னதானப்பண்ணினவர், இவர் ஞானமுள்ள பெரியோர்களை தளராதபடிக்கு இரக்ஷித்தவர், இவர் நல்ல சற்பாத்திரமானவர்களுக்குத் தானங்கொடுத்தவர், இவர் பய

ந்து அடைக்கலம் வந்தபேர்களுக்கு அந்தப்பயத்தை நீக்கி இன்பங் கொடுத்தவர், இவர் பாதந்தேய சிவஸ்தலங்களுக்குப் போன நல்லோர், இவர் தடாகங்கள், திருக்கோவில்கள், சோலைகள், விளங்கவுண்டாக்கினவர், இவர் அறிவுள்ள ஒருவனையழைத்து தன் மகளை கன்னிகாதானமாக பாணிக்கிரஹணம்பண்ணிக் கொடுத்தவர், இவர் வேதங்கற்ற பிராமணரை இரக்ஷித்தவர், இவர் யென்றைக்கும் இடபத்தையுடைய பரமேஸ்வரன்முன்னே ஆலாத்தியை எடுத்தவர், இவர் அன்புடன் உபவீதி[illegible]பாணம் செய்துவைத்தவர், இவர் தாய், தகப்பன், சுற்றத்தார் கோப[illegible]பிறக்க என்னபிழை செய்தாலும் அவற்றையெல்லாம் பொருத்திருந்தவர், இவர் கோதானம், பூதானம் சொர்ணதானம், நவரத்தின தானங்களென்று சொல்லப்பட்ட தானங்களை தாழ்வில்லாமல் பண்ணினவர், இவர் தர்மத்தோடே சம்பாதித்த பொருள்களை நல்லோர்பெரியோர்களைப் பார்த்துக் கொடுத்தவர்கள், இவர் புண்ணியகாலங்களிலே சந்தோஷமாய் தவம் நோன்புகளைச் செய்தவர், இவர் தாய்தகப்பனை தினந்தோறும் பணிந்தவர் இவர் சிநேகிதர்கள் தரித்திரமடைந்தபோது தன்னுடைய செல்வங்களையெல்லாஞ் சந்தோஷத்துடனே பங்கிட்டுக் கொடுத்தவர், இவர் ஞானமுள்ள பெரியோர்களை சிவஸ்தலங்களிலே யிருக்க மடங்கட்டிக் கொடுத்தவர், குற்றமில்லாத பெரியபுண்ணியத்தின் வழியிலே எக்காலத்திலுந் தப்பாமல் நடந்துக்கொண்ட மகாபெரியவரிவர், மேலான சிவசரணர்வந்தால் எதிராக வெழுந்திருந்து சந்தோஷத்துடனே கும்பிட்டுநிற்கிற மகா நல்லவர்களிவர்கள், இவர் சிவபூசைக்கு வேண்டும்பண்டங்களைக் கொடுத்துநடத்திவைத்த நீதியுமன்புமுள்ளவரிவர், சிவபுராணம், சிவகதை, படிக்கிறபொழுது அவலமான தூக்கங்கொள்ளாமல், மெத்தை தழுவணையிலே சாயாமல், வேறொரு கவலை கொள்ளாமல் சிவகதைமேலாசையாய் அறிவுபொருந்தி மனதுஞ் சரீரமும் பூரிக்கத் தினந்தினம் சிவகதை கேட்டிருந்த நல்ல நடக்கையுள்ளவரிவர்களென்று சித்திரகுப்தர் என்னும் கணக்கர் வாசித்துக் காண்பிக்க, அப்பொழுது இயமதர்மனானவன் தர்மவான்களையெல்லாம் பார்த்து தன்கையைக் குவித்து கும்பிட்டு கிரீடமுடியையசைத்து சந்தோஷத்துடன் காலதண்டந்தாங்கிய இயமதர்மராஜன் சொல்லுகிறார்.

இனிமையான தர்மஞ்செய்த நீங்களிவ்விடத்தி லெழுந்தருளுவதற்கு நான் முன்னே என்ன தவங்களைச் செய்தேனோ! அந்தியகாலத்திலே என்னுடைய தூதர்கள் உங்களைவந்தழைக்க இங்கே வந்தீர்

கள் நன்மையுள்ள நீங்கள் வழிநடைப்பட்டு இளைத்தீர்களோ அவர்கள் செய்த கொடுமையை பொறுக்கவேண்டுமென்று சொல்லி அத் தருமவான்களை யெல்லாம் பிரகாசமான இரத்தினங்களினாற் செய்த விமானத்திலேற்றித் தங்கவளையலுஞ் சிவந்த கனிவாயுமுள்ள தேவ ரம்பைகளை அவர்களுடன் கூட்டி குற்றமில்லாத இயமதர்மனானவன் குறைவில்லாத சொர்க்கலோகத்திற்கு அனுப்ப, அவர்கள் சந்தோஷத்துடனே விமானமேறிப் போகிறவேளையில் சொர்க்கலோகத்திலுள்ள தேவர்களெதிர்கொண்டு அழைத்துப்போய் காமதேனு கற்பகவிருக்ஷம் சிந்தாமணிமுதலான இஷ்டகாமியங்களைக் கொடுத்து ஏவற்பணிவிடை கேழ்க்க, தாங்கள் மனது சந்தோஷத்துடனே அந்தத் தேவலோகத்தில் என்றைக்கும் நித்திய கலியாணகரமாக வீற்றிருப்பார்கள்.

இப்படி தர்மவான்களுடைய செய்கைகள் எல்லாவற்றையு மினிமையாக கேட்டு சந்தோஷத்துடனே தர்மப்பிரசங்கமுனியானவர் சொல்லக்கேட்டு மகாதபசிகளான முனிவர்க ளெல்லாம் அன்பென்னும் கடலிலே மூழ்கினார்கள்.

## பெரியாரைத் துணைக்கொள்ளல்.

வேதம் நான்கு, சாஸ்திரம் ஆறு, கலைக்ஞானம் அறுபத்து நான்கு, உபநிடதம் முப்பத்திரண்டு, புராணம் பதினெட்டு, ஆகமாதி முதலிய இயாவு முணர்ந்த பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும். எந்நேரமும் அவர்களுடைய தரிசனமும் சவகாசமும் பெறவேண்டும். வீண்காலம் போகாமல் காலக்ஷேபம் பண்ணவேணும். நல்ல நீதி நெறி முறைமைகளைத் தூண்டிக் கேட்கவேணும். தருமம், தானம், தயை, சாந்தம், இவைகளையெல்லாங்கேட்டுத் தெரிந்துக்கொள்ளவேணும். மந்திராலோசனையுடன் தன்மதியையுங் கூட்டிப்பார்த்து இது சரியோ அல்லவோவென்று பெரியவாள் காதிவிட்டு அவாளுடைய வாக்கினால் பெற்றுக்கொள்ளவேண்டும். மேலும் பெரியோர்கள் கிடைப்பதரிதாயிருக்கும். அப்படி யிருந்தபோதிலும் எந்தப்பாடாகிலும்பட்டு சம்பாதித்துக்கொள்ளவேண்டும் அதேனென்றால் பெண்டுபிள்ளை பந்து மித்திரர் முதலான பேர்களெல்லாம் இவனுடைமைச் செல்வத்தை சாப்பிடுவார்களேயல்லாமல் இவனைக்கடைத்தேற்றுவாரில்லை. இவனுக்கொரு ஆபத்து வந்ததானால் தாங்களுங் கூட யிருந்து அழுவார்கள் அல்லது தூரப்போய் விடுவார்கள். நீர்நிறைந்த குளத்தில் பக்ஷிகள் சேர்ந்திருக்கும், நீர்வறண்டால் நெடுந்தூரம் பறக்கும்.

அதிலிருந்த தாமரைகளோ நீருடனிறக்கும் நீர்சுரக்கும்போது சுரக்கும் அதுபோல் பெரியோரைத் துணைப்பற்றி யிருந்தால் நல்லகேள்விகளினாலும் சாஸ்திரப்பயிற்சியினாலும், கியானோபதேசமாய் திடசித்தங்கொண்டு செய்வநிர்ணயந்தெரிந்து போகாதிவிஷயங்களிற்புத்தி கெட்டலையாமல் நிலைபெற்று நெறிபற்றி நன்மையைப்பெறலாம்பெரியோரென்பது எந்தவர்ணத்திற்பிறந்திருந்தாலும் அவர்களுக்குச்சாதிபேதமிராது படாடம்பங்காட்டாம லிருப்பார்கள். நன்மை தீமைகளை சரியாய் நடத்துவார்கள். தருமமும், சத்தியமும், தவறார்கள். அத்தன்மையாகிய தெளிவுடையவர்களை அறிந்துக்கொண்டு அவர்களைவிட்டுப்பிரியாத இராஜனிருப்பானாகில் அவனுக்குச்சகலகாரியங்களும் வெற்றியாம். அப்படிக்கில்லாமற்போனால் உண்டத்தையுண்டு உடுத்ததையுடுத்து கண்டத்தைக்கண்டு களித்ததைக்களித்து கேட்டதைக் கேட்டுக் [illegible] பூமிக் கிலேசத்திலழுந்தி, பெண்டு பிள்ளை பண்டு பதார[illegible]ங்களிலே பந்தப்பட்டு ஆத்மக்கியானமில்லாமல் ஆணவமா[illegible]யை காமியத்திலே தோய்ந்து ஐம்புலன் வழியேற் பாய்ந்து ஆறுபகையாற் காய்ந்து மண்ணாசை பெண்ணாசையை மறந்து மாய்ந்து போய்விடுவான். ஆனதால் இப்பூலோகத்தில் பெரியவர்களுக்குமிஞ்சின பதார்த்தமில்லை. உலகமென்பது உயர்ந்தோர்மயமா யிருக்கின்றது. ஈஸ்வரன் விளையாடுகிற இந்த ஜகத்தானது அர்த்த பெரியவர்களுக்காகவே, மற்றபேருக்கல்ல, அவர்கள் நிமித்தம் ஜகதீசன் செய்யும் நன்மைகளெல்லாம் பூமியின் குணம்போற்புரிந்து, ஜீவராசிகளெல்லாம் பிழைக்கின்றார்கள். இதனை,

ஔவையார்.

"நெல்லுக்கிறைத்த நீர்வாய்க்கால் வழியோடி
புல்லுக்குமாங்கே புசியுமாம்—தொல்லுலகில்
நல்லாரொருவ ருளரேலவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யுமழை."

(என்பதனாலுணர்க)

அதுபற்றி பிரபஞ்ச சுகபோக வாழ்க்கையில் வைத்திருக்கிற பேராசையைப்பார்க்கிலும் பெரியவர்கள்பேரில் அதிக அன்புவைத்து அவர்கள் தன்னிடத்தில் விருப்பமாக யிருக்கும்படிக்குப் போற்றி நடந்துக்கொண்டால் அவர்கள் எந்நேரமுங் கூடியிருந்து திவ்வியக்கியானந் தெரிவித்து சாஸ்திரக்கருத்தையேற்றி சஞ்சலச்சித்தத்தை மாற்றி அக்கியானவிருளைபோக்கி விடுவார்கள். பெரியவர்களின்கேள்வியும் சவகாசமும் இல்லாமற்போனால் இராஜனுக்கு எத்தனை பல

மிருந்தாலும், மற்றவருக் கெத்தனை செல்வ மிருந்தாலும் உண்மைப் பொருள் தெரிந்து ஒருபோதுங் கதிபுகமாட்டார்கள். பின்னும் முன்னும் பிறவிக்கிடமாய்விடும். இவைகளைப்பற்றி இராஜனுக்கு துணை வலியும், தோள்வலியும் கேள்வலியு மிருக்கவேனும், துணைவலி யில்லாவிட்டால் தோன்றல் பொருட்படமாட்டான். ஆகையால் ஒவ்வொருவரும் பெரியோரையடைந்து நன்மார்க்கம் பெறவேண்டும்.

## கொல்லாவிரதம்.

உலகத்திலே தருமங்களுக்கு அளவில்லை எல்லாத்தருமங்களுக்கும் பிரதானமானதும் விரதங்க ளெல்லாவற்றிலும் முயர்ந்ததுமாகியது கொல்லாவிரதம். இதிதான் தருமங்களுக்குத் தலையாகும். ஜீவ யிம்சை செய்யில் அதிபாபத்திற்கு வேராகும். மனத்தி னினைந்தாலும் வாக்காலுணர்ந்தாலும், பிடித்தாலும், அதட்டினாலும், நாவுக்குருசியாய்த் தின்றாலும் கொலைப்பாவம் வரும், மனோவாக்கு காயங்களினால் வருகிற பாவமிதுதான். இதனை,

பட்டினத்தார் பாடல்.

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக்கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பரதேசிகனே." (என்பதனாலுணர்க)

இதுகளில் நன்மை தீமையை யறிந்த பேரறிவுடையோர்கள் நாவின் ருசிக்காகநாடி பொரித்தும், அவித்தும், புகைத்துச்சமைத்தும், புசிப்பது பெரும்பாவத்திலும்பாவம் அற்பவுடல் பருக்கவும், பலக்கவும், பாலிக்கவும், பூரிக்கவும், கொழுக்கவும், தழைக்கவும், நினைத்து மகிழ்வதை நீக்கி விடுவாராகில் நிலைத்த நெடுநாளீங்காப் பாவமுநீங்கும். இதனை,

நான்மணிக்கடிகை.

"இனிதுண்பா னென்பா னுயிர்க்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன்." (என்பதனாலுணர்க)

தாமேகொன்றாலும், தின்றாலும், ஒருவரால் கொல்லச்சொன்னாலும், கொலைசெய்தவ ரிடத்திற் கொண்டுண்டாலுங் கொடும்பாவமாம். (விலைகொடுத்து வாங்கினால் எப்படிபாவம் வருமென்றாலோ)

யாவருங் கிரயத்திற்கு வாங்காவிட்டால் எவர்களு முயிரை மாய்க்க மாட்டார்கள் எல்லாவற்றிற்கு மூலம் மாம்சம் சாப்பிடுகிறவர்களே யாம். ஆதலால் ஊன் புசிப்பதை ஒழிப்பதுவிரதம். * காப்பதுவிரதம்.

திருவள்ளுவநாயனார்

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்.

காடே புலன், கெட்ட புல்லறிவாளர் வயரு, மிருக முதலிய மாம்ஸங்களுக்குச் சுடுகாடாகும்.

நீதிநெறிவிளக்கம்.

"கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார
களவொன்றோ வேனையவுஞ் செய்வார்—பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றெனசெய்யார்
காமங் கதுவப்பட்டார்." (என்பதனாலுணர்க.)

இப்பேர்ப்பட்ட சாஸ்திரப்பழக்கத்தினாலும், சாதுக்களின் வழக்கத்தினாலும், விவேக சகாயத்தினாலும் வெறுத்து விட்டால் மறுத்த தருமம் வகுக்கவேண்டியிராது. நம்மைப்போல் உயிரென்றும் நாதவிந்து சகிதமென்றும், பசுபதியாதன் பரிபூரணமாய் நிறைந்திருப்பதென்றும் பட்சம்வைத்து ஜீவகாருண்ணிய இச்சைவைத்து கண்டமட்டிற் கண்டருசியென்றும் அபாற்றிப்பியென்றும் அறிவாலறிந்து வெறுத்து விட்டால் புலால்மறுத்தலென்றும் விதியைவிதித்த மகாபுருடனாவார்கள்.

கபிலரகவல்.

..........................................

இன்புறுநாளுஞ் சிலவேயதாஅன்று
துன்புறுநாளுஞ் சிலவேயாதலால்
பெருக்காறொத்தது செல்வப்பெருக்கான்
திடிகரையொத்த திளமையிடிகரை
வாழ்மரமொத்தது வாழ்நாளாதலால்

..........................................

முன்னோருரைத்த மொழிதவறாமல்
எந்நாளாயினு மிரப்பவர்க்கிட்டுப்
புலையுங்கொலையுங் களவுந்தவிர்ந்து
நிலைபெறவறத்தி னிற்பதையறிந்து
ஆணும்பெண்ணு மல்லதையுணர்ந்து
பேணியுரைப்பது பிழையெனப்படாது
சிறப்புஞ்சிலமு மல்லது
பிறப்புநலந்தருமோ பேதையீரே.

---

* காப்பது விரதம் ஐம்பொறிகளினாலுங் குற்றங்கள் வரவொட்டாமற் காப்பது விரதம்.

மேலும் ஜனனங்கள் சைவம் வருமாகில் நல்வினைப் பயனை. நன்மையை நாடி இச்சென்ம முதல் நடத்தினால் பெரிய பிரயோசன மாகும்.

### ஆசாரக்கோவை.

நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டும்.
சொல்லிய வாசார வித்து.

கடினமான புலாலை மறுத்தபேர்கள் நால்வகைப் பிறப்பு எழுவகைத் தோற்றமாகிய எண்பத்து நான்குலட்சம் யோனிபேதங்களியாவுங் கடந்து பிறவி சாகரத்தையு நீந்திக் கரையேறி சத்கீர்த்தியங்களாகிய எக்கியங்க ளெல்லாம் முக்கியமாகப் பண்ணிய பலனைப் பார்க்கிலும் கண்ணியமாகிய அதிகப் பலனை பெறுவார்கள். புலால் பிறவிக்குவித்து, ஊன் உயிருக்குச் சுமை, மாம்ஸம் உண்ட உடல் நரிக்கு, நாய்க்கு, கழுகுக்கு, காக்கைக்கு, பொதிச்சோறு இதைக்கருதி நன்றாய் யுணரவேண்டும் யாக எக்கிய கீர்த்தியங்களுக்கு ஜீவன்களுடைய வபையெடுத்து மந்திரார்த்தங் களினால் ஓமம்புரிந்து தேவதைகளுக்கு அக்கினி முன்னிலையில் திருப்தி பண்ணிவிட்டு சிந்தை களிப்பதாகையால் வந்ததோஷமும் வழி விலங்கிப் போகும். பிதுர்க்களுக்கும் அவ்வாறே வேதவிதிப்படிக்கு நிவேதனம்பண்ணலாகும், குடிகளிடம் பயிர் முதலிய உயிர்களுக்குந் தவசிகளுக்கும் இடையூறில்லாமல் வேட்டையாடுவது வேந்தருக்கு முறைமையாதலால் பழி பாவமில்லை. வேடர்கள் குலாச்சாரதருமத்தைக்கொண்டு திரிவதனால் குற்றமில்லை. சாத்தேயமென்று சம்மதமானதொன்று, அதர்வண வேத பகுப்பினால் யாமளைநூலின்படி இந்திர மந்திர சம்மந்தமான தேவதைகளுக்குப் பிரார்த்தனைசெய்து பலியிடுவது மந்திர வேதவ சார்ப்பிதமாம் வழக்கில்லை, வேதத்தில் விதித்தவிதிவழிநடப்பார்க்கு வேங்கியமில்லை அந்நிய தேகத்தைப் போஷிக்குநிமித்தம் ஓராத்மாவை அனித்தியஞ்செய்தால் அறிவாலறிந்த அக்கிரமமென்று அந்தகன் தண்டிப்பான். (முற்பகற்செய்தால் பிற்பகல்விளையு மென்னும் பெரியோர்வாக்கியத்திற்கிணங்க) எவனெந்த வுயிரை எவ்வாறு கொன்றானோ அவனை அந்தவுயிர் அவ்வாறு மறுஜனன மெடுத்து வந்து கொல்லும். இதனை,

## பட்டினத்தார்.

"கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன." (என்பதனாலுணர்க)

இன்னும் இதுவேதத்தில் உயிர்வதைப் பிராகரணத்திற்சொல்லும் ஆதலால் யாவரும் பழிக்குடன்படலாகாது. தெரிந்தவன் எப்போதும் சகலசீவன்களையுந் தன்னைப்போனினைந்து பாதுகாப்பான். நற்கதிவேண்டினபேர் நாற்றமுள்ள ஊனை மறுப்பார்கள். துற்கதி விரும்பினோர் உயிர்தொலைத் துண்பார்கள். மேலான தவத்தைச்செய்து வேள்வி முடித்தவர்களானாலும் அவர்களுக்கு உயிர்வதைசம்பந்தமு ஊனருந்தும் வேதை இஞ்சித்து வருமாகில், துன்பப்படுத்தி நரகத்தாவிற்றள்ளும், அப்பால் தலையெடுக்கமாட்டான். அப்பேர்ப்பட்ட பொல்லாங்கான காரியமானதையெண்ணி எல்லாந்துறந்த பெரியோர் உயிரெல்லாந் தானென்றிருந்தார்கள். இதன்றியும் பூமியிற்றோன்றிய இலை,காய்,கனி,பதார்த்தங்களைச் சொல்லப்போகாது, மரக்கறிகளுக்குச் சீவன் உண்டாயிருந்தாலும், மற்றவைகளுக்கு ஈரறிவு நான்கறிவுடையது மேலும் இவைகளுக்கு அவயவம் மேற்கட்டியிருக்கிறது. இலை காய் கறிகளுக்கு மூக்கு நாக்கு முதலிய அவயவமும் இரத்தம், மாம்சம், சுக்கிலம், சுரோணிதமுமில்லை ஊனு. தண்ணீரென்று மாத்திரமுண்டு, அதுவும் வெப்புநீராம். இவைகளை அறுக்கும் போதும், பிடுங்கும்போதும், தறிக்கும்போதும், பதைபதைப்பு துடிதுடிப்பு முதலிய சிவப்பு இரத்தம் பெருகவுமில்லை உபத்திரவுமில்லை தேவதாயோக்கியம் வேதங்களில் விளங்கியிருப்பது. இந்த வஸ்துக்களெல்லாம் தெய்வப்பிரீதியென்று தெரிந்தேயிருக்கிறது. எல்லாம் ஈஸ்வரார்ப்புதமென்று பரித்தல் பாபமில்லை. சர்வேஸ்வரன் சானித்தியமானதால் தானென்றும், நீயென்றும், அவனென்றும், இவனென்றும், உவ்வென்றும் பேசாமல் அற்றிருக்கின்ற அத்விதியாகிய சகலமும் நாசமாயிருப்பவர்களுக்கு காய்கறிகளிலேயுஞ் சீவனுண்டென்றுசிந்திப்பது தருமம். மற்றவர்கள் சமையற்செய்து சாப்பிடலாம், இதைப்போல் மாம்ஸத்தை ஈஸ்வரார்ப்பிதம்பண்ணினாலும் வருந்தித்தொழுது அழுதாலும் உயிர்வதைவிடாது,பாபம்நீங்காது. அதேனென்னில் உதிரமாம்ஸ சம்பந்தமாகிய உடம்பு, ஆடு, மாடு, பன்றி கோழி, குருவி, நீர்வாழ்செந்து, மச்சம் பட்சிகளும், உதிரம், நிணம் கொழுமை, நெய்ப்பசை யுள்ளது. தன் பெரியதேகத்தில் ஒரு சிறிய முள்ளுணைத்தால் துன்பமும், துயரும், பிரயாசமும்,தெரியுதல்லவா

அதறிந்திருந்தும் தன்னைப்போல் தாதுக்களுடன் சேர்ந்த உயிர்ப்பிராணியைக் கொல்ல அறுக்கத்துணிவது அனியாயம் அனியாயம். மகா பாதகமென்று தெரிந்தும் தன்பிள்ளைகுட்டிகள் தரையில் விழுந்தால், காயமானால், இரத்தங்கண்டால், வியாதிநேரிட்டால் பதை பதைக்கிறதைப்போற் பாராமல் தாங்கள் வல்லுயிரென்றும் மற்றவைகள் புல்லுயிரென்றும் மனம்பொருந்திக் கொல்வது தருமமா? பாவமென்று பார்த்தும் பாராமற் செய்கின்றவர்களுடைய வம்ஸம், ஆயுசு, செல்வம், யாவும் பாழ்ப்பட்டுப்போம். ஒரு ருசி பெரிதா? பசி பெரிதா? பாபவசி பெரிதா? யோக்கியமான உயர்ந்தபிறப்பில் கல்வி ஞானமுள்ள மானிட ஆக்கையில் வந்தும் சண்டாளத்துவம் பெற்றார்கள். பூததயை, பசியாதாபம், ஈவு; இரக்கம் இல்லாதபேர்களை மனிதரென்று மதித்தபேருக்கு மாளாத் துன்பமும், மீளாநரகமுமுண்டாம். புலால் மறுத்துப் பெரியோராகித் தவம்புரிந்து மோட்சமடைந்த சாதுக்கள், சிவன்முக்தாள், அநேகமுண்டு. ஆதலால் ஜீவயிம்ஸை கூடாது அப்பேர்ப்பட்ட உத்தமர்களை எல்லாவுயிருங் கைகூப்பிவணங்கும். சுகப்பிர்மம்போலாவான்.

பூர்வம் இவ்வுலகத்தை ஒருகுடையிலாண்ட சுவாயம்பு மனுவானவர் மார்க்கண்டேயரை வணங்கி புலால் மறுக்கற் குறித்து கேட்டார் அநேகங்கோடி ரிஷிகளும் மார்க்கண்டேயரும் இவ்விதமாகவே சொன்னார்கள். ஆதலால் புலாலை மறுக்க வேண்டும் அதனால் ஆயுசு, செல்வம், கீர்த்திமுதலிய மோட்சமு முண்டாம். மனித ஜென்மத்திற் பிறந்தும் இரக்கப்படாமல் ஊன்புசிக்க விரும்பிய பேர்கள் இராட்சச கிர்த்தியத்திலிருந்து நாசமுறுவார்கள்.

பூர்வம் தேவர்கள் பெரும்பாவமென்று வேதாகமங்களினாற் றெரிந்து புலாலை மறுத்தார்கள். பிறகு இராக்கதரை வென்று ஜெயம் பெற்றார்கள். மாம்ஸத்தை நீக்கியலாபம் உடனே சத்துரு ஜயத்தைக் கல்வியில் உண்டாகச் செய்தது. அதனால் தேவர்கள் விசாரந்தீர்ந்து சுகமடைந்தார்கள். தானமும், தவமும், தருமமும், தியானமும், வேள்வியும், ஞானமும், கல்வியும், நற்கருமமும் விடாதியற்றி நாவுக்கு ஊன் உருசி தேடாதகற்றி உயிர்வதை செய்துண்ணாத சொரூபமுடையவர்கள் அங்கம் தங்கமாகும். மேலும் ஒருவேளை மாம்ஸந்தின்னாத பலனும் நூறுவருஷம் தவம்பண்ணிய பலனுஞ் சரியாகும். சில பேர்கள் மாம்ஸத்தை விடாமல் மகா பாவந்தீரத்தக்கதாய் வருடத்